A. M. D. G.

ராவ் சாகிப்

மகாதேவய்யர் சரித்திரம்.

இந்திய கத்தோலிக் சத்யாபிமான சபை,
கன்ஞேன்மென்ற், திருச்சி.

1924.

CR6:4198Wm69
N24
179834

... Industrial School Press, Trichinopoly.

Cum Permissu Superiorum.

Imprimatur:

✠ AUGUSTINUS, S.J.,

Ep. Trichinopolit.

A. M. D. G.

ராவ் சாகிப்

மகாதேவய்யர் சரித்திரம்.

சே. ச. சங். லக்கோம் சுவாமியார்

முதல் நூலாக எழுதினர்.

சே. ச. சங். J. M. ஞானதிக்கம் சுவாமியார்

தமிழ் மொழியில் வழி நூலாக எழுதினர்.

Printed and Published by
Rev. Br. Joseph, S. J., Superintendent,
St. Joseph's Industrial School Press, Trichinopoly.

1924.

Cum Permissu Superiorum.

Imprimatur:

✠ AUGUSTINUS, S. J.,

Ep. Trichinopolit.

விஷய சூசிகை.

பொருள். பக்கம்.

வழிநூன் முன்னுரை	3
முதல் அதிகாரம்: குருவும் சீஷனும்	5
2-ம் அதிகாரம்: வரப்பிரசாதத்தின் வெற்றி ...	9
3-ம் அதிகாரம்: சிறு மந்தை	21
4-ம் அதிகாரம்: கட்டுரை	26
5-ம் அதிகாரம்: ஆயத்தம்	31
6-ம் அதிகாரம்: ஞானஸ்நானம்	35
7-ம் அதிகாரம்: பெருஞ்சோதனை; சிறைப்படுத்தல்.	39
8-ம் அதிகாரம்: சிறைமீட்சி	49
9-ம் அதிகாரம்: இல்லற அப்போஸ்தலர் ...	53
10-ம் அதிகாரம்: உத்தியோகஸ்தர்	64
11-ம் அதிகாரம்: கத்தோலிக்கரின் ஜீவியம் ...	67
12-ம் அதிகாரம்: முடிவு	74

வழிநூன் முன்னுரை.

பெரியோர்களின் சரிதையை வாசிப்பது பெரிதும் பிரயோசன மானது; புத்தியை விசாலித்து சித்தத்தை உறுதிப்படுத்தி அரும் பெருங் காரியங்களை ஊக்கத்துடன் தொடங்கி நடத்த உற்சாகம் ஊட்டும். எத்தேசத்தவர்களாயினும் மகான்களின் உன்னத சீவியம், கடலிலலையும் மாலுமிகளுக்குத் தென்பைத்தரும் கலங்கரைவிளக்கம் போல அறிவைப்பற்றியிருக்கும் இருளை அகற்றி ஞான சுடர் வீசு மென்றாலும், நமது தேசத்திலே பிறந்து வளர்ந்து, நம்மத்தியில் நாமிறங்கும் துறைகளில் இறங்கி நன்மை நாட்டிய கனவான்களின் சரிதமானது, நமது அசமர்த்தத்திலிருந்து நம்மைத் தூண்டி எழுப்பக் கூடிய பெருஞ் சாதனமென்று விவரிக்காமலே விளங்கும். இன்னும் நமது சகோதரரும் சிநேகிதருமாகிய இந்துக்கள், தங்கள் கொள் கையை நாம் படித்தறியாததினால்தான் நமது சத்தியமார்க்கத்தை நாம் மெச்சிப் பேசுகிறோமென்று எடுத்துரைக்கும் குதர்க்கத்துக்கு, சரியான பதில், இந்துமக்களில் அந்தணரொன்றும், சான்றோரொன்றும், தீக்ஷதர்களென்றும் பேர் பூண்டு வேத சாஸ்திரங்களையெல்லாம் ஐயந் திரிபற் கற்றுணர்ந்த கல்வி மான்களே கத்தோலிக் மார்க்கத்தை கைப் பற்றுவதாம். ஆதலால் இத்தகையோர் சரிதையை நம்மைச் சுற்றி யுள்ள இந்துக்களுக்கு எடுத்துப் பேச மிகவும் உதவுமென்று யான் கருதி, சங். லக்கோம் சுவாமியார் ஆங்கிலேய பாஷையில் எழுதிய ராவ் சாகிப் மகாதேவய்யர் சரிதையை தமிழ் வழியில் எழுதித்தர பெரிதும் ஆசித்து, ஆக்கியோனின் அநுமதி கேட்க, அவர் சந்தோஷத்துடன் அளித்தருளினர். அவருக்கு இத்தமிழ் வழிநூலை வாசிப்பவர் நன்றி செலுத்தக் கடன்பட்டிருக்கின்றனர்.

இது முதல்தொடங்கி கடைசிவரை வார்த்தைக்கு வார்த்தை நேர் பாஷாந்தரம் என்று எண்ணவொண்ணாது.

Feast of the Nativity of our Lady, 8th SEPTEMBER, 1923.

J. M. G., s. j.

ராவ் சாகிப்

மகாதேவய்யர் சரித்திரம்.

முதல் அதிகாரம்.

குருவும் சீஷனும்.

தஞ்சாவூர் ஜில்லாவில், நாகபட்டணம் தாலூகாவைச் சேர்ந்த மஞ்சக்குடியென்ற ஓர் சிறு கிராமத்தில் ஸ்மார்த்த பிராமணர் குலத்தைச் சேர்ந்த ஓர் மேலான குடும்பத்தில் 1869-ம் வருஷம் வ. மகாதேவய்யர் பிறந்தனர். இவருடைய தந்தை வைத்தியநாத தீக்ஷதர்; இத்தென்நாட்டிலேயே பெரிய சாஸ்திரியென்று பேரெடுத்து, அப்பக்கமுள்ள இந்துக்கள் எல்லோரும் நேசித்து வணங்கப்பெற்றவர்; பெரும் ஞானத்தையடைய அசுவமேதஞ் செய்தவர்.

மகாதேவன் சிறு பையனாயிருக்கும்போது திருவாரூரில் இருந்த பள்ளிக்கூடத்தில் பையன் படிப்பதற்கேதுவாயிருக்கும்படி, குடும்பம் முழுவதுமே அவ்விடம் குடியேறினார்கள். இப்பள்ளிக்கூடத்திலுள்ள பாடங்களெல்லாம் முடிந்தவுடனே மன்னார்குடி கலாசாலையில் சேர்ந்தார். திருவாரூரிலும், மன்னார்குடியிலும் வருஷம் தப்பினாலும் வகுப்புத் தப்பாதபடி, எல்லாப் பரீட்சையிலும் தேறிக்கொண்டே வந்தார்.

மன்னார்குடியில் பி. ஏ. வகுப்பு கிடையாதபடியினால், 1888-ம் வருஷம், திருச்சினாப்பள்ளியிலுள்ள அர்ச். சூசையப்பர் கலாசாலையைச் சேர்ந்தார். இக்காலத்தில்தான் இவருக்கு இன்னும் 18 வயதாகுமுன்னரே, பிராமணர் வழக்கப்படி, மாஜி உதவி இன்ஸ்பெக்டரான மகா-ா-ா-ஸ்ரீ கிருஷ்ணசாமி அய்யர் சிரேஷ்ட குமாரத்தியான இன்னும் பதினோர் வயதுகூட ஆகாத சௌபாக்கியவதி சரதாம்பாளை மணமுடித்தார். ருதுவாகிக் கலியாண சடங்குகள் நிறைவேறும்வரை குலாசாரப்படி அவள் தன் தாய் வீட்டிலேயே இருந்து வந்தனள். கிருஷ்ணசாமி அய்யர் கம்பீரமான குணமும் விசாலித்த

புத்தியுமுடையவரானபடியால், அப்போதிருந்த கட்டுப்பாட்டையெல்லாம் பாராமல் தன் மகளுக்கு ஆரம்ப பாடம் படித்துவைத்தனர் அதினால் அவள் வாசிக்க எழுதக் கற்று, படிப்பதில் அதிக பிரியங் கொண்டாள்.

தன் தந்தையையும் மூத்த சகோதரனையும் போலவே மகா தேவய்யரும் ஜாதிக்கமைந்த இந்து. இம்மூத்த சகோதரர் காசிநாத தீக்ஷதர்; இந்து சாஸ்திரங்களைப் படித்து வியாக்கியானிப்பதே தன் வேலையாகப் பாவித்து வரும்போது, திருச்சினாப்பள்ளி இந்து கலா சாலையில் வேதம் சொல்லிக்கொடுக்கும் உபாத்தியாயராக நியமகம் பெற்றார். ஆதலால் மகாதேவய்யருக்கும் தன் மதத்தையும் மதாச் சாரங்களையும் படித்தறிய சரியான சமயங்கிடைத்தது. அவரும் இவை களை வெகுவாய்ப் படித்து, எப்பேர்ப்பட்ட படித்த சாஸ்திரிகளோடும் தர்க்கஞ் செய்யும் திறமை வாய்ந்துளார்.

அவர் மனந்திரும்பி அநேகம் வருஷங்களானபின் 1916-ம் வருஷம், அவர் மனந்திரும்பியதற்குக் காரணமேதென்று கேட்டதற்கு, அவர் எழுதின பதிலாவது: "கத்தோலிக் மதம் உண்மையாயிருக்கக் கூடுமென்றும், நான் கத்தோலிக்கனாகவேண்டுமென்றும், முதல் முதல் எனக்கெப்போது பட்டதென்றால், எனது பி. ஏ. பரீட்சைகளுக் குரிய ஆங்கிலேய பாடப்புத்தகங்களைப் படித்துக்கொண்டிருக்கும் போது, 'கிறீஸ்துநாதர் அநுசாரம்' 'அர்ச். அகுஸ்தீன் சங்கீர்த்தனம்' என்ற இரு புத்தகங்களைப்பற்றிப் பேச்சு வந்ததினால், விநோதப் பிரியத் திற்காக, இப்புத்தகங்களை வாங்கி வாசித்தபோதாம். இப்புத்தகங் களை வாசிக்க வாசிக்க என்னிடத்தில் ஓர்வித நூதனமான உணர்ச்சியுண்டாகி, இன்னும் வாசிக்கவும், வாசித்தவைகளைப்பற்றி வேறநேக காரியங்களையறியவும் என்னைத் தூண்டிக்கொண்டிருந் தது. கீஷப்க்ஷண்டர் சென் எழுதிய உபந்நியாசங்களையும், அர்ச். சின்னப்பர் எழுதிய நிருபங்களையும் வாசித்தபின் சேசுவின் நாம மானது எனக்கு வெறுப்பை உண்டாக்கவில்லை. தத்துவ சாஸ்திரி களும், தங்களைத்தானே வேதபோதகர்களாக எண்ணிக்கொண்டவர் களும் உளறும் புத்திக்கு விபரீதமான கொள்கைகள், திருத்தமாய் திட் டமாய் நிச்சயமாய் நிஷ்கருண்யம் செய்யக்கூடிய ஓர் தப்பாத உபாத்

தியாரோ சபையோ இருக்கவேண்டுமென்று காட்டின. சங். மார்ட்டினெற் என்றவர் எழுதிய பிராஞ்சு புத்தகம் ஒன்றும், இன்னோர் பிராஞ்சு தேசத்து ஆக்கியோன் இயற்றிய 'நிலைவரபோதகம்' என்னும் இரு புத்தகங்களும் என்னிடத்தில் வரப்பிரசாதமானது எழுப்பிய நல்லுணர்ச்சியையும் நல்லெண்ணங்களையும் ஸ்திரப்படுத்தின, விசுவாசத்தைத் தூண்டிவிட்டன.

"எனது விசுவாசத்தை அலைக்கழிக்க என் புத்தியில் யாதொரு ஆக்ஷேபனைகள் தோன்றுவிடினும், எனது பெற்றோர் உற்றார் சிநேகிதர்கள் எனக்கு பெரும் இடறலாய் நின்றார்கள். இக்கஷ்டங்களில் என்னைக் காப்பாற்றிவந்தது, தேவ இஷ்டப்பிரசாதம் ஒன்றே. சங். பில்லியார்ட் சுவாமியாரின் ஆலோசனைப்படி, மனந்திரும்புவதற்கு இரு வருஷத்துக்கு முன்னாலேயே இரகசியமாய் சிறு கோவிலுக்குச்சென்று, வேண்டிக்கொள்ளவும் பூசை காணவும் தொடங்கினேன். பின்னால் என்ன சம்பவிக்குமென்று நான் கவனிக்கவுமில்லை, இலௌகிக காரியங்கள் எப்படிப் போகுமோவென்று நான் எண்ணி வருந்தவுமில்லை. சர்வேசுரனுடைய வரப்பிரசாதமானது இப்பேர்ப்பட்ட எண்ணங்களுக்கெல்லாம் என் கண்ணை மூடி, என்னை உந்தித்தள்ளிக்கொண்டே போனது." என்று எழுதினார்.

மகாதேவய்யர், சங். பில்லியார்ட் சுவாமியார் பேரை இங்கெடுத்துச் சொல்ல பலத்த காரணங்களுண்டு; அவருடைய வேதானுசாரத்திலும். நடக்கவேண்டிய விஷயங்களிலும், இவருக்கு உதவி புரிந்தவர் சங். பில்லியார்ட் சுவாமியாரே. அவரே, மகாதேவய்யரின் குரு.

1889-ம் வருஷம் மகாதேவய்யர் மனந்திரும்பும் காலத்தில் சங். பில்லியார்ட் சுவாமியார் சேசுசபையில் குருப்பட்டம் பெறாத சுவாமியாராய் இருந்தார். அவர் சாவாய் என்னும் மாகாணத்தில் பிறந்து, பிராஞ்சு தேசத்து கலாசாலையில் படிப்பையெல்லாம் முடித்துவிட்டு, 19 வயதாகுமுன்னரே இந்தியாவிற்கு வந்துசேர்ந்தார். படித்த இந்தியர்கள் பலரோடு உழைக்கும்வண்ணம் சென்னபட்டணம் சர்வகலாசாலையின் சட்டப்பிரகாரம் படித்து, மெட்றிக்குலேஷன், எவ். ஏ., பி. ஏ., எம். ஏ. என்ற பட்டங்களைப் பெற்றார். இவர் படிக்கும்போது

பிள்ளைகளோடு பிள்ளையாய்ப் படித்து, இந்து மாணவர்களுக்கும், கிறீஸ்துவ மாணவர்களுக்கும் நண்பரானார். இவைகளுக்குப்பின் தத்துவ சாஸ்திரம் படித்து, ஏறக்குறைய இரண்டு வருஷத்திற்கு பி. ஏ. வகுப்பு ஆங்கிலேய பாஷைப் பண்டிதராக அமர்ந்தார். இக்காலத்தில்தான் இவர் மகாதேவய்யருக்கு குருவாய் வந்துசேர்ந்தார். படித்த இந்தியர்கள் மனந்திரும்பவேண்டுமென்ற மனோ ஆவலின் வேகத்தால் இவர் இருதயம் எரியும்; புத்தித் திறமையும் நற்குணமுமமைந்த இந்தின் இளமக்கள் இவ்வாறு ஞான அந்தகாரத்திலும் அறிவீனத்திலும் அமிழ்ந்திக்கிடப்பதைக் கண்ணுற்று அடிக்கடி கண்ணீர் சிந்துவார்; ஆதலால் தன் ஜீவியத்தை எல்லாம் இவர்களை மனந்திரும்பத் தேடுவதில் செலவழிப்பேனென்று தன் இரத்தத்தாலேயே ஓர் பிரமாணம் எழுதி கையொப்பமிட்டு சர்வேசுரனுக்கு வார்த்தைப்பாடு கொடுத்திருந்தார்.

இவரிடம் படித்த ஓர் சிறந்த சத்தோலிக் பழைய மாணவர் இவரைப்பற்றி எழுதிப்போனதாவது: “அவருடைய இனிமையான சாயலையும், ஒளிவீசும் வதனத்தையும், மரியாதையாய் ஓர் பக்கம் சாய்ந்தோ, வருகிறவர் போகிறவர்களுக்கு பதில் உபசாரம் செய்யக் குனிந்தோயிருந்த அவர் சிரசையும் நாங்கள் ஒருக்காலும் மறக்க முடியாது. அவருடைய கள்ளங் கபடற்ற குணமும், ஒளிவு மறைவில்லா வார்த்தையும், தூய்மையும், நேர்மையும், சிறுபிள்ளையைப்போல் பிறர்மேல் காட்டும் நம்பிக்கையும், மற்றவர்கள்மேல் அவருக்குள்ள வாஞ்சையும் உருக்கமும், ஆத்துமங்களை இரட்சிக்கத் தன்னைத்தானே செலவழிக்கவேண்டுமென்று அவருக்குள்ள ஆவலும், அவருடைய பொறுமையும், இனிமையும், யாவருக்கும் உதவி செய்யக் காத்திருக்கும் கிருபையும், அயராமல் ஒழியா ஓயா வேலை செய்துகொண்டிருக்கும் ஊக்கமும், அவருக்குள்ள ஆத்தும ஆவலின் வேகமும் யாருடைய மனதைக் கவரவில்லை? இவைகளைக் கண்ணுற்று அவரை வணங்கி நில்லாதவர் எவரோ? அவருடைய தாராளம் தயைக்குக் கங்குகரையில்லை. மாடப்புறாவுக்குள்ள கபடற்ற நெஞ்சம் அவர்க்குளது; பாம்புக்குள்ள தந்திரமோ அவரிடம் கிடையா. அவர்பேரில் நம்பிக்கைவையாமல் சந்தேகம் கொள்வதாவது, அவர்பேரில் கோபதாபம் கொள்வதாவது கூடாத காரியம். பிறர்மேல்

அவர் வைத்த நம்பிக்கையானது, அவர்மேல் பிறர் நம்பிக்கை வைத்து அவர் சொல்வதைச் செய்யும்படி செய்து, அவர்பேரில் நேசமும் நம்பிக்கையும் மூட்டி, சந்தேகம் திக்கமெல்லாம் ஓட்டினது. அவர் பிராமணர்களை மனந்திருப்பும் வேலையில் சித்திபெற்றால், அவருக்குரிய இக்குணமே அதற்கு முதற்காரணம்.'' என்று புகழ்ந்து கூறியுளார்.

2-ம் அதிகாரம்.

வரப்பிரசாதத்தின் வெற்றி.

1893-ம் வருஷம் ஜூன்மாதம் சங். பில்லியார்ட் சுவாமியார் எழுதிய கடிதத்தில் இந்துக்களின் மேல்ஜாதியானோ மனந்திருப்புதல் ஏறக்குறைய அசாத்தியமான காரியம் என்று வரைந்தபிறகு, எழுதுகிறார்:

''ஆகிலும் இந்துக்களின் மேல்ஜாதியாரை மனந்திருப்புதல் அசாத்தியமென்று அவநம்பிக்கைக்கு இடங்கொடுக்கக்கூடாது. சர்வேசுரனுடைய வரப்பிரசாதம் சர்வ வல்லமையுள்ளது; பின்னால் சொல்லப்போகிறவைகள், நம்பிக்கைக்கு இடங்கொடுக்கின்றன.

''மூன்று வருஷத்திற்கு முன், நான் பி. ஏ. வகுப்புக்கு ஆங்கிலேய பாஷையைக் கற்றுக்கொடுத்து வந்தபோது, கலாசாலையில் படித்துவரும் இந்து மாணவர்கள் வசிக்கும் விடுதியில் ஓர் சிறு கலாபனை நடந்தேறியது; இவ்விடுதி நமது பார்வைக்குள்ளானது. கலாசாலையின் கட்டிடத்துக்குள்ளேயே, எல்லா விதி விலக்குகளையும் மீறி இந்து ஆசார சடங்குகளை நிறைவேற்றினார்கள். இது நடைபெறுவதற்கு தலைமையாய் நின்றவர்கள் எனது வகுப்பு மாணவர்களே. அவர்களில் இருவர் விடுதியை விட்டு வெளியேற்றப்பட்டார்கள். ஆகிலும் குற்றவாளிகளிலெல்லாம் பெருங் குற்றவாளி வெகு தந்திரமாய் தன்னுடைய கிரிகைகளையெல்லாம் மறைத்து ஒளித்து நடத்திவிட்டபடியால், அவனுடைய குற்றத்தை ருசுப்படுத்த முடியவுமில்லை, அவனை வெளியேற்றவும் கூடாமற்போனது. அவன் மகாதேவய்யர் என்று பேர் கொண்ட மத வைராக்கியமுள்ள ஓர் பிராமணன். ஒருதரம் அவ

ளேடு பேசியபின் வீண் பேச்சில் காலம் போக்காதபடி, இனிமேல் அவனைச் சந்திக்கக்கூடாதென்று தீர்மானங்கொண்டிருந்தேன்.

"மேற்சொன்ன சந்தடியெல்லாம் ஒழிந்து அரவம் எல்லாம் அடங்கியபின், இச்சங்கதி நடந்தேறிய சில மாதத்திற்குப்பின், மகாதேவன் என்னை அண்டிவந்து, மத விஷயமான சில முக்கியமான கேள்விகளைக் கேட்டான். அவன் சுயநலம் கருதி இச்சந்தேகங்களைக் கேட்கிறதாக நான் பாவித்தபடியால், என்னிடத்திலிருந்து யாதொன்றும் பெறமுடியாதென்று தெளிவாய் அவனுக்குச் சொன்னேன். நான் பேசும்வரை சும்மா இருந்துவிட்டு, மறுபடியும் தன்னுடைய் கேள்விகளைத் தொடங்கி, தான் நேர்மையான மனதுடனே இக்கேள்விகளைக் கேட்பதாகவும், தன்னுடைய சந்தேகங்களையெல்லாம் தீர்த்து தன் ஆத்துமத்தை இரட்சிக்க உண்மையாகவே ஆவல்கொண்டிருப்பதாகவும் சொன்னான். இரண்டுமாதஞ் சென்றபின்தான் என் சமுசயங்கள் எல்லாம் மறைந்துபோயின; சர்வேசுரனுடைய இரக்கத்தின் மேல் இதுவரை ஐயமுற்றதற்காக என்னைத்தானே நொந்துகொண்டு, இப்பிராமண இளைஞனுக்குச் சொல்லிக்கொடுக்க ஆரம்பித்தேன். அவன் மதவைராக்கியமுள்ளவனென யாவரும் அறிந்திருந்தபடியால், வேதத்தைப்பற்றி என்னிடம் அவன் பேச வருகிறானென்று ஒருவரும் சமுசயங் கொள்ளாததினால், இவ்வலுவல் சுலபமாகவே இருந்தது.

"அவ்வருஷக் கடைசியில் மகாதேவன் பி. ஏ. பரீட்சையில் தேறினான். அப்போதுதான், முதல்முதல் தேவநற்கருணையில் மெய்யாகவே நமதாண்டவர் இருக்கிறாரென்று சொல்லிக்கொடுத்து, உத்தமமனஸ்தாப முயற்சி எப்படிச் செய்கிறதென்றும் கற்பித்து, சுவாமிமார்களுடைய சிறு கோவிலுக்கு அவனைக் கூட்டிக்கொண்டுபோய், வேண்டிக்கொள்ளும்படி இருவரும் முழந்தாட்படியிட்டோம். அந்நேரத்தில் என் உள்ளத்தில் எழும்பின மனக் கிளர்ச்சி எவ்வளவோ இன்பமாயிருந்தது! நாங்கள் இருவரும் வேண்டிமுடித்து எழுந்து வரும்போது, மகாதேவன் சொல்வான். 'சுவாமி, முழங்காலில் இருப்பதற்கு என்னைத்தானே நான் எவ்வளவு ஜெயிக்கவேண்டியிருந்தது. ஆண்டவர் அங்கே மெய்யாகவே இருக்கிறாரென்று நான் விசுவசித்த போதிலும், ஆண்டவருடைய பாதத்தில் நான் விழாதபடி வெகு

பலாத்காரமாய் நான் தடுக்கப்படுவதாக உணர்ந்தேன்.' பேய் தன்னுடைய கையிலிருந்து தப்பித்துப்போகும் ஆத்துமத்தைப் பிடித்து வைக்க பட்ட கடைசி பிரயாசை இதுவே.

"இவ்வாறு முதல்முதல் தேவநற்கருணையைச் சந்தித்தபின், மகாதேவனுக்குக் கொஞ்சநேரமிருக்கும்போதெல்லாம் கோவிலுக்கு வந்து வேண்டிக்கொள்ளத் தவறினவனல்லன். சுவாமிமார்களெல்லோரும் தியானம் செய்துகொண்டிருக்கும் ஓர்நாள் மகா சங். பெஸ் சுவாமியார் கதவை யாரோ தட்டினதைக் கேட்டுத் திறந்து, மகாதேவனைக்கண்டு அதிசயமுற்று நோக்கினார். அவன்தான் லிகதர் வேலை பார்த்து வருவதை மேலிருந்து நடத்திய கலெக்டர் திருச்சினாப்பள்ளிக்கு சில மைல் தூரத்திலுள்ள ஓர் கிராமத்துக்கு தன்னை அனுப்பியிருப்பதாகச் சொன்னான். நாங்கள் எல்லோரும் தியானத்திலிருக்கிறோம், எங்களில் ஒருவரையும் இப்போது பார்க்கமுடியாது என்று சுவாமியார் சொல்ல, நல்லது சுவாமி அப்படியானால், கோவிலுக்குப் போய் வேண்டிக்கொள்ளவாவது உத்தரவு கொடுங்கள் ; திருச்சினாப்பள்ளி வழியாய்ப் போய்க்கொண்டிருக்கிறேன் ; நான் வந்த வண்டிக்கும், நான்போகவேண்டிய வண்டி வருவதற்கும் இடையில் அரைமணி நேரமிருக்கிறது ; இச்சமயத்தில் நான் நமதாண்டவரைச் சந்தித்துப் போவேன் என்றான். இன்னும் ஞானஸ்நானம் பெறாத இவர் பத்தி எத்தனை கத்தோலிக்கருக்குக் கிடையா !

"மகாதேவய்யர் பி. ஏ. பரீட்சையில் தேறினபின் அவருடைய மாமனாருடைய ஏற்பாட்டினால், அதிக சம்பளமுள்ள சர்க்கார் உத்தியோகம் ஒன்று வாய்த்தது ; இவர் ஏற்றுக்கொள்ளுவதுதான் தாமதம் ; ஆனால் இருக்கவேண்டிய இடமோ, கோவிலில்லாத ஊர் ; ஞானகாரியங்களுக்கேற்றதல்ல. இதை ஏற்றுக்கொள்ளலாமா என்று என்னை வந்து கேட்டபோது ; ஆத்துமத்தின் நன்மையை இவர் தேடினால், திருச்சினாப்பள்ளியைவிட்டு வெகுதூரம் போகக்கூடாதென்று சொன்னேன். தாராள குணமுடன் என்னுடைய புத்திமதியை ஏற்றுக்கொண்டு அப்பெரிய உத்தியோகத்தை ஒப்புக்கொள்ளாமல் 15 ரூபாயுள்ள ஓர் சிறு சம்பளத்தில் ஓர் சிறு வேலையைச் செய்யச் சம்மதித்து அதில் இரண்டு வருஷம் இருந்துவந்தார். இது வீரச் செய்

கையே என்று சொல்லவேண்டும். இதற்குப்பின் அவருடைய கருத்து உண்மைதானேவென்று ஒருவரும் சந்தேகிக்க இடமில்லை.''

திருச்சியில் இருவரும் இருக்கநேர்ந்ததால், சங். பில்லியார்ட் சுவாமியாரும் மகாதேவய்யரும் அடிக்கடி சந்தித்துவந்தார்கள். ஊரில் யாராவது ஒருவரோ இருவருமோ இல்லாதபட்சம் அடிக்கடி கடிதம் எழுதிவந்தார்கள். சங். பில்லியார்ட் சுவாமியார் காகித மூட்டைகளில், மகாதேவய்யர் அவருக்கு எழுதிய சில கடிதங்கள் என் கையில் அகப்பட்டன; அவைகள் மகாதேவய்யரில் எப்படி விசுவாசம் வளர்ந்து கொண்டேபோனதென்று காண்பிக்கின்றன. இவைகளில் ஒரு கடிதம் முசிரியிலிருந்து எழுதப்பட்டது.

"முசிரி (திருச்சினைப்பள்ளி ஜில்லா),
17 ஜூன் 1891. மாலை 8.

"பிரியமான தந்தையே,

"கொடைக்கானலிலிருந்து தாங்கள் (தேதியை மறந்துபோனேன்) எழுதிய நீண்ட கடிதம் கைக்கு வந்து சேர்ந்தது. அதற்கு உடனே பதில் எழுதாததைப்பற்றி என்னைப் பொறுத்துக்கொள்ளவும்.

"மூன்று நாளைக்குமுன் என் மனைவி என்னோடு இங்கு வந்து சேர்ந்தாள்; இந்துக்கள் குடும்பத்தில் வழங்கிவரும் கட்டுப்பாடுகளினால் புருஷனும் மனைவியும் பேசுவதுமுதலாய் கூடாதகாரியம் என்பதை தாங்கள் அறிந்திருக்கலாம். என்னுடைய சகோதரனும் அவன் மனைவியும் அவன் இரு மக்களும் என்னோடேகூடத்தான் இருக்கிறார்கள்.

"நான் பிறந்த வேதத்தின் கொள்கைகளையும் செய்கைகளையும் நான் நாளுக்குநாள் அதிகமாய் வெறுத்துவருகிறேன்; நாளுக்குநாளோ உண்மையான மதத்தின்மேல் எனக்குள்ள நேசம் வளர்ந்துகொண்டே வருகிறது. எனக்கு நேர்விரோதமாயுள்ள என் சகோதரனே மெய்மறையை இரகசியத்தில் துவேஷித்துவருகிறார் என்பதும் தங்களுக்குத் தெரிந்த விஷயமே. முதல் துவக்கத்தில் என்னோடு தர்க்கஞ்செய்துவந்தபோதிலும், நான் திருந்தமாட்டேன், அதினால் பிரயோஜனமில்லையென்று கண்டு, அதை விட்டுவிட்டார்.

ஆனால் நான் செய்த குற்றம் என்ன? வெளிச் சடங்குகளில் சிலவற்றை நான் அனுசரிப்பதில்லை. ஆகிலும் இதில் முதலாய் எனது வேதத்தைச் சேர்ந்தவர்கள் அநேகருடைய குற்றத்தில் என் குற்றம் வீசமாகுமா? என் சகோதரன் செய்வதுபோல் நான் செய்யாததுதான் குற்றமாம்.

“இங்குள்ள மற்ற மனிதர்களோ என்னை நல்லவனென்றுதான் எண்ணிவருகிறார்கள். எனது குற்றம் சாவான பாவமாகுமா? சாவான பாவத்தை எனது மதத்தைச் சேர்ந்தவர்கள் துவேஷிக்கிறார்களா? சாவான பாவம் பெருந் தோஷமென்றாலும் அவர்களுக்கொன்றுமில்லை. விபூதியினால் தங்கள் நெற்றியைப் பூசிக்கொண்டு, இருதயத்தில் எல்லா விஷமும் நிறைந்தவர்கள் எத்தனையோபேர்; அவர்களையெல்லாம் ஜனங்கள் மதப்பிரியர் என்றுதானே எண்ணிவருகிறார்கள். வெளி ஆசாரங்களை என் சகோதரர் எவ்வளவுதான் நிறைவேற்றிவந்தபோதிலும், உலகத்தைத் துறந்துவிட என்னைவிட அவர் அதிக தயாராயிருக்கிறாரா? அதுவுமில்லை. அவருக்குத்தான் உலக வாஞ்சை அதிகம் என்று சொல்லலாம். படித்த எல்லா இந்துக்களைப்போல நானும் வெளியில் என் மதத்தைச் சட்டை செய்வதில்லை. ஆனால், உள்ளரங்கத்தில் நான் அதை வெறுக்கிறேன்.

“இரண்டு தினங்களுக்கு முன் எங்கள் வீட்டில் பெரிய வாய்ச் சண்டை நடந்தது. சந்திர கிரகணத்தில் நான் காவேரியாற்றில் குளிக்கமாட்டேனென்று சொன்னதுதான் இதற்குக் காரணம். பெரிய பெரிய வார்த்தைகளை என் சகோதரர் உபயோகித்தார். நானோ அப்பேர்க்கொத்த வார்த்தைகளைப் பிரயோகிக்காதபடி எச்சரிக்கையாயிருந்தேன். என் தகப்பனாரும் அப்போது இங்கு இருந்தார்; இப்போது இங்கில்லை. அவர்கள் என்னைச் செய்யச் சொல்லுவது என்னவென்றால், அவர்களுடைய பழக்க வழக்கங்களைப்போலவே நானுஞ் செய்யவேண்டுமாம். திருநீறால் என்னைத்தானே பூசிக்கொள்ளவேண்டுமாம், (சமயத்திற்குசமயந்தான் கொஞ்சம் பூசிக்கொள்ளுகிறேனே); ஆசாரத்தின் ஒழுங்குகளின்படி வேஷ்டியைக் கட்டிக்கொள்ளவேண்டுமாம்; இதைப் போலொத்த இன்னுஞ் சிறு காரியங்களைச் செய்யவேண்டுமாம்! இவைகளுக்கும் வேதத்திற்கும் என்ன சம்பந்தம்? கற்பையும் நன்னடத்தைக்கு அடுத்த பிரமா

ணங்களையும் நான் அநுசரித்தாலும் அநுசரிக்காவிடினும் அதைக் கவனிக்கமாட்டார்கள். அவைகளைப்பற்றி அவர்கள் கவலைப்படமாட் டார்கள். என்னுடைய பெரும் அக்கிரமம் இன்னதென்று ஏதென்றால் சில கத்தோலிக் புஸ்தகங்களை வைத்திருப்பதும், பெரிய சங்கராசாரி யாருடைய தப்பறையான கொள்கைகளை எல்லாம் அமைதியாய் ஏற்றுக்கொள்ளாமல், என் சகோதரரோடு தர்க்கமாடுதலுமே.

"அவர்களுக்குப் பிரியமில்லாத பிரமாணங்களை நான் பின்பற்று வதற்குக் காரணம் நான் இவைகளை ஆராய்ந்து உண்மையென்று ஏற்றுக்கொண்டதல்லவாம், என்னுடைய ஆசாபாசந்தான் காரணமாம். 'இதுவரையில் தனிமையாயிருந்தான்; இப்போது அவனுக்கு ஓர் மனைவி அகப்பட்டாள்; அவளும் இவனும் அகமகிழ்ந்து வாழவேண்டு மாம், அதினாலல்லவா நமது மதத்தைப் பழித்து நம்மை வீட்டை விட்டுத் துரத்திவிட்டு சுகமாய் இருக்கத் தேடுகிறான். அவனுடைய மனைவியை நேசிப்பதுபோல் அவன் தாயை நேசிக்கிறானா? ரூ. 15 சம்பளம் வந்து விட்டதாம்' என்று இப்பேர்பட்டனவும் இதைவிட இழிவானவையுமான காரணங்களைச் சொல்லி என்னோடு சமர் தொடுக்கிறார்கள். இந்துக்களில் மூன்றேமுக்காலேவீசம்பேர், தங் கள் ஆத்துமத்தை இரட்சிக்கவேண்டுமென்னும் ஏக்கமின்றி சோம் பேறித்தனத்தால் கட்டிக்கொள்ளும் துரோகத்தைவிட என் பாவம் பெரிதா?

"சில அநுஷ்டானங்களைச் செய்து எனது சொந்தக்காரரைச் சந்தோஷப்படுத்துவது எவ்வளவோ சுலபம். இவ்வநுஷ்டானங் கள்மேல் சில மாதத்திற்குமுன் எனக்கு வெறுப்புமில்லை விருப்புமில்லை; பிரயோஜனமற்ற இச்சடங்குகளையும் அநுஷ்டானங்களையும் நான் இப்போது விரோதிக்கிறேன்.

"இக்காரணங்களினிமித்தம் என் சகோதரர் என்னைவிட்டுப் பிரிந்து போவாரோயாகில், என்மேல் பெரும் அபவாதம் வருமே என்று தான் நான் அஞ்சுகிறேன். நான் எப்பேர்ப்பட்டவனென்று உங்க ளுக்குத் தெரியும். மகிமை கீர்த்தி பணத்தின்மேல் எனக்காசை யில்லை; இந்நல்லுணர்ச்சிகளெல்லாம் உங்களால்தான் எனக்கு வந்தன, உங்களுக்குத் தோத்திரம். என் ஆத்துமத்தை இரட்சித்தால் போதும்,

எப்படி ஜீவித்தாலும் பரவாயில்லை. என்னை வெகுவாய்ச் சபித்து, நான் நல்ல வழிக்கு வராதபட்சம் என்னை விட்டுவிடும்படி என் சகோதரருக்குச் சொல்லி, என் தந்தை கடிதம் ஒன்று இன்று எழுதியிருக்கிறார். நான் என் மனைவியோடு ஜீவிக்க ஆசிக்கிறேனென்று, என் மேல் அவர்கள் இவ்வித தப்பிதமான எண்ணங்கொள்ளுதல் என் மனதைப் பிளக்கிறது. இன்னும் அதிகம் சொல்ல என்னால் முடியவில்லை. இக்கடிதம் வெகுவாய் நீண்டுவிட்டது. எனது கெட்ட எழுத்தையும் என்னையும் பொறுத்துக்கொள்ளும். சேசுநாதர் சமாதானம் உங்கள்மேல் வரக்கடவதாக. உங்களிடமிருந்து சீக்கிரம் கடிதம் வருமென்று எதிர்பார்த்திருக்கிறேன்.

பிரிய தந்தையே,
இப்படிக்கு
உங்கள் கீழ்ப்படிதலுள்ள
வ. மகாதேவன்."

மகாதேவய்யர் தனியாயிருப்பதினால் ஏக்கமுற்றிருந்தார். இவருடைய சுற்றத்தாரில் ஒருவராவது, இவர் மனைவிகூட உண்மையான மதத்தின்மட்டிலுள்ள ஆசையை அறிந்து உதவி செய்யவில்லை. தன்கூட விசுவாசத்தில் தோழனாகவும், சிநேகனாகவும் இருக்கக்கூடியவர் யாரென்று நாலாபக்கமும் பார்த்தார். இவர்மாத்திரம் மனந்திரும்புவாரேயாகில், இந்துக்களின் மேல்ஜாதியாருக்குள் விசுவாசம் பரம்புதற்குப் பிரயோஜனப்படாதென்றும், தனக்குதவிக்கும் ஆறுதலுக்கும் ஆள் வேண்டுமென்றும் கண்டுணர்ந்தார். இவ்வுணர்ச்சிகள் இவரை மேற்கொண்டபடியால்தான், மாமனார் வீட்டிற்குப் போயிருந்தபோது தஞ்சாவூரிலிருந்து பின்வரும் கடிதம் எழுதலானார்.

"தஞ்சாவூர்,
12—10—1892.

"சங்கைக்குரிய நேசத் தந்தையே,

"காவேரியாற்றின் கரையோரமாய் நான் இன்று சாயந்திரம் உலாவிக்கொண்டிருக்கும்வேளை நான் யோசித்துக்கொண்டிருக்கும்போது வந்த சில நினைவுகளைத் தாங்கள் வாசித்தறியும்படி எழுதுகிறேன்;

அதற்கு என்னை மன்னியும். பழைய மாணவரின் நான்காம் வருஷாந்தரக் கொண்டாட்டத்தைப்பற்றி வாசித்துக்கொண்டிருந்ததுதான் இவ்வெண்ணங்களை எழுப்பிவிட்டது; இவைகளைப்பற்றி தங்கள் அபிப்பிராயம் ஏதென்று அறிய ஆசிக்கிறேன்.

"நான் என் வேதத்தை விட்டுவிடவேண்டுமென்று தீர்மானங்கொண்டபின், இதை எப்படி நிறைவேற்றுவது என்று எண்ணிக்கொண்டிருந்தேன். இந்தியா முழுவதும் பிரிந்து நின்றாலும், நான் ஒரு நாள் கட்டாயம் திருச்சபையில் சேர உறுதியாய்த் தீர்மானித்திருக்கிறேன். என் மனைவிக்கு இப்பேர்ப்பட்ட தீர்மானம் கிடையாது; அவளுக்கு ஒன்றும் தெரியாது; அவளுக்கு சொல்லித்தரவேண்டும். நான்மாத்திரம் மனந்திரும்பினால், இந்துக்களுக்கு என்ன நஷ்டம், உங்களுக்குத்தான் என்ன லாபம்? இது எனக்கு அநேக தடங்கல்களை இழைக்குமே தவிர, பொது ஜனங்களுக்கு இது ஓர் நன்மையையும் விளைவிக்காது. எனக்கிது நித்திய பாக்கியத்தைத் தந்தபோதிலும், எனக்குப்பின் ஓர் நன்மையையும் செய்யாது. ஒற்றுமையே பலன் என்ற முதுமொழி தங்களுக்குத் தெரியும்; ஆகையினால் இன்னும் என்னோடு நாலைந்து பிராமணர்கள் மனந்திரும்புவது அவசியமென்று எனக்குத் தோன்றுகிறது; தாங்களும் இதை ஒத்துக்கொள்ளுவீர்கள். இதினால் வரும் உலக நன்மையையும் ஆத்தும நன்மையையும் நாம் கணிக்க முடியாது. முதல் முதல் ஒவ்வொருவருக்கும் தனியிலும், எல்லோருக்கும் பொதுவிலும் தைரியத்தைத் தந்து, பிறருடைய நிந்தை பழிப்பை கவனிக்காதபடி திடன்தரும். ஜாதி ஆசாரங்கள்* அப்பப்படியே இருக்கவேண்டுமென்பதுதான் உமது தாற்பரியமாதலால் (தாங்கள் இந்த எண்ணத்தை மாற்றாமலிருக்க சர்வேசுரன் கிருபை செய்வாராக), பரஸ்பர சிநேகத்துக்கு நான் சொல்லும் ஏற்பாடு மகா

* ஜனசமூகத்தை மாத்திரம் சேர்ந்த ஜாதி ஆசாரங்களிலும் தேச ஆசாரங்களிலும் திருச்சபை தலையிடுவதில்லை; முழுவதும் மதார்த்தமான ஜாதி ஆசாரங்களும் தேச ஆசாரங்களும் திருச்சபையின் தீர்மானத்திற்குக் கட்டுப்பட்டன. அதுபோலவே மதார்த்தமும் ஜனசமூகத்தைச் சார்ந்தவையுமான தேச ஆசாரங்களும் ஜாதி ஆசாரங்களும் திருச்சபையின் தீர்மானத்திற்குட்பட்டனவே. எவை ஜனசமூகத்தை மாத்திரம் சேர்ந்த ஆசாரம் எவை மதத்தைச் சார்ந்தவையென்று திருச்சபைதான் துணிவுடன் தீர்மானிக்கலாம். (வ. ஆ.)

தகுதியுள்ளது. ஐந்து பிராமணர்கள் ஒருமிக்க ஞானஸ்நானம் பெறுவார்களேயாகில், இந்தியாவுக்கே இது ஓர் அரிய சம்பவமாகும்; ஜனங்கள் எங்களை பழிப்பதற்குப் பதில், நாங்கள் எங்கள் தீர்மானத்தை மாற்றவேமாட்டோமென்று கருதி, எங்களைப் பார்த்துப் பிரமித்து, எங்களை வெறுக்காமல் எங்கள் புதுக்கொள்கையையும் நடத்தையையும் ஆராய்ந்து பார்ப்பார்கள்; மனம் திரும்பிய பிராமணர்களும் வேதத்தை மறுதலிக்கமாட்டார்கள்.

"பிரிய தந்தையே, ஆள்களைத் தெரிந்துகொள்ளும் விதத்தில் வெகு எச்சரிக்கையாயிருப்பது அவசியமானது. எண்ணிக்கையை மாத்திரம் கவனித்தல் போதாது. சேசுநாதர்சுவாமி அர்ச். சின்னப்பனைத் தெரிந்துகொள்வதற்குப் பதிலாய் அவருக்குள்ள ஆத்தும இரட்சண்ணிய ஆவலில்லாத ஓராயிரம் சீஷர்களைத் தெரிந்துகொண்டாலும், உலகத்தில் பெரும்பான்மையோா கிறீஸ்துவ வேதத்தை அறிந்திருக்கமாட்டார்கள். பின்னல் வரப்போகும் கிறீஸ்துவர்களுக்கு இப்போது மனந்திரும்பும் பிராமணர்கள் அஸ்திவாரமாய் இருக்கவேண்டுமாகையால், இவர்கள் நடத்தைதான் பின்னல் வருகிறவர்களின் நடத்தையின் நன்மைக்கும் தின்மைக்கும் பெரும்பாலும் காரணமாயிருக்கும். மெய்யான ஆத்தும இரட்சண்ணிய ஆவலுள்ள ஆட்கள் இருவர் இருந்தால் போதும்; அவர்களைக்கொண்டே நமது வேலையைத் தொடங்கலாம். முதல் முதல் மனந்திரும்புகிறவர்கள் ஜனசமூகத்தில் ஓர் குழப்பத்துக்குக் காரணமாயிருப்பார்கள்; நான் முன் சொன்ன மனோவேகமில்லாத ஆத்துமங்கள், அஞ்ஞானிகளின் தொந்தரவினாலும் அலட்டலினாலும் அவர்கள் மத்தியில் ஜீவிப்பதினாலும், தடுமாறி கீழே விழுந்துவிடுவார்கள்.

"பற்பல வேஷங்களை மெய்யான பத்தியென்றும் ஞான சுறுசுறுப்பு என்றும் தப்பிதமாய் எண்ணித் தவறிப்போகலாம். இவ்வேஷங்களாவன :— (1) இலௌகீக சந்தோஷம்: இலௌகீக நன்மைகளைக் கருதி, இவைகளை அடையும்பொருட்டு கிறீஸ்துவ மதத்தைக் கைப்பற்றுகிறவர்களிருக்கின்றார்கள்; இவர்களை இரக்கமின்றி தள்ளிவிட வேண்டும். இவர்களை நன்றாய்ச் சோதித்துப்பார்க்க வேண்டும். மனந்திரும்புதலும் இலௌகீக காரியங்களில் முன்னேற்

றழும் ஒன்றேன்று எண்ணுவார்களேயாகில், அவர்களை அகற்றிவிட வேண்டும். இப்பேர்ப்பட்ட மனிதர்களை அறிவது வெகு கஷ்டமான காரியமன்று. (2) அளவுக்கு மிஞ்சின ஆவல்: சமயாசமயத்தில் இவர்கள் உண்மையையறிகிறார்கள்; அச்சமயங்களில், என்ன செய்ய வேண்டுமானாலும் செய்ய இவர்கள் தயாராயிருக்கிறார்கள். இப்பேர்ப்பட்டவர்கள் மனதில் சத்தியம் ஆழமாய்ப் பதியவில்லை; இவர்கள் எதைக் கைக்கொள்ளப்போகிறோமென்றும் எதை விட்டுவிடப்போகிறோமென்றும் சரியாய் உணராமல், ஏதோ ஒன்றிரண்டு சிறு காரியங்களைப் பிடித்துத் தொத்திக்கொண்டிருக்கிறவர்கள். கத்தோலிக் மதத்தின் உண்மையையும் அழகையும், அஞ்ஞானத்தின் பொய்யோடும் அழகீனத்தோடும் இவர்கள் ஒத்துப்பார்க்கவில்லை. வெளியில் இவர்கள் மகா ஆவலுள்ளவர்கள்தான்; ஆனால் பின்னாலிருந்து யாராவது இவர்களைக் கொஞ்சம் தொடுவார்களேயாகில், வழுக்கிச் சறுக்கி தலைகீழாய்க் குப்புறவிழுவார்கள். இப்பேர்ப்பட்ட ஊக்கமும் மனோவேகமும் நீடிக்காது; அது குளிர்ந்துபோனவுடன், முன்னேயைப் போலவே கெட்டவர்களாய்த்தான் இருப்பார்கள், சிலவேளை அஞ்ஞானத்திற்குத் திரும்பவும் போவார்கள். இப்பேர்ப்பட்டவர்களைப் பேய்தான் தூண்டிவிடுகிறதென்று சொல்லலாம். (3) மூன்றாம் வகுப்பாரைக் கண்டுபிடிப்பது வெகு கஷ்டம். இவர்களை நான் யோகிகளென்றழைப்பேன், அபினியை முழுங்கிவிட்டு தலையை ஆட்டிக்கொண்டு இருக்கும் சீனர்களுக்கு நிகராய், பிராமணர்களுக்கும் யோகத்தின் மேலும் தனிவாசத்தின்மேலும் ஆசை அதிகம்; அவர்களுடைய நாசத்துக்கு இதுதான் காரணம் என்றே சொல்லலாம். சில வாலிபர்கள் நெற்றிவேர்வை நிலத்தில் விழ உழைத்து உண்ணுவதற்குச் சோம்பேறித்தனத்தினால் பயப்படுகிறார்கள்; அவர்கள் கிறீஸ்துவ மதத்தில் உள்ள கிரிகா சம்மந்தமான காரியங்களை நன்றாய் உணராததால், ஆத்துமார்த்த காரியங்களின்மேல் ஏதோ கொஞ்சம் ஆசையுள்ளவர்களாய், கிறீஸ்து மதத்தைத் தழுவிக்கொள்ளத் தயாராயிருக்கிறார்கள். அவர்களுக்கு மெய்விவாகம் என்றால் பிடிக்காது; உங்களைப் போல் சுவாமிமார்களாயிருப்பது அவர்களுக்காசை. உத்தமனாவதற்கு எது வழியென்று அவர்களுக்குத் தெரியும்; அவர்களுக்குத் தெரிந்த வழியில்தான் நடப்பார்கள்; புத்திமதிக்கடங்கி நடவார்கள். உங்களு

டைய சபையிலும் கூட்டத்திலும் அவர்களை நீங்கள் ஏற்றுக்கொள்ளா விடில், அஞ்ஞானிகளாய் மறுபடியும் மாறுவதற்கு முதலாய்க் கூச மாட்டார்கள். இவர்களைப்போலொத்த இன்னும் அநேக வகுப்பாருண்டு; இவர்களுக்கு நான் கிழக் கிறீஸ்துவர்களென்று பேர் கொடுத்திருக்கிறேன்; இவர்களை என்னைவிட தங்களுக்கதிகம் தெரியும்.

“நாம் சேர்த்துக்கொள்ளுகிறவர்கள், விவேகமுள்ளவர்களாயும், தாங்கள் ஜெயிக்கவேண்டிய கஷ்ட நஷ்டங்கள் எவையென்று அறிந்தவர்களாயும், கிறீஸ்து மதத்தின் உள்ளரங்கக் கொள்கைகளும் பிரமாணங்களும் எவையென்றும் உணர்ந்து, அஞ்ஞானத்திற்கும் இதற்கும் உள்ள வேறுபாடுகளைக் கண்டுபிடித்து, இவ்வுலக ஜீவியத்தின் கடமைகளை கண்ணை மூடிக்கொள்ளாமல் திறந்து பார்த்து, உறுதியான விசுவாசத்தோடு வேதசாட்சியின் மாணத்துக்கும் அஞ்சாமல், எல்லாக் கஷ்ட நஷ்டங்களையும் கடந்து செல்லத் தீர்மானங்கொண்டவர்களாயும் மத வித்தியாசங்களைப் பாராமல் தங்கள் பெற்றோரை நேசித்து எக்காரியத்திலும் தாழ்மையுடன் சர்வேசுரனுடைய சித்தத்துக்கு பணிந்து நடக்கிறவர்களாயும் இருத்தல் அவசியம். இவர்கள் கலியாணஞ் செய்தவர்களாய், விசேஷமாய் அஞ்ஞான மனைவிகளோடிருக்கிறவர்களாயிருந்தால் நலம். இதெல்லாம் பெருங்காரியம் என்று தாங்கள் சொல்லலாம்; ஆனல் இப்பேர்ப்பட்டவர்கள் வாய்த்தால், எவ்வளவோ பிரயோஜனமுள்ளது என்று தங்களுக்குத் தெரியாததல்ல. ஐந்து பிராமணர்கள் ஒருமிக்கச் சேர்ந்து மனந்திரும்புவார்களேயாகில், இந்தியாவின் சரித்திரத்தில் எழுதக்கூடிய சம்பவம் என்றே இதைச் சொல்லலாம்; பின்னல் கிறீஸ்துவ மதம் பரம்புதலானது இம்முதல் மனந்திரும்பினவர்கள் நடத்தையைப் பெரும்பாலும் பொறுத்தது. முதல் இரண்டாம் நூற்றுண்டின் கிறீஸ்துவர்களுக்கிருந்த மனம் இவர்களுக்கும் அவசியம்; ஏனெனில் இப்படி மனந்திரும்பினவர்களில் ஒருவன் என்கிலும் மறுதலித்தால், மற்றவர்கள் மனந்திரும்புவதற்கு இது விக்கினமாயிருக்கும். இது லூசிபர் சாத்தானுய் மாறினதுபோலாம். என்னைவிட உமக்கு அதிகமாய்த் தெரிந்த இவ்விஷயங்களை உமக்கெழுதுவதைப்பற்றி பொறுத்துக்கொள்ளவும். புதிதாய மனந்திரும்பும் பிராமணர்கள் இந்தியாவில் ஓர் விசேஷ பதவியில் இருப்பார்கள்; அவர்கள் தங்கள் பத்தியாலும் நன்னடத்தையாலும் ஓர்

ஒளியைப்போல் விளங்கவேண்டும்; தப்பினுல், இடைவிடாத வெட்கத்துக்குக் காரணமாய் நிற்பார்கள். கிறீஸ்துவ மதத்தின் உண்மையையும் கொள்கைகளையும் அவர்கள் சரிவர அறியவேண்டும்; அல்லாவிடில் சேசுசபைச் சந்நியாசக் குருக்கள், வெளியில் பூச்சுப் போட்டு உள்ளிருப்பதையெல்லாம் தந்திரமாய் ஒளித்து தங்களை ஏமாற்றிவிட்டார்களென்று, அவர்கள் பழிசுமத்த ஏதுவாகும். முதல் கிறீஸ்துவர்களைப்போலவே அவர்களுக்கும் அதிக துன்பம் வந்து சேரும்.

"இக்கருத்தோடும் இவ்வாசையோடும், சோம்பேறித்தனமாய்க் கைகட்டிக்கொண்டிராமல் சீக்கிரம் ஏதாவது தொடங்கவேண்டுமென்று ஆவல்கொண்டு, நான் செய்ய உத்தேசித்திருப்பதேதென்ருல், தங்களுக்கும் சங். துநார்கோர்ட் சுவாமிகளுக்கும் எப்பிள்ளைகள் நல்லவர்கள் தகுதியுள்ளவர்களென்று தெரிகிறதோ அப்பிள்ளைகளை ஓர் கூட்டமாய்ச் சேர்த்து அவர்கள் தங்கள் ஒவ்வொருவருடையவும் அபிப்பிராயம் ஏதென்று சிநேகத்தோடும் கூச்சமின்றியும் திறந்த மனதோடும் வெளியிடும்படி செய்விக்கவேண்டும். இக்கருத்துக்காக நான் எழுதுகிற இக்கடிதத்தைத் தாங்கள் பிரியப்பட்டால் அவர்களுக்குக் காண்பிக்கலாம். இக்கூட்டமானது கொஞ்ச நாளைக்கு வாரம் வாரம் சந்தித்து, ஒருவர் ஒருவரை உற்சாகப்படுத்தி, கூடுமானமட்டும் ஞாயிற்றுக்கிழமைகளில் பூசை காணவேண்டும். இதை எவ்வளவு சீக்கிரம் துவக்குகிருேமோ, அவ்வளவுக்கு தங்கள் சபையின் பத்தியுள்ள கருத்துக்களையும் நோக்கத்தையும் பிராப்தியடையச் செய்வதற்கு உஜிதமான வழியாகும்; இதற்கு என்னுலியன்ற உதவியெல்லாம் செய்யத் தயாராயிருக்கிறேன். இவ்வாலிபர்களுக்குள் கலியாணம் செய்தவர்கள் தங்கள் மனைவிமார்களும் ஞானுபதேசம் கற்கச் செய்வதவசியம். இக்கூட்டங்கள் அநுகூலமாய் நடைபெறுமேயாகில், இரண்டோர் வருஷம் சென்றபின் குறித்த நாளில் யாவரும் ஞானஸ்நானம் பெறலாம். ஆறு பிராமண வாலிபர்கள் அஞ்ஞான விக்கிரகங்களின் அடிமைத்தனத்தை களைந்தெறிந்துவிட்டு சர்வேசுரனுடைய சந்தோஷத்தில் பிரவேசிப்பதைப் பார்ப்பது மனதுக்கு எவ்வளவோ ஆனந்தத்தை விளைவிக்கும்! இது சீக்கிரம் நடைபெறுமென்றே நான் நம்பியிருக்கிறேன். இதற்கு சர்வேசுரன் உதவியைத் தேடி சீக்கிரம்

தொடங்கவேண்டியதே தாமதம். இவ்வாலிபர்கள் இன்னும் எல்லாவற்றையும் இரகசியமாய் வைத்திராமல், ஒன்ருய்ச் சேர்ந்து உழைப்பார்களாக. என் புது வேலையை சீக்கிரம் படித்து முடித்தவுடன், இவைகளைநான் முயற்சிக்க ஆயத்தமாயிருக்கிறேன். சுவாமிமார்கள் வீட்டிலேயே, குறித்த நேரத்தில் ஒன்றுசேர்ந்து புத்திமதி கேட்டுப் போகலாம். எங்கே இக்கடிதத்தை நிறுத்துவதென்று எனக்குத் தெரியவில்லை. இவ்வெண்ணங்களையெல்லாம் தாங்கள் நிதானமாய்த் தயவுசெய்து பார்க்கவும் ; என்னை நமதாண்டவருடையவும் தேவன்னையினுடையவும் இருதயத்தில் உமது வழியாய் ஒப்புக்கொடுக்கவும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

உங்கள் பட்சமுள்ள
மகாதேவன்.

3-ம் அதிகாரம்.

சிறு மந்தை.

'என் மனைவிக்கு ஞானேபதேசம் சொல்லிக்கொடுக்கவேண்டும்' என்று மகாதேவய்யர் எழுதினதை இதை வாசிப்போர்கள் மறந்து போகவேண்டாம். தற்பெருமையும் முன்கொண்ட எண்ணங்களும், ஆண்களைவிட பெண்களை அதிகமாய் ஆட்டிவைப்பதினுல், பிராமணப் பெண்டிரை மனந்திருப்புதல் இலேசான காரியமல்ல. மகாதேவய்யர் திறந்த மனதாய் சர்வேசுரன்பேரில் தன் நம்பிக்கையெல்லாம் வைத்து வேண்டிக்கொண்டு வந்தபோதிலும், தந்திரமுள்ள பிராமணரோ ; சாதாம்பாள் மனந்திரும்பும்படி தான் வேண்டிக்கொண்டு, பிறரையும் வேண்டிக்கொள்ளச் செய்ததுமல்லாமல், எல்லாவற்றையும் உடனே சொல்லி அவள் புத்தியைக் கலக்கி எல்லாவற்றையும் பாழாக்காமல், ஆற அமர மெதுவாய் ஆரம்பித்து, கர்தினல் வொய்ஸ்மன் எழுதின பபியோலா என்ற முதல் நூலை (தமிழில் அது பங்கிராஸ் என்று இப்போது வழங்கிவருகிறது) மொழிபெயர்த்து தினமாறு சாயங்கால வேளையில் இரண்டொரு அதிகாரம் அவளுக்கு வாசித்துக் காண்பித்து வியாக்கியானஞ் செய்துவருவார். கதையின்மேல் யாருக்

குத்தான் பிரியமில்லை. சரதாம்பாள் கதையின் மேன்மையையும் பொலிவையும் கண்டு மனத்தைக் கள்ளங்கொடுக்க, இதுதான் சமயம் என்று ஐயர் கத்தோலிக் மதத்தின்மேல் அவள் மனதையும் புத்தியையும் திருப்புவார். தங்கள் தலைச்சன் பிள்ளைக்கு பங்கிராசில் தோன்றும் ஜெயசீலி அல்லது செசீலி என்னும் பேரிட இருவரும் தீர்மானித்தார்கள்.

இதைப்பற்றி சங். பில்லியார்ட் சுவாமியார் எழுதுவதாவது: "மகாதேவய்யர் தன் மனைவிக்கு போதுமானமட்டும் போதனைசெய்த பின் தன் தாய்வீட்டில் அஞ்ஞானப் பெண்ணாயிருந்த காலத்தில் சர்வேசுரனைப்பற்றியும் தன் ஆத்துமத்தைப்பற்றியும் அவள் என்ன நினைத்தாள் என்று கேட்க, அதைப்பற்றி அவள் ஒன்றும் யோசித்துப் பார்த்ததில்லையென்றும், தனக்கு அறிமுகமாயுள்ள பெண்பாலாருக்குள் ஒருவரும் இவைகளைப்பற்றி யோசிப்பதுமில்லை, பேசுவதுமில்லை என்றாள்."

இக்கல்லெண்ணமுள்ள இவ்விருவர்களுடைய விசுவாசம் பெரும் சோதனைகளால் பரீட்சிக்கப்படவேண்டிய காலம் வந்தது. தாங்கள் மனந்திரும்பாதபடி பேய் செய்யும் எல்லா விக்கினங்களையும் ஜெயிப்பதற்கு அவர்கள் தயாராகவே இருந்தார்கள்.

மகாதேவய்யருடைய பெற்றோரும் மாமன் மாமியாரும் தங்கள் பிள்ளைகளுக்கு நேரிட்ட மாற்றத்தைக் கவனியாமல் போகவில்லை. ஐயரும் சரதாம்பாளும் அஞ்ஞான அநுசாரங்களை விட்டுவிட்டதுமன்றி, ஐயர் ஒழுங்காய் பூசைக்குப் போகவும் தலைப்பட்டார்.

இச்சமயத்தில் சங். பில்லியார்ட் சுவாமியார் எழுதுவதாவது: "16 வயதுள்ள சிறு பெண் சிறிதுநாளே ஞானோபதேசம் பெற்றபின், மகா தைரியசாலிகளுடைய விசுவாசத்தையும் அசைக்கக்கூடிய கொடிய தொந்தரைகளை எப்படி சகிப்பாளோ என நான் அச்சமுற்றே இருந்தேன். நாங்கள் எதிர்பாராதவண்ணம் சர்வேசுரனுடைய வரப்பிரசாதம் அவளுக்குத் தைரியத்தையும் நெஞ்சத் துணிவையும் கொடுத்தது. ஓர் நாள் சரதாம்பாளின் தாயானவள் தன் பெண்ணை எப்படியாவது தன் வீட்டிற்குக் கொண்டுபோய்விடவேண்டுமென்னும் கருத்துடன் திருச்சிக்கு வந்தாள். சரதாம்பாள் இந்நோக்கத்தை

அறிந்தவுடனே தன் கணவனிடம்போய் இரகசியமாய், தன் தாய் என்ன சொல்லியபோதிலும் தன்னை அவள்கூட அனுப்பக்கூடாதென்றும், தான் அவள்கூட போவதற்கு இது சமயமில்லையென்றும் சொல்லிவிடவேண்டுமென்றும் சொல்லிவைத்தாள். அப்படியே எல்லாம் நடந்தது. தாயுடைய பயமும் நயமும், கோபமும் தாபமும், இன்சொல்லும் வன்சொல்லும், பெண்ணினுடைய உறுதியைக் கரைக்கவில்லை. இன்னோர் சமயம் அவள் தந்தை அதிகாலையில் அவளை எழுப்பி, மூன்றுமணி நேரமாய் ஓர் பெரும் துன்பத்திற்குள்ளாக்கின போதிலும், சரதாம்பாள் அசையவில்லை. சர்வேசுரனுடைய வரப்பிரசாதம் மறுபடியும் ஜெயம்பெற்றது ; முன்னையைவிட அவள் இப்போது அதிகத் தைரியத்தையடைந்தாள்.

"தன் நாத்தினுள் தன் வீடு வந்தபோது இவள் ஓர் அப்போஸ்தலனைப்போல, அவளுக்கு ஞானோபதேசம் சொல்லிக்கொடுத்தாள். அதினால் மகாதேவய்யர் சகோதரி, அழுதுகொண்டு அவ்வீட்டிலேயே இருந்து ஞானஸ்நானம் பெறவேண்டுமென்று வேண்டிக்கொண்டாள். இவள் சரதாம்பாளைவிட இளையவள் ; இன்னும் அதிக இடைஞ்சலுக்கு உள்ளாவாள், இவள் கடைசியாய் தன் கதி வந்துசேருவாளோ ?...... மகாதேவய்யருடைய மனைவியின் சகோதரர்களில் ஒருவர் மனந்திரும்பச் சம்மதித்து மகாதேவய்யரோடு சேரக் காத்திருக்கிறார்."

சரதாம்பாளுடைய இச்சகோதரன் எப்படி மனந்திரும்பினார் என்று நாம் கண்டால், திருச்சினாப்பள்ளியில் பிராமணர்கள் மனந்திரும்பல் மனிதர்கள் வேலையன்று, சர்வேசுரனுடைய அலுவலே யென்று சரிவர உணர்வோம். பாலச்சந்திரமய்யர் திருச்சிக் கலாசாலைக்குப் படிக்க வந்துசேர்ந்தார். மகாதேவய்யருக்கு நடந்ததெல்லாம் ஒன்றும் அறியாமலே, இவர் கத்தோலிக் மதாசாரங்களைப் படிக்க ஆசையுற்று, சேசுசபை சங். பரஞ்சோதிநாதரிடம் போய் தனக்கிவைகளை போதிக்கும்படி கேட்டுக்கொண்டார். கத்தோலிக் வேதம்தான் மெய்யான மதமென்று வெகுசீக்கிரம் உணர்ந்து, ஞானஸ்நானம்பெறத் தீர்மானித்தார். ஓர் நாள் சங். பரஞ்சோதிநாதர் இவருடைய மைத்துனர்கூட கிறீஸ்துவராகத் தயாராயிருக்கிறானென்று சொன்னபோது, பாலச்சந்திரமய்யர், இதை நம்பமாட்டேனென்றும் நம்பக்கூடாத

விஷயமென்றும் சொல்லலானார். "இந்து மதத்தை தாங்கவேண்டுமென்று கங்கணம் கட்டினவரல்லவா மகாதேவய்யர்? கலாசாலை விடுதியில் இந்துக்கள் பூஜா நடைபெறவேண்டுமென்று தலைமையாய் நின்று நடத்தினவர் இவரல்லவா?" இதை நம்பமாட்டேனென்றார். மகாதேவய்யர் தன் மைத்துனர் சங்கதியைக் கேட்டபோது அப்படியே அவரும் அதைச் சீக்கிரம் நம்பாமல் சங். பில்லியார்ட் சுவாமியாருக்குச் சொன்னதாவது: "சுவாமி, அவனை நம்பாதீர்கள், என்னுடைய கருத்தையறிய இவ்வேஷம் போட்டிருக்கிறான்போலும்; என் மனைவியும் என்னோடு ஞானஸ்நானம் பெறுதவண்ணம் என் மாமனார் அனுப்பிய உளவன்போலத் தோன்றுகிறான்" என்றார். இப்பரஸ்பர சந்தேகத்தினால் கிறிஸ்தவ மதத்தைப்பற்றிய தங்கள் உள்ளாந்தரங்கத்தை ஒருவர் ஒருவருக்கு வெகுகாலம் வெளியிடவேயில்லை. பீடத்திற்கு முன்னால் இருவரும் முழந்தாட்படியிட்டு உருக்கமாய் வேண்டிக்கொண்டபின்னர்தான் ஒருவர் ஒருவனை நம்பினார்கள். அதற்குப் பின்தான் 'மற்றொரு சகோதரனால் உதவி செய்யப்படுகிற ஒரு சகோதரன் ஓர் அரணுள்ள நகரத்துக்கொப்பாவான்' என்னும் வேத வாக்கியத்தைக் கண்டுணர்ந்தார்கள். பாலசந்திரமய்யர் மனந்திரும்புதலானது, அவருடைய சகோதரியின் மனந்திரும்பதலுக்கு யாதொரு விக்கினமும் விளைவிக்காததுமன்றி, அவள் மனந்திரும்பினபின் அவள் கத்தோலிக் மதத்தில் நிலைநிற்க பெருத்த உதவியாயிருந்தது.

இதே சமயத்தில் சர்வேசுரனுடைய வரப்பிரசாதத்தினால் தூண்டப்பட்ட இன்னொரு பிராமண வாலிபன் மகாதேவய்யர் கேட்டுள்ள குணங்களெல்லாம் பொருந்தியவர், P. J. துரைசாமி அய்யர்; மனோரதங்களைப் பின்பற்றி ஓடாமல், கையுமெய்யுமாய் அறிந்தபின் ஒரு நூதன காரியத்தைத் தொடங்கும் சுபாவமுள்ளவர். தஞ்சாவூர் ஜில்லாவில் பலமணி என்னும் இடத்தில் கொச்சின் இராஜாவடியில் செய்து வந்த வேலை முடிந்து உபகாரச்சம்பளம் பெற்றுவந்த ஜம்புநாத சாஸ்திரியார் மகனும், துரைசாமி அய்யர் ஓர்நாள் சங். லக்கோம் சுவாமியாரோடு தற்செயலாய் கொஞ்சநேரம் பேசிக்கொண்டிருந்தபின் கத்தோலிக் மதத்தைப்பற்றி யறிய ஆசைகொண்டார். மிஷனரிகள்மேல் அவருக்குப் பிரியம்; விசேஷமாய், தனக்குச் சொந்தமாயுள்ள பெரும் திரவியமெல்லாவற்றையும் இந்து தேசத்து வாலர்களுக்குச் செலவழித்து

விட்டு, பெரிய ரிஷிபோல் தாரித்திரத்திலும் தாழ்மையிலும் தவத்திலும் கலாசாலையைச் சேர்ந்த இந்து மாணவர்களின் விடுதியில் காலம் செலவழித்த சங். துநார்க்கோர்ட் சுவாமியானா அச்சாதிசயமாய்க் கவனித்துவந்தார். வெகு சீக்கிரம் இவரும் ஞானஸ்நானம் பெற ஆசிக்கவே, இவனைக் கொண்டுபோய் மகாதேவய்யர், பாலச்சந்திரமய்யரோடு சேர்த்தார்கள். இவர்கள் ஒருவர்மேல் ஒருவர் மகாப் பிரியங்கொண்டு, இந்துக்கள் வசித்துவந்த ஆண்டார் வீதியில் ஓர் பெரிய வீட்டை அமர்த்தி அங்கு வசித்துவந்தார்கள். துனைசாமி அய்யருக்கு 15 வயதிலேயே கலியாணமாகியிருந்தபடியால், தன் மனைவியை மனந்திருப்பும்படி அவளையும் கொண்டுவந்தார்; இவருக்கு இப்போது வயது 20.

இவர் ஞான்ஸ்நானம் பெற்று 22 வருஷங்களுக்குப்பின், அவருடைய மனந்திரும்புதலைப்பற்றிக் கேட்டபோது இவர் சொன்னதாவது: (1) நான் மாணவனுயிருந்த காலத்தில் கலாசாலையிலுள்ள சின்னச் சாமிமார்கள் சாயங்கால வேளையில் வெகு பத்தியுடன் ஜெபமாலை சொல்லுவதைக் கவனித்து வந்தேன்; இது என் மனதில் பதிந்தது. நம்முடைய இந்து சந்நியாசிகள் இருவர் கூடினல் ஒரு மடத்தில் சமாதானமாய் இருக்கமுடியாமலிருக்கும்போது, பல தேசவாசிகளான இச்சுவாமிமார்கள் வெகு அந்நியோன்னியமாயும், உள்ளும் புறம்பும் வெகு சமாதானமாய், பரஸ்பர சிநேகமுடையவர்களாய் பாக்கியமான சந்தோஷமாயிருப்பதைக் கண்ணுற்று நான் ஆச்சரியமுற்று, கத்தோலிக் மதத்தின் கொள்கைகள் யாவையென்று விசாரிக்கத் தொடங்கினேன். (2) கிறீஸ்துவ மதத்தில் உட்படுவதற்கு எனக்குள்ள பெரும் விக்கினம் என்னவென்ருல், என் பெற்ருேர்மட்டிலும் என் மனைவிமட்டிலும் எனக்குள்ள வாஞ்சையே; இவர்களை விட்டுப் பிரிந்துபோகவேண்டுமேயென்று நினைக்கும்போது, என் கண்கள் கண்ணீரால் நிறைந்தன. இக்கஷ்டம் பெரும் மலைபோல் எனக்கு முன்னின்றது. (3) நான் மனந்திரும்புவதற்கு எனக்கு மிகவும் உதவியாயிருந்தது ஜெபமே: புத்திக்கு வெளிச்சத்தையும் மனதுக்கு திடனையும் அடைவதற்கு வேண்டிக்கொள்ளவேண்டுமென்று பிறர் சொல்லிவந்தார்கள். நான் வேண்டிக்கொண்டேன், வெகுவாய் வேண்டிக்கொண்டேன், விடாமல் வேண்டிக்கொண்டேன்; அக்காலத்தில் நானடைந்த பெரும் கிருபைகளுக்கெல்லாம் காரணம் ஜெபம்

என்றே சொல்லுவேன். மகாப் பெரிய வரப்பிரசாதங்கள் எனக்குக் கொடுக்கப்பட்டனவாகையால், எனக்கு வந்த கஷ்டங்கள் எவ்வளவு பெரிதாக விருந்தபோதிலும் இன்னும் பெரிய கஷ்டங்களை அனுபவிக்கத் தைரியத்தோடு தயாராயிருந்தேன். என் இந்து நேசர் கண் முன்னால் இது ஓர் பைத்தியம்போல் தோன்றினது; இஃது ஓர் பரம பைத்தியக்தான். நான் கிறிஸ்துவனாயிருப்பதற்கு இவ்விருபத்திரண்டு வருஷங்களாய் சர்வேசுரனுக்கு நன்றி செலுத்திக்கொண்டு சந்தோஷமாய் ஜீவித்துவந்தாலும், நான் கடக்கவேண்டிய கஷ்டங்களையெல்லாம் யோசிக்கும்போது, என் சரீரம் குலுங்குகிறது. நான் மனந் திரும்பினால் அது சர்வேசுரனுடைய வரப்பிரசாதத்தால் வந்த புதுமையே.

நம்முடைய கதையைத் தொடர்ந்து சொல்வோம். அச்சமயத்தில் பாலச்சந்திரமய்யருக்கு இன்னும் விவாகம் ஆகவில்லை, 18 வயதாயிருக்கும்போது கும்பகோணம் கலாசாலைக்கு படிக்க அவனை அவர் தந்தை அனுப்பினார்; இன்னும் ஒன்றரை வருஷம் சென்றபின்னர் தான் திரும்பவும் கஷ்டப்பட்டுத் திருச்சிக்குவந்து, தன் விசுவாசத்தின் சகோதரர்களோடு சேரலானார்.

4-ம் அதிகாரம்.

கட்டுரை.

இச்சமயத்தில் சங். பில்லியர்ட் சுவாமியார் ஐரோப்பாவிலுள்ள தன் சிநேகிதர்களிலொருவருக் கெழுதினதாவது: "மகாதேவய்யர், அவருடைய இந்து சிநேகிதர்களுக்கு ஓர் அப்போஸ்தலனாய் விளங்குகிறார். நான் திருச்சியில் இல்லாதபோது நடந்ததெல்லாவற்றையும் பற்றி அவர் எனக்கெழுதிய கடிதம் இன்று வந்துசேர்ந்தது. இங்கு கூறப்பட்ட காகிதத்தில் ஒன்றிரண்டைச் சொல்வோம்: "சிலகாலம் முன்சீப்பாயிருந்து இப்போது இன்னொரு ஜில்லாவில் சப்ஜட்ஜ் ஆகவிருக்கும் ஓர் துரைசாமி அய்யர், கோடைகாலத்து வாவுநாளைப் போக்க திருச்சினாப்பள்ளிக்கு வந்திருக்கிறார். சமஸ்கிருத பாஷை

யில் இவர் தீரர். சென்னையில் உள்ள தியோசாபிக் சங் (Theosophic Society) கத்தின் அங்கத்தினரில் ஒருவர். இவரிடம் போய் கத்தோலிக் மதம் புத்திக்கு ஒத்திருக்கிறதென்று இவருக்கு எடுத்துரைக்க இவரிடம் சிரஸ்தார் என்னைப் போகச்சொன்னார். சிரஸ்தார் போலீஸ் இன்ஸ்பெக்டர், இன்னும் நகரிலுள்ள பெரியவர்கள் முன்னால் ஓர்நாள் இரவு நான்குமணி நேரம் தர்க்கம் செய்தேன்; முதல்முதல் கத்தோலிக்மதக் கொள்கைகளைச் சுருக்கமாய்ச் சொன்னேன். "திரித்துவத்தின் பரம இரகசியத்தைப்பற்றி முதன்முதல் எனக்கெடுத்துரை, சர்வேஸ்பரனைப்பற்றிச் சரிவரக் கண்டுபிடியாத வேதம் மெய்யான மதமாகுமா? என்றார். இதைக்கேட்டு எல்லோரும் கொல்லென்று நகைத்தனர். ஆதாமின் பாவத்தைப்பற்றி பேச்சுவந்தபோது, ஆதாமின் குற்றத்திற்கு சர்வேசுரன் காரணமா என்று கேட்டார். இது தான் நல்ல சமயம் என்றெண்ணி (ஒரு காரியத்தைச் செய்யப் பிரியமிருந்தால் செய்யவும் செய்யப் பிரியமில்லாவிட்டால், என் மனம்போலவே உட்கட்டாயம் வெளிவலுவந்தம் ஒன்றுமின்றி விட்டுவிடுதலுமாகிய வல்லமையான சுயாதீனம் எவ்வளவு பெரிய கொடையென்றும்; இப்பேர்ப்பட்ட கொடையை பகுத்தறிவுள்ள மனிதனுக்குக் கொடுப்பது எவ்வளவு தகுதியானதென்றும், இப்பேர்க்கொத்த சுயாதீனம் உள்ளவர்கள் ஒரு குற்றத்தைச் செய்தால் அது சர்வேசுரனைச் சாராமல் மனிதனையே சாருமென்றும், அதற்கு மனிதன்தான காரணம் என்றும்; இத்தகைய சுயாதீனம் இல்லையென்று சொன்னால் இது எவ்வளவு புத்திக்கு விபரீதமான காரியமென்றும் சொன்னேன்) இச்சுயாதீனத்தைப்பற்றி இருதரம் பேசினோம். நான் சொல்வதே சரியென்று முதல்முதல் சொன்னார் சிரஸ்தார்; ஆனால் துரைசாமி அய்யர் இக்கொள்கைக்கு விரோதமாயிருக்கிறதை யறிந்து, அதன்பின் அவர்பக்கம் சேர்ந்துகொண்டார்............மூன்று நாளைக்கு முன்னும் வீணில் வெகுநேரம் தர்க்கம் செய்தபின், இந்து மதத்திலுள்ள புத்திக்கொவ்வாத கொள்கைகளைப்பற்றியும், கிறீஸ்துவ மதத்தின் உண்மையைப்பற்றியும் எழுதிக்கொடுக்கும்படி அவர் கேட்டுக்கொண்டார்."

அதற்கு வேண்டி தன் கட்டுரையை எழுத ஆரம்பித்தார்; அவர் எழுதியது நமது கைக்ககப்படவில்லை. ஆனால் இச்சமயம் தன் மாமனு

ராகிய கிருஷ்ணசாமி அய்யருக்கு தன் புதுவேதத்தைப்பற்றி எழுதிய கடிதங்களும், கிறீஸ்துவனுகாதபடி அவனைத் தடுத்த அவர் சிநேகிதர் ஒருவருக்கெழுதிய கடிதமும் இருக்கின்றன. அவர் 24 வயதாயிருக்கும்போது, தன் மாமனுருக் கெழுதிய முதல் கடிதத்தின் சாராம்சத்தை இங்கெடுத்துரைப்போம்.

திருச்சிறுப்பள்ளி,
15–11–92.

பிரிய மாமனுரவர்கட்கு,

தாங்கள் 8-ம் தேதி எழுதிய கடிதம் கிடைத்தது. அதிலுள்ள முதல் பாராவுக்குப் பதில் 9-ம் தேதியே ஓர் கார்டு வழியாய் எழுதியனுப்பினேன். இனிமேல் வாரந்தோறும் ஓர் கடிதம் தங்களுக்கெழுதத் தவறமாட்டேன்.

இரண்டாவது பாராவுக்கு ஓர் நீண்ட பதில் எழுதவேண்டியிருக்கிறது. அதை இங்கெடுத்துரைக்கிறேன் பொறுமையாய் அதை வாசிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

முதல்முதல் நானும் மற்ற இந்து வாலிபர்களைப்போலவே அழிந்துபோகிற வஸ்துக்கள்மேல் ஆவல்கொண்டு மதத்துக்கடுத்தவைகளில் கவலையற்றவனுயிருந்தபோதிலும், வைராக்கியமுள்ள பிராமணனுகவேயிருந்தேன். இதினுல்தானே நான் முன்சொன்ன கலகத்தில் (விடுதியில் இந்து பூஜை செய்வித்ததில்) தலைமையாய் நின்றேன். 1889-ம் வருஷ இறுதியில், பிராம சமாஜ் ஏற்படுத்தின க்ஷண்டர்சன் உபந்நியாசங்களை வாசிக்கத் தொடங்கவே, மதத்துக்கடுத்தவைகள்மேல் பிரியங்கொண்டு உண்மையை அறிய ஆசைகொண்டு, இதற்காக எங்கே உண்மை அகப்படுமோவென்று பல புஸ்தகங்களை வாசிக்கலானேன். நான் வாசித்த முதல் கிறீஸ்து புத்தகங்கள் 'கிறீஸ்துநாதர் அநுசாரமும்', 'அர்ச். அகுஸ்தீன் சங்கீர்த்தனமுமே.' இச்சமயத்தில் அநேக சந்தேகங்கள் என் உள்ளத்தில் ஏற்பட்டன. ஆகையால் எனது சகோதரர் காசினுத தீக்ஷகரோடு தர்க்கஞ்செய்து, அவர் கொடுத்த புத்தகங்களையெல்லாம் வாசித்தேன்; அவைகள் எல்லாம் சாரமற்ற

சக்கைகளாய்த்தான் இருந்தன. 'உபநிடதங்கள்' 'பகவத்கீதை' எல்லாம் என்ன படிப்பிக்கின்றன? ஒன்று எல்லா வஸ்துவும் கடவுள் என்று சாதிக்கின்றன; அல்லது கடவுளில்லையென்று வாதிக்கின்றன. பழைய காலத்திலிருந்து வந்ததாகச் சொல்லுவதெல்லாம் பசையற்றதே; சுருதி என்று சொல்லப்படுபவைகள் எல்லாம், பிள்ளைகளுக்கேற்ற கதைகள்; சில கர்ணகடோரமாகிய அக்கிரமச் செயல்கள். சில இடங்களில் சிற்சில நீதிவாக்கியங்கள் உள என்றாலும், அவைகள் கற்பிக்கும் மறுபிறப்பு புத்திக்கு முழுவதும் விபரீதமானது.

அதே சமயத்தில் கிறீஸ்துவ புத்தகங்களையும், அவர்களுடைய வேதாகமங்களையும், அம்மத பக்தர்களுடையவும் வேதத்துக்காக தங்கள் உயிரைப் பலியாய்க் கொடுத்த முத்தர்களுடையவும் சரிதைகளையும் வாசித்தேன். அவைகளெல்லாம் எவ்வளவோ கம்பீரமும் மேன்மையும் நிறைந்தவைகள். ஜீவியமானது ஓர் கனவன்று; ஓர் சோதனை காலம்; இரக்கமுள்ள சர்வேசுரனால் ஏற்பட்டது; இவர் தன் மக்களாகிய மனிதர்கள்மேல் எவ்வளவோ ஏக்கமுள்ளவர்; இவருடைய நேசத்தை சம்பாதிப்பதற்காக இவ்வுலக துன்பதுரிதங்களைப் பொறுமையுடனும் அகமகிழ்ச்சியுடனும் ஏற்றுக்கொள்ளல்வேண்டும்; நமது கடமைகளை நிறைவேற்றுவதில் கவலையாயும் விழிப்பாயுமிருக்க வேண்டும். இப்படிப்பினைகளெல்லாம் மனதிற்கு எவ்வளவோ இன்பகரமானவைகள்; புண்ணியமென்பது புத்தகத்திலும் கனவிலும் மாத்திரமில்லை, ஒவ்வொரு கிரிகையிலும் காண்பிக்கவேண்டும். கத்தோலிக் மதத்தில் படிப்பினையிலும் கொள்கையிலும் வித்தியாசமில்லை; இவைகள் இரண்டிற்கும் யாதொரு முரண்பாடில்லை; இரண்டும் ஒத்திருக்கவேண்டும்; இந்து மதத்திலோ, படிப்பினை வேறே நடத்தை வேறே.

திறந்த மனதோடு கத்தோலிக் மதத்தைப் படிக்கிறவன் எவனும், அதுதான் உண்மையான மதமென்று தெளிவாயறிவான். எம்பிரான் சேசுநாதர் சீவியத்தை வாசித்து இக்காலத்திலுள்ள எல்லாப் பெரிய மனிதரும் அவரிடத்தில் விளங்கின தூய்மையையும், உண்மையான பிறர்சிநேகத்தையும் புனிதத்தையும் வேறெங்கும் காணமுடியாதென்று ஒரே வாய்ப்பட ஒத்துக்கொள்ளுகிறார்கள். நான் சொல்

வதும் விசுவசிப்பதும் இதுமாத்திரமல்ல; அவர்தான் மெய்யான தேவன், உண்மையாகவே சர்வேசுரன்; அவரைப் பின்பற்றினால் தான் மோட்சகரை யேறலாம், நமதாத்துமத்தை இரட்சிக்கலாம் என்பது எனது துணிபு. அவர் உண்டாக்கின திருச்சபை இன்னும் நிற்கின்றது; அச்சபையின் ஏகத்துவமும், பரிசுத்ததனமும், தொன்று தொட்டு அப்போஸ்தலர் காலந்தொடங்கி நிற்பதும், இவை முதலிய இலட்சணங்கள் அது மெய்யாகவே சர்வேசுரனால் ஏற்படுத்தப் பெற்ற சபையென்று எங்கும் பறைசாற்றுகின்றன. 19-ம் நூற்றாண்டுகளுக்குமுன்னர், ஓர் எளிய தச்சனுடைய மகன் போதித்து ஓர் சபையை ஏற்படுத்தி படிக்காத சில மீன்பிடிப்போரிடம் அதை ஒப்புவித்து விட்டுப் போகிறார். இப்பேர்ப்பட்ட சபை யாதொரு உலக அதிகாரமும் செல்வாக்குமின்றி, இவ்வளவு காலம் நீடித்து, கணக்கற்ற வேதசாட்சிகளுக்கும் அர்ச்சியசிஷ்டவர்களுக்கும் தாயாய் சர்வேசுரனுடைய வல்லபம் இல்லாவிடில் இருக்கமுடியுமா? கத்தோலிக் மிஷனரிகளுடைய சிநேகத்தையும் ஆவலையும், துணிவையும், தபத்தையும் கண்டவர்கள், உண்மை ஒன்றுதான், சத்தியமாத்திரமே, இவர்களுக்கு இப்பேர்ப்பட்ட குணத்தை ஊட்டக்கூடுமென்று கண்டுபிடியாமலிருக்கக்கூடுமா? கத்தோலிக் மதம் தாழ்ச்சியென்னும் அஸ்திவாரத்தில் கட்டப்பட்டு, சர்வேசுரனுக்குப் பிரியமானவைகளைச் செய்துமுடிக்கின்றது; இந்துமதமானது ஆங்காரமென்னும் அஸ்திவாரத்திலிருந்து எழுப்பப்பட்டு, தனக்குப் பிரியமானவைகளைச் செய்துவருகிறது.

நான் இவைகளைச் சொல்லும்போது, நேர்மையுடன் பேசுகிறேன்; இப்போது நான் நினைப்பவைகள் இவைகளே. நாம் நம்புவது பொய் என்று யாராவது எண்ணினால், முதல்முதல் அவர் கத்தோலிக் மதத்தைப் படித்தறியட்டும். சிலபேர் சொல்லலாம்; கத்தோலிக் மதத்தில் உனக்குள்ள அபிமானத்தை நீ விட்டுவிடவேண்டுமென்று நாங்கள் கேட்பதில்லை; அத்தோடு இந்துக்களில் ஓர் இந்துவாயிருந்தால் என்ன மோசம் என்கலாம். கிரிகைகளில் காட்டாத விசுவாசம் செத்தது, உயிரற்றது; ஒரே சர்வேசுரன்தான் உண்டு, அவர் ஏற்படுத்திய மதம் உண்மையான மதம் ஒன்றே; உண்மையறிந்தவர்களுக்கு அதை விட்டால் விமோசனம் இல்லை, இரட்சண்ணியம் இல்லை. நான் ஞானஸ்நானம் பெற்றுவிட்டேன் என்பது பொய்;

நான் இன்னும் பெறவில்லை. பெறுமுன் தங்களுக்குக் கடிதம் எழுதுவேன். நான் ஞானஸ்நானம் பெற்றால், என் மனைவிக்கு பிரமாணிக்க மற்றவனுவேன் என்றஞ்சவேண்டாம்; அவளும் என்னைப்போல் நினைக்கவேண்டுமென்பதுதான் எனதாசை. இக்கடிதத்தை வாசித்துக் கோபங்கொண்டு, எனக்கு இனிமேல் கடிதம் எழுதாமலிருந்துவிடாதேயுங்கள்.

இப்படிக்கு தங்கள்

மகாதேவன்.

5-ம் அதிகாரம்.

ஆயத்தம்.

மகாதேவய்யரும் அவருடைய இருதோழரும், பின்னல் வரப்போகிற பிராமணக் கிறீஸ்துவர்களின் முன்னேடிகள் என்று சிந்தித்து, சங். பில்லியர்ட் சுவாமியார் ஓர் கடிதத்தில் பின்வருமாறு எழுதுகிறார்: இச்சம்பவங்களையெல்லாம் பார்த்தபின், பிராமணர்களும் மனந்திரும்புவார்களென்றும், அவர்களுடைய காலம் வந்துவிட்டதென்றும் இவ்வலுவலில் முன்னையைவிட நாம் அதிகம் உழைக்கவேண்டுமென்றும், சும்மாஇராதபடி நாம் செய்யவேண்டிய பங்கை நாமும் சர்வேசுரனேடு சேர்ந்து செய்யவேண்டுமென்றும் தெளிவாய் விளங்குகிறதல்லவா? இப்பிராமணர்கள் மனந்திரும்பினுல் அவர்கள் வேதசத்தியங்களை வாசித்தறிய நல்ல கத்தோலிக் புஸ்தகங்கள் தேவை. இவர்கள் ஞானஸ்நானம் பெற்றால், ஜாதிப்பிரஷ்டர்களாவார்கள், அவர்கள் பெற்றோர்கள் முதலாய் இவர்களை வீட்டைவிட்டு துரத்திவிடுவார்கள்; வேதத்துக்குவேண்டி இவர்கள் எல்லோரையும் எல்லாவற்றையும் விட்டுவிடும்படி நேரிடும். அச்சமயத்தில் பரஸ்பர உதவியாய், இவர்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து ஒரே இடத்தில் வசித்துவந்தால், நாம் போய் அவர்களுக்குப் புத்திமதியும் ஆறுதலும் சொல்லிவருவது சுலபம். இதற்கு வசதியான இடம் நான் பார்த்து வைத்திருக்கிறேன். ஆனல் பணந்தேவை. இவர்களின் இரட்சண்ணியத்தைத் தேடும் சர்வேஸ்பரன் அவர்களுக்கு அவசியமானவைகளையும் தந்தருள்வார்; என்பதாம்.

ஞானஸ்நானம் பெறவேண்டியவர்கள் வரப்போகும் சந்தோஷத்துக்கும், சந்தடிக்கும் துன்பத்துக்கும் தங்களைத்தானே ஆயத்தம் செய்துகொண்டிருந்தார்கள். 1893-ம் வருஷம் திருச்சி கலாசாலையின் பிள்ளைகள் சபைக் கோவிலில் சங். பில்லியர்ட் சுவாமியார் குருப்பட்டம் பெற்றபோது, புதிதாய் அபிஷேகம் பெற்ற அவருடைய கரத்தை இவர்கள் முத்திசெய்யும் பாக்கியத்தையடைந்தார்கள். சுவாமிமார்களின் சிறு கோவிலில் ஞாயிற்றுக்கிழமைதோறும் இவர்கள் பூசைகண்டு வந்தார்கள். சேசுசபையின் கடைசி பரிசோதனை காலத்திற்காக அவ்வருஷத்தின் நடுவில், சங். பில்லியர்ட் சுவாமியார் ரஞ்சிக்குப்போக நேரிட்டபோது அவருக்கு இரண்டாவதாக நின்ற இம் முதல் நூலை ஆக்கியோனாகிய சங். லக்கோம் சுவாமியார் பாதுகாப்பில் அவர்கள் ஒப்படைக்கப்பட்டார்கள். மகாதேவய்யர் கத்தோலிக் புத்தகங்களை வாசிப்பதில் வெகு ஆவலுள்ளவர்; எல்லாச் சந்தேகங்களுக்கும், ஆக்ஷேபனைகட்கும் பதில் கூறுமலும் தண்டியாமலும் சும்மா இருக்கமாட்டார். ஓர் நாள் இராத்திரி முதல் நூல் ஆக்கியோன் அறைசென்று 9½ மணி முதல் 11 மணிவரை, வரப்பிரசாதம், பேறுபலன் தாழ்ச்சியைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். "அர்ச்சியசிஷ்டவர்கள் எப்படி தாழ்மையாயிருக்கக்கூடும்? அவர்கள் செய்யும் நன்மையையெல்லாம் சர்வேசுரனுடையதென்று சொல்லிவிட்டு பாவமாத்திரம் தங்களுடையதென்று சொல்லலாமா? வரப்பிரசாதம் செய்வதென்ன, நாம் செய்வதென்ன?" என்று சந்தேகங்களைக் கேட்டுக்கொண்டிருந்தார். "நீர் ஓர் படகில் ஏறிப் போகிறீரென்று வைத்துக்கொள்ளும்; பாய்மரம் விரித்திருக்கிறது, காத்தடிக்கிறது, படகு ஓடுகிறது, இதில் உமக்கென்ன மகிமை, உம்முடைய வேலையென்ன? படகைத் தள்ளுகிறீரா? இல்லை. பாயை சுருட்டிவிடாமல், பாயை விரித்து வைத்திருப்பதுதான் உமது மகிமை, உமது வேலை."...... "இப்போது நான் கண்டுபிடிக்கிறேன்; வரப்பிரசாதத்தை வேண்டாமென்று நான் தள்ளிவிடக்கூடுமானாலும், நான் அதை வேண்டாமென்று தள்ளிவிடாமல் இருப்பதுதான் எனக்குச் சொந்தம் சுவாமி, இப்படியானால் நான் எப்படி ஆங்காரங்கொள்ளக்கூடும்?" இதைச் சொல்லி முடித்து சந்தோஷமாய் ஐயர் வீட்டை நோக்கிச் சென்றார்.

1894-ம் வருஷம் பெபுருவரி மாதம், சங். பில்லியர்ட் சுவாமியார் கலாசாலைக்குத் திரும்பி வந்தார்; இவர் மக்களுக்கெல்லாம் பெருஞ் சந்தோஷம். ஞானஸ்நானம் பெற எல்லாரும் முஸ்திப்புச் செய்தார்கள். ஒரே ஒருவர்தான் தயாராயில்லை. இது துரைசாமி ஐயரின் மனைவியே. இவள் நல்ல குணமுடையவள் என்றாலும் அவளுக்கு அவ்வளவு புத்திக்கூர்மையில்லை; ஆகையினால் ஞானஸ்நானம் பெறுவதை அடுத்த பாலன் பிறந்த திருநாள்வரை தள்ளிவைப்பதென்றும், அதற்குள்ளாக துரைசாமி ஐயர் தன் மனைவிக்கு எல்லாம் கற்றுக் கொடுக்கவேண்டும் என்றும் தீர்மானித்தார்கள்.

இச்சமயத்தில் இன்னொரு சங்கடம் நேரிட்டது. ஞானஸ்நானம் பெற்றபின் இவர்கள் எங்கு வசிப்பார்கள்? இந்துக்கள் மத்தியில் வசிப்பது கூடாத காரியம். கலாசாலைக்சருகில் ஓர் பர்லாங்குத் தூரத்தில் ஓர் வசதியான இடம் இருந்தது. அதன்மேல்தான் சங். பில்லியர்ட் சுவாமியார் கண்ணுயிருந்தார். அந்நிலத்தை ஓர் இந்து வாங்கிக் கொண்டானென்று திடீரென்று சங்கதி வந்தது. உண்மையாய் அதை வாங்குவதற்கு பணமுமில்லை; சங். பில்லியர்ட் சுவாமியார் கொடைக்கானலில் இருக்கும்போது 'வெர்ன்ஸ்' என்ற செடிகளைப் பறித்து அவைகளை விற்றதினால் ரூ. 300 கையில் வைத்திருந்தார். ஆனால் இது எந்தமூலை? மிஷனுக்குச்சேர்ந்த நிலங்கள், ஆரோக்கியமாதாக் கோவிலண்டையும் உலக இரட்சகர் கோவிலண்டையும் இருந்தன. ஆனால் புதிதாய் மனந்திரும்புகிறவர்களுக்கு இவ்விடங்களின்மேல் பிரியமில்லை. இதற்கு அவர்கள் கொடுத்த காரணமும் சரியானதே.

இவர்கள் தங்கள் காரணங்களையெல்லாம் எடுத்துக்கூறி கலாசாலைப் பெரிய சுவாமியாருக்கு ஓர் விண்ணப்பம் எழுதினார்கள்: தன்னிலேயே இரட்சகர் கோவிலுக்கருகில் வசிக்க யாதொரு ஆக்ஷேபனையில்லாவிடினும், அங்கு வசிப்பவர்களிடம் அவ்வளவு சுத்தமில்லாததாலும், தாங்கள் சிறுபிள்ளைமுதல் வெளிச்சுத்தத்தை வெகுவாய்க் கவனித்து வந்தபடியாலும் அங்கிருப்பது மனதிற்கு அவ்வளவு பிடிக்காதென்றும்; திருச்சபையானது மதாசாரத்துக்கு விக்கினமில்லாத காரியங்களை விலக்காமலிருப்பதினிமித்தம், தாங்கள் ஜாதி ஆசாரப்படி

இருப்பதற்கு யாதொரு ஆக்ஷேபனையில்லாததினாலும்; அப்படி தாங்கள் வர்ணாச்சாரங்களை விட்டுவிடாமல் அநுசரித்துவந்தால், அஞ்ஞானப் பிராமணர்களுக்கு இவர்களைப் பழித்துப்பேச சந்தர்ப்பம் இருக்காதென்பதினாலும்; அப்படியநுசரியாவிடிலோ ஜாதி ஆசாரங்களுக்குப் பயந்து கிறீஸ்துவர்களாகிவிட்டோம் என்று குறைகூறுவார்களாகியபடியாலும்; அஞ்ஞானப் பிராமணர்கள் மத்தியிலிருந்து, கத்தோலிக்க சத்தியவேதம் மனதைமாத்திரம் மாற்றுகிறதேயொழிய விசுவாசத்திற்கும் நன்னடக்கைக்கும் சேராத வெளி ஆசாரங்களில் தலையிட்டுக்கொள்வதில்லையென்று அவர்களுக்குக் காட்டினால் பிரயோஜனமாயிருக்குமென்றும்; கிறீஸ்துவர்களானாலும் தாங்கள் பிராமண வர்ணாச்சாரங்களை விட்டுவிடவில்லையென்று அவர்களுக்குக் காட்டவேண்டுமென்றும்; அதற்காக கலாசாலையருகிலேயே இருப்பது நல்லதென்றும்; இப்படி அங்கிருந்தால், இந்து பிராமண மாணவர்களுக்கு சிலவேளை மனந்திரும்ப உதவியாயிருப்பார்களென்றும்; இதை விட்டுவிட்டு இரட்சகர் கோவிலுக்கருகிலிருந்தால், கஷாப் கடை நாற்றமும் மீன் கடை நாற்றமும், மாமிசம் உண்ணும் மனிதர் புழக்கமும் மனதுக்கு அருவருப்பாய் இருக்குமென்றும் எழுதி மூன்று ஐயர்மாரும் கையொப்பமிட்டு அனுப்பினார்கள்.

இக்கடிதத்திலிருந்து இந்தியர்கள் எவ்வளவு தூரம் வர்ணாச்சாரப் பற்றுதலுள்ளவர்களாய் இருக்கிறார்களென்று நன்றாய்த் தெரியவருகிறது. கத்தோலிக் கொள்கைக்கும் நல்நடத்தைக்குமடுத்த படிப்பினைக்கு முரண்படாத, ஜனசமூகக் கொள்கைகளை அடியோடு மாற்றவேண்டுமென்று திருச்சபை ஒருபோதும் கேட்டதில்லை. மகாதேவய்யரும் அவரோடு ஞானஸ்நானம் பெற்றவர்களும் ஜீவியமட்டும், மரக்கறியே உபயோகித்துவந்தார்கள். ஞானஸ்நானம் பெற்று வேதத்தை மறுதலித்த இரண்டொருவர், ஞானஸ்நானம் பெற்றவுடனே ஜாதி ஆசாரங்களையெல்லாம் தள்ளிவிட்டவர்களேயாம்.

6-ம் அதிகாரம்.

ஞானஸ்நானம்.

இவர்களுக்கு வசதியான இடம் ஏதென்று யோசித்துக்கொண்டிருக்கும்பொழுது, சர்வேசுரனே இக்கவலையை தன்மேல் எடுத்துக்கொண்டதுபோல எல்லாக் காரியங்களையும் தீவிரமாய் செய்துமுடிக்கலானார். அதெப்படியெனில், இவர்களுடைய பெற்றோர்கள் இவர்களுடைய செய்கைகளையெல்லாம் எவ்வாறோ அறிந்து, அவர்களைப் பிடிக்க வலைதேடிக்கொண்டிருந்தார்கள். சிராவணோற்சவம்வந்தது; இந்நாளில்தான் பிராமணர்கள் தங்கள் பூணூலை மாற்றி புதிதொன்று தரிக்க வேண்டியது. இச்சமயத்தில் திடீரென்று துரைசாமி ஐயருடைய பெற்றோர் திருச்சினாப்பள்ளிக்கு வந்து, மகன் தன் சடங்குகளையெல்லாம் நிறைவேற்றுகிறானாவென்று பரீட்சிக்கும்படி 48 மணி நேரம் தாயும் தகப்பனும் மாற்றி மாற்றி பாராக்கொடுத்துக்கொண்டிருந்தார்கள்; துரைசாமி ஐயர் என்ன செய்தபோதிலும் அவர்கள் கண்ணுக்குத் தப்பித்துப்போகமுடியவில்லை. அவர் எங்கே போனாலும் அவர்களும் கூடவே போனார்கள். ஆகஸ்ட் மாதம் 19-ம் தேதி சாயங்காலம் சடங்குகளை உடனே நிறைவேற்றுகிறாயா இல்லையாவென்று ஐயரை நெருக்கிப்பிடித்தார்கள். ஐயர் பார்த்தார்; அவர்களுக்குக் கீழ்ப்படிந்தால், சேசுநாதர்சுவாமிக்குத் துரோகஞ் செய்ததுபோலாகும்; என்ன வந்தாலும் சரி, உயிர் போனாலும் பரவாயில்லை என்று எண்ணிக்கொண்டு, நான் கத்தோலிக் கிறீஸ்துவனாகி எண்ணியுளேன்; இவைகளையெல்லாம் செய்யமாட்டேன் என்றார். பிடித்தது சனியன். தாயார் இருதயத்தில் கூறிய வாள் பாய்ந்ததுபோலானது; கதறிக்கொண்டு வீட்டுக்கு வெளியே வந்து கூக்குரலிட்டு ஒப்பாரிவைத்தழத் தொடங்கினாள். அக்கம்பக்கத்திலுள்ளோர்கள், அங்கும் இங்கும் போய்க்கொண்டிந்தவர்களெல்லாம் இதென்ன ஆபத்தென்று ஆத்திரமாய் ஓடிவந்து கேட்க, இவளுடைய பெருந் துக்கத்துக்கும் துயரத்துக்கும் கிறீஸ்துவனான அவள் மகன்தான் காரணமென்று அறியவே, வந்துசேர்ந்த கூட்டம்; "அப்படியாயிற்றா" என்று அரட்டிக்கொண்டு உள்ளே நுழைந்து, ஐயரை உந்திக்கொண்டு வெளியேவந்து ஓர் வண்டியில் உட்காரவைத்து; அவருடைய மனைவியையும் கொண்டு

வந்து மற்றோர் வண்டியிலேற்றி, அவ்வவர்களுடைய ஊருக்குக் கொண்டுபோனார்கள்.

இதற்கெல்லாம் மகாதேவய்யர்தான் காரணமென்று சொல்லி, அவர்மேல் பொங்கி எரிந்து அவர்வீட்டுக்குச் சென்றார்கள். இச்சமயத்தில் மகாதேவய்யருடைய சகோதரரும், பிராமணச் சடங்குகளைத் தன் சகோதரன் நிறைவேற்றும்படி கட்டாயப்படுத்துவதற்காக அங்கு வந்துளான். வந்த ஜனத்திரள் ஐயனை நன்றாய்ப்புடைத்து, சகோதரன் வார்த்தையைத் தட்டினால் இன்னும் பெரிய ஆபத்து வருமென்று சொல்லி அதட்டினார்கள். ஐயர் அதுமுடியாதென்று சாதிக்கவே, பக்கத்திலிருந்த பிள்ளையார் கோவிலுக்கு அவனைத் தள்ளிக்கொண்டு போனார்கள்; சிலர் திருநீறென்பதை எடுத்து அவர் தேகமுழுவதும் தேய்த்தார்கள்; வேறு சிலர் துப்பினார்கள்; திட்டினார்கள், ஏசினார்கள், இகழ்ந்தார்கள், அடித்தார்கள். இவ்வாறு வெகுநேரம் அடியும், மிதியும் பழியும், இசையும் வசையும் வாங்கிக்கட்டினார். ஐயர் தன்உயிர்முதலாய்த் தப்புமோ என்னவோவென்று சந்தேகிக்கலானார். இச்சமயத்தில் தன் மனைவிக்கு ஏது நடக்குமோவென்ற ஆத்திரமொன்று அவனை அடைத்துக்கொண்டிருந்தது. சரதாம்பாளுக்கு இன்னும் ஒன்றும் நடக்கவில்லை; இச்சங்கதியைக் கேட்டவுடனே அவள் தன் அறையின் உள்தாளைப் பூட்டிக்கொண்டதினால் அவளுக்கும் அவள் பிள்ளைக்கும் யாதொரு மோசமில்லை.

பாலச்சந்திரமய்யர் இளைஞர்; அவனை அநேகருக்குத் தெரியாது. இச்சந்தடியைக் கேட்டவுடனே, அவர் அரண்டு உருண்டு கலாசாலைக் கோடி சுமார் $9\frac{1}{2}$ மணிக்கு கதவைத் தட்டி, சங். பில்லியர்ட் சுவாமியாருக்கும், சங். லக்கோம் சுவாமியாருக்கும் சங்கதியையெல்லாம் வெளியிட்டார். உடனே இவர்கள் சில நல்ல கிறீஸ்துவர்களைக் கூப்பிட்டு, மகாதேவனைப்போய் காப்பாற்றும்படி கேட்டுக்கொண்டார்கள்.

ஏறக்குறைய நடுச்சாமமானது; மகாதேவய்யனை வாதித்தவர்கள் களைத்துப்போய் ஒவ்வொருவராய் தங்கள் தங்கள் வீடுநோக்கிச் சென்றார்கள்; ஐயரோ பிடித்த பிடியை விடாமல் தைரியமாய் தன் விசுவாசத்தில் உறுதியாய் நின்றார். போன கிறீஸ்துவர்களின் உதவி

யால் வீடுநோக்கிச் சென்று தன் மனைவியை ஆற்றித் தேற்றி, காலை ஒருமணி சுமாருக்கு கலாசாலை சென்று, நான் பட்ட பாடெல்லாம் ஆண்டவரே உமக்கே என்று சொல்லி ஆண்டவர் பாதத்தில் சாஷ்டாங்கமாய் விழுந்து, தன் துயரத்தையெல்லாம் அவருக்குச் சமர்ப்பித்து ஆறுதலும் தேறுதலுமடைந்தார்.

மறுநாள் காலை மறுபடியும் ஓர் சந்தடி வந்துசேர்ந்தது; படித்த சில இந்துக்களும் அங்கு வந்து பலவந்தம் ஒன்றும் செய்யக்கூடாது என்று சொன்னார்கள். அச்சமயத்தில் போலீஸ் உத்தியோகஸ்தர்களும் வரவே, கூட்டம் கலைந்துபோனது. எப்படியிருந்தாலும் அங்கு இனி தாமதிக்கமுடியாது. அப்போது T. P. I. சவரிமுத்துப்பிள்ளை தன் வீட்டிற்கு வரும்படி அவர்களை அழைத்தார். உலக இரட்சகர் கோவிலண்டை அவருக்கு ஓர் பெரிய விசாலமான வீடுண்டு; அதில் முன்பாகத்தையும், நல்ல அறைகளையும் இவர்களுக்கு ஒழித்துவிடுவதாகச் சொன்னார். இவர்களும் இவ்வுபகாரத்தைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டு, அன்று இரவே மகாதேவய்யர், மனைவி, குழந்தை, மைத்துனன் நால்வரும் அவ்வீட்டிற்குக் குடி போனார்கள். இரண்டு நாள் சென்றபின், துரைசாமி ஐயரும் வீட்டைவிட்டு தப்பித்தோடி வந்துசேர்ந்தார். இவருடைய மனைவி எங்கே? இவளுக்கொன்றும் சரியாய் ஞானோபதேசம் தெரியாதாகையால், இவள் தன் கணவனோடு போனால் பெரும் தோஷம் வருமென்று பிறர் சொன்னதை நம்பி வராமலிருந்துவிட்டாள்.

கத்தோலிக்கர் மத்தியில் இப்போது ஏதாவது கலகம் நடக்குமென்று இவர்கள் ஒன்றுக்கும் அஞ்சவில்லை. ஆனால், பயம்போனால் நயமுண்டு. இவர்களுடைய சொந்தக்காரர்களும் சிநேகிதர்களும் ஒவ்வொருவராய் இவர்களைப் பார்க்கவந்து தாங்கள் படித்த செப்படி வித்தையையெல்லாம் காட்டினார்கள்; கல்லுங் கரையும்படி பேசினார்கள். ஓர் நாள் நரைத்துத்திரைத்து திரண்டு பழுத்த ஓர் வயோதிகர்வந்து, இவர்களுடைய புதுக் கொள்கைகளை விட்டுவிடவேண்டுமென்றும், அவைகள் குலத்துக்கே கேவலமென்றும், ஏதேதோ சொன்னார். சரதாம்பாளுடைய சொந்தக்காரப் பெண்டிர் வந்து, அவளுடைய தாய் அழுது அழுது கரைந்துபோய்விட்டாளென்றும், துக்கமேலீட்டால் உயிர்

துறக்கும் தறுவாயிலிருக்கிறாளென்றும், சரதாம்பாளைப் பார்த்தால் கொஞ்சம் மனந்தேறுவாள் என்றும், அவளுடைய தகப்பன் தன்னைத் தானே கொன்றுகொள்ள வேண்டுமென்று தீர்மானித்திருப்பதாகவும், வெகு கோர்வையாகவும், சாமர்த்தியமாகவும், சாதுரியமாகவும் பேசினார்கள். இவைகளையெல்லாங் கேட்ட இளைஞர்களின் மனம் எவ்வாறு இளகியிருக்கவேண்டும், எவ்வளவாக மனம் துடித்திருக்கவேண்டும்! இத்துக்கத்தையெல்லாம் தாங்கி, வரப்போகிற துன்பத்தையெல்லாம் அசட்டை செய்து மனத்திடனாயிருப்பதற்கு சர்வேசுரனுடைய வரப்பிரசாதம் என்ன புதுமை செய்திருக்கவேண்டும்!

ஞானஸ்நானம் பெற நாளாகிவிட்டது; இன்னும் தாமதிப்பதினால் என்ன இலாபம்? மகாதேவய்யருடைய தோழர்கள் உடனே ஞானஸ்நானம் பெறுவதுதான் உத்தமம் என்றார்கள். ஆனால் ஐயருக்கு ஒரே ஓர் ஆக்ஷேபனையுண்டு; ஞானஸ்நானம் பெறுமுன் தன் இந்து நேசர்க்கெல்லாம் கடிதம் வரைவதாகச் சொல்லியிருந்தார்; இவ்வார்த்தையைக் காப்பாற்றவேண்டுமேயென்று இவர் யோசித்துக் கொண்டிருந்தார். பாலச்சந்திரமய்யரும் துரைசாமி ஐயரும், 1894-ம் வருஷம் செப்டெம்பர் மாதம் முதல் தேதி ஞானஸ்நானம் பெற்றார்கள்: T. P. I. சவரிமுத்துப்பிள்ளை இவ்விருவர்களுக்கும் ஞானத்தந்தையானார்; மரியஸ்தனிஸ்லாஸ் என்றும், இராயப்பர்சூசை என்றும் ஞானஸ்நானத்தில் பெயர்பூண்டார்கள். மறுநாள் மகாதேவய்யர் இவர்களைப் பார்த்தபோது இவர்கள் முகத்தில் என்றுமில்லாத களை நடனமிடச்கண்டு, உங்களுக்கென்ன நடந்தது என்று கேட்டார். இச்சந்தோஷத்தை நீரும் அடைவது உன் கையில்தான் இருக்கிறதென்று பதிலுரைத்தார்கள். அக்ஷணமே மகாதேவய்யருக்கு எல்லாம் விளங்கினது; உடனே ஞானஸ்நானம் பெறத்தீர்மானித்தார். 1894-ம் வருஷம் செப்டெம்பர் மாதம் 4-ம் தேதி அர்ச். அன்னம்மாள் மடத்தில் சங். பில்லியர்ட் சுவாமியார் இவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, வின்சென்ற், மரிய அன்னாள், செசீலி என்று முறையே பெயரிட்டனர். A. துரைசாமி முதலியாரும், அவருடைய மனைவியும் இவர்களுக்கு ஞானத்தந்தை தாயாரானார்கள். ஞானஸ்நானம் பெற்றவுடனே முதலியார் வீடு செல்ல, வெள்ளியால் கட்டப்பட்ட முத்துச் செபமாலை இவர்களுக்கு நன்கொடையாக முதலியார் அளித்தார்.

பத்துநாள் சென்று இவர்கள் எல்லோரும் புதுநன்மை வாங்கி ஞர்கள். அவர்களுடைய சந்தோஷமே சந்தோஷம்!!

7-ம் அதிகாரம்.

பெருஞ் சோதனை: சிறைப்படுத்தல்.

தன்னுடைய சிநேகிதரும் சொந்தக்காரரும் தொடுத்த போரில் மகாதேவய்யரோ ஜெயம் பெற்றனர்; இவ்வெற்றி மகிமையில்லாமல் போகவில்லை. தென்னிந்தியா முழுவதிலும் இவர் பேர் பரவியது; இவருடைய சத்துருக்களே இவருடைய மனத்துணிவையும், ஊக்கத்தையும், விடாமுயற்சியையும் கண்டு அதிசயித்து நின்றார்கள். கார்காலத்தில் சுரீர் என்று எரித்து வெகு பிரகாசமாய்ச் சூரியன் கதிர் வீசிக்கொண்டிருக்கும்போதே, ஆகாயம் கறுத்து மேகங்கள் பறந்து வந்து சூழ்வதுபோல, துன்பமும், துயரமும், கலக்கமும், வாதனையும் இருண்டு அடர்ந்து அவனைச் சூழ்ந்தன.

ஞானஸ்நானம் பெற்று ஓர் மாதம் ஆகுமுன்னர், மகாதேவய்யர் மாமியாரும் மைத்துனரும் தீட்டொன்றையும் கவனிக்காமல் இவர்வீடு வந்துசேர்ந்தார்கள். கிறீஸ்துவளானபின் மகளைத் தாய் சந்தித்தது இதுதான் முதல்தடவை. எல்லாம் அழுகையும் கண்ணீருமாயிருந்தது; இதைக்கண்ட ஐயர் முதலாய் கண்கலங்காமலிருக்கவில்லை. "இப்போது நீங்கள் இருவரும் எங்களுக்குச் செத்தவர்களே; போய்த் தொலைகிறது என் மகளை என்னோடு என் வீட்டில் மூன்று நாளைக்கு வைத்திருக்கும் பாக்கியமாவது எனக்குக் கொடுக்கமாட்டீர்களா? மூன்றுநாள் சென்று நானே கொண்டுவந்து உம்மிடம் ஒப்பித்துவிட்டுப் போகிறேன்" என்றாள். சரதாம்பாள் இதோர் தந்திரம் என்று நன்குணர்ந்து போகக் கூசினாள். திறந்த மனதுள்ள ஐயர் ஏமாந்து உத்தரவு தந்தார். தன் தாயாரோடும் சகோதரரோடும் கண்ணீரும் கம்பலையுமாய்ச் சென்றாள் சரதாம்பாள். இதைக்கண்டும் ஐயர் வரப்போகும் துன்பத்தை உணரவில்லை. அவள் சென்று ஓர்வாரஞ்சென்றபின்தான் தான் ஏமாந்ததாக இவருக்குத் தெரியவந்தது. ஒரு

வாரம் வரையில் தன் மனைவி வீடுவந்து சேரவில்லை; ஓர் நாள் வாது நாள் அகப்பட்டது, ஐயர் தஞ்சாவூர் சென்றார்; மாமனார்வீடு சேர்ந்த வுடனே, மனைவியைக் கூட்டிக்கொண்டு வருவது கூடாத காரியம் என்று தோன்றினது. இவர் தலையைக் கண்டவுடனே, "எங்கே வந்தாய்? உன் மனைவி இங்கில்லை, உன்னை இனி வேண்டாமென்று சொல்லிவிட்டாள்" என்ற ஆசார மொழிகளைப் பொழிந்தார்கள் மாமனார் வீட்டார். இவர் இதைக்கேட்டுத் திகைத்துப்போய் நிற்கையில் "ஏன் நிற்கிறாய் நீ எவ்வளவு சீக்கிரம் தொலைவாயோ, அவ்வளவுக்கு நல்லது; நீ இங்கு இருந்தால் எங்களுக்குப் பெரும் அவமானந்தான் வரும்; எங்கள் வீட்டுக்கும் தோஷமும் தீட்டுமே" என்று கதறினார்கள்.

மாமனார் வீட்டின்மேல் மகா கோபமாய் மகாதேவய்யர் திருச்சி நோக்கித் திரும்பிவந்தார். "உன்னை அவள் வேண்டாமென்று சொல்லிவிட்டாள்" என்றார்களே இது மெய்தானா? இல்லை இல்லை. இது சுத்தப் பொய். என்னுடைய பிரமாணிக்கமுள்ள மனைவியை எங்கோ கொண்டுபோய் ஒளித்து வைத்திருக்கிறார்கள்; நான் அவளை அவள் தாயோடு போகச்சொன்னதற்காக, எவ்வளவு மனம் நொந்து அவள் அழுதுகொண்டு போனாள், பழியையெல்லாம் நம்மேல் போட்டுக்கொண்டிருக்கவேண்டும் என்று எண்ணினார். இங்ஙனமான து அவர் இருதயத்தை புண்ணைப்போல் குத்திக்கொண்டேயிருந்தது.

இச்சமயத்தில் தன் மனைவியைத் தேடி துரைசுவாமி ஐயரும் ஊரைவிட்டுப்போய்விட்டார். பாலச்சந்திரமய்யர் தன் மைத்துனன் காரிய சித்தியின்றி வந்த இடத்தில் தான் சித்திபெறலாமென்று எண்ணினார்; அவருக்கு தஞ்சாவூரை நன்றாய்த் தெரியும்; ஒன்றுஞ் செய்யாவிட்டாலும், சரதாம்பாள் சிறை இருக்கும் இடத்தையாவது அறிந்து வரலாமென்றெண்ணலானார். இவ்வெண்ணத்தோடு, வெகுவாய் வேண்டிக்கொண்ட பின்னர், சங். பில்லியர்ட் சுவாமியார் ஆசீர்வாதம் பெற்று, அறியக்கூடிய விஷயங்களையெல்லாம் அறிந்து மறுநாள் வருவதாகச் சொல்லிவிட்டுப்போனார். மறுநாள் சென்றது, மூன்றாம் நாள்போனது, போனவர் திரும்பவில்லை. மகாதேவய்யரின் மனோவேதனை எவ்வளவாக இருக்கவேண்டும்! இதையெல்லாம்

வெளியிட கலாசாலைசென்ருர். இவர்கள் திரும்பவும் வந்து ஒன்று சேர்வார்களா? இப்படி சிதறிப்போன மந்தை ஒன்ருய்க்கூடுமா? யார் சொல்லக்கூடும்?

சங். பில்லியர்ட் சுவாமியாரும் அவர் துணைவரும், இப்படி இம் மந்தை திரும்பி வந்து ஒன்று சேரும் பட்சத்தில், மனந்திரும்பின பிராமணர்கள் வசிக்கும் இடத்தில், அமலோற்பவதாயின் மாசற்ற இருதயத்தின் மகிமைக்காக, ஓர் சிறு கோவிலைக் கட்டுவதாக நேர்ச்சி செய்துகொண்டார்கள். இவர்கள் ஜெபமும் நம்பிக்கையும் வீணுக வில்லை. மறுநாளே பாலச்சந்திரமய்யர் திரும்பி வந்துசேர்ந்தார். அவர் தஞ்சைமாநகர் சேர்ந்தவுடனே விசாரணைக்குபோயிருந்த அவர் தந்தையை தந்தி மூலமாய் அழைப்பித்தார்கள். தந்தையின் கோபம் எப்பேர்ப்பட்டதென்றும், பாலச்சந்திரமய்யர் பட்டபாடுகள் எத்தகைய வென்றும் சொல்லத்தேவையில்லை. துணிமணியெல்லாம் பிடுங்கிக் கொண்டு, ஓர் சிறு துண்டோடு அவரை அவர் வீட்டிலேயே சிறை செய்தார்கள். ஆடையின்றி இத்துண்டோடு அவர் எப்படி வீட்டை விட்டு வெளிப்படக்கூடும்? எப்படி புகைவண்டியில் பிரயாணஞ் செய் யக்கூடும்? மூன்ரும்நாள் இரவு இவருடைய ஞானத்தந்தையின் உதவியினுல் வீட்டைவிட்டு தப்பித்தோடி, திருச்சி வந்துசேரலானுர். சரதாம்பாள் தஞ்சையிலில்லையென்றும், அநேகமாய் திருவாளூரில் தான் தன் மூத்த அண்ணனேடு இருக்கவேண்டுமென்றும், கணவனி டம்வர அவளுக்குப் பிரியமில்லையென்று பிறர் சொல்லிக்கொள்வதாக வும், தான் அதை நம்புவதில்லையென்றும் சொன்னுர்.

அதற்கடுத்தநாள் துரைசாமி அய்யரும் திரும்பிவந்தார். மனைவி கூட வரவில்லை; அவள் இருக்கிற இடம் தெரியும்; அவளை எப்படிக் கொண்டுவருவதென்றும் யோசித்துவைத்திருந்தார். ஆனுல் ஒருக் காலும் தான் நேரில் போகமாட்டேனென்று தீர்மானித்திருந்தார்; அவர் இப்போதே தப்பி வந்தது ஓர் பெரும் புதுமை.—சில வருஷங் களுக்குப்பின்னுல் அவர் மனைவி ஒருக்காலும் ஞானஸ்நானம் பெற வில்லையாதலாலும், தன்னேடு வசிக்கமாட்டேனென்று பிடிவாதமாய்ச் சொல்லியபடியாலும், சின்னப்பர் சுதந்தரப்படி வேருெருவளை மணம் புரிந்தார். 1916-ம் வருஷம் 22 வருஷகாலமாக கத்தோலிக்கராய்

ஜீவித்தபின் P. J. துரைசாமி அய்யர் பாக்கியமான மரணமடைந்தனர்.

தன் இரு தோழர்களோடும் வசிப்பது மகாதேவய்யருக்குக் கொஞ்சம் ஆறுதலாகவிருந்தபோதிலும், சரதாம்பாளை எப்படியாவது கொண்டுவர வழி தேடிக்கொண்டிருந்தார். அவருடைய சொந்தக்காரர்களில் ஒரு இந்துவானவர், எல்லாம் பார்த்துவருவதாகச் சொல்லிப் போய், சரதாம்பாள் தன் அண்ணன் வீட்டில் திருவாரூரில் இருப்பதாகவும்; அவளிடம் ஒருவரும் பேசமுடியாதபடியினால், அவள் உள்ளாந்தரங்கத்தை அறியமுடியவில்லையென்றும்; அவள் ஒருநாளும் ஞானஸ்நானம் பெறவில்லையென்றும், அவள் தன் கணவனிடம் திரும்பப் போகமாட்டாளென்றும் வீண் வதந்தி எங்கும் பரம்பும்படி அவளுடைய சுற்றத்தார் பிரயாசைப்பட்டுக்கொண்டிருக்கிறார்களென்றும்; அறிவித்தார். என்ன செய்வது? திருவாரூருக்குப் போவது பிரயோஜனமற்ற காரியம். ஒரே ஒரு வழிதானிருந்தது; தஞ்சாவூர் ஜில்லாக் கலெக்டர் வழியாய் சரதம்பாளை தஞ்சை கொண்டுவரச் சொல்லி, கச்சேரியில் யாவர் முன்னும் அவள் மனம் என்னவென்று வெளிப்படுத்தும்படி செய்யவேண்டும். அப்படியே தஞ்சை ஜில்லாக் கலெக்டருக்கு மனுச் செய்துகொள்ள, அவர் போலீஸ் இன்ஸ்பெக்டர் A. ஜெகநாதபிள்ளையை, இதை நிறைவேற்றும்படி அனுப்பினார். 1894-ம் வருஷம் அக்டோபர் மாதம் 30-ம் தேதி போலீஸ் காபந்தில், சரதாம்பாள் தஞ்சைக்குக் கொண்டுவரப்பட்டாள். வக்கீல் வேலை பார்த்த அவள் சகோதரனும் கூடவந்தார்.

தஞ்சாவூரில் மகாதேவய்யரும் அவருடைய சில சிநேகிதர்களும் காத்திருந்தார்கள். மகாதேவய்யர் தனது மனைவியிடம் ஓர் கடிதத்தை நீட்டினார்; அவள் அதை வாங்கவில்லை. கலெக்டர் என்ன கேள்வி கேட்டாலும் சரியான பதில் இல்லை. "உன் கணவனோடு நீயும் ஞானஸ்நானம் பெற்றாயா?" "ஆம்." "அவரை நீ நேசிக்கிறாயா?" "ஆம்." "அவரோடு திரிசிரபுரத்துக்குப்போக ஆசிக்கிறாயா?" "இல்லை." "தன் கணவனை நேசிக்கிற மனைவி அவன்கூட ஜீவிக்கமாட்டேனென்கிறது அதிசயமல்லவா?' பதில் இல்லை. திரும்பத் திரும்ப கலெக்டர் என்ன கேட்டபோதிலும் தெளிவான பதி

வில்லை. கடைசியில் தன் சுற்றத்தாரோடு ஜீவிக்க ஆசிப்பதாகப் பதிலளித்தாள். மகாதேவய்யர் உயிரை அழித்தாள். இடியின் தொனியைக்கேட்ட நாகம்போல் ஏங்கி, உடனே அவ்விடத்தைவிட்டு அருகிலிருந்த கோவிலில் சென்று தேவநற்கருணைக்குமுன் சாஷ்டாங்கமாக விழுந்து இப்பெருஞ் சோதனையையும் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்தார். இவரல்லவா கிறீஸ்துவர்!

இவருடைய சிநேகிதர்கள் மகாதேவய்யருடைய விசுவாசத்தின் உறுதியைக்கண்டு ஆச்சரியமுற்று, இவர் பேருக்குத் தகுந்தாப்போல் (வின்சென்ற் = ஜெயமடைந்தார்) ஜெயமடைந்தாரென்று கருதினார்கள். திருச்சிக்குத் திரும்பி வந்து கலாசாலை சென்றபோது இவரைப் பார்த்த சங். லக்கோம் சுவாமியார் சொல்லுகிறார்: "இவர் ஏதோ உருக்குக் காந்தலில் கரைந்தவர்போல் வெளுத்து மெலிந்து போயிருந்தார். கொஞ்ச நேரம் வரை ஒருவரும் ஒன்றுஞ் சொல்லவில்லை. பிறகு சங். பில்லியர்ட் சுவாமியவர்கள் "மகனே பயப்படாதே; நம்பிக்கையாயிரு. சர்வேசுரன் குறித்த நாள்வரும்" என்றார். குருவுக்கேற்ற சீஷனாகிய இவர், "சுவாமி என்ன வந்தாலும் சரி, கத்தோலிக்கனாய்ச் சீவித்து கத்தோலிக்கனாய் மரிக்கத் தீர்மானித்திருக்கிறேன்" என்று மொழிந்தார். வீரத்தனம் என்றால் வேறுண்டோ?

அக்காலத்தில் இவர் திவ்விய பூசை காண்பதினாலும், அன்றாட திவ்விய நன்மை வாங்குவதினாலும், ஞானவாசகம், அர்ச்சியசிஷ்டவர்கள் சரிதை, வேதசாட்சிகளின் சரித்திரங்கள் வாசிப்பதினாலும் வெகு ஆறுதலடைந்தார். இக்காலத்தில்தான் புண்ணிய பாதையில் இவர் வெகு விர்த்திப்படைந்தார். ஆனபோதிலும் இவருக்கு ஓர் பச்சாத்தாபம் உண்டானது: என்னாலல்லவா தாயும் பிள்ளையும் என்னைவிட்டுப் பிரிந்தார்கள். என் மனைவியைக் காப்பாற்ற நான் எல்லாஞ் செய்துவிட்டேன்; குழந்தையைக் காப்பாற்றுவது என் கடமையல்லவா? சட்டப்பிரகாரம் குழந்தையாவது என்னைச் சேருமா? குழந்தை என்னைச் சேர்ந்தால், தாயும் பிள்ளையைவிட்டுப்பிரிந்திருக்க முடியாமல் வருவாள் என்று எண்ணிக்கொண்டிருந்தார்.

சென்னையிலிருந்த பெரிய வக்கீல்களிடமிருந்து இதைத் திட்டமாயறிய சென்னைக்குச் சென்றார். ஜெயசீலியை உம்மிடத்தில்

தான் ஒப்புவிக்கும்படி சட்டஞ் சொல்லுகிறதென்று முதல் திவக்கத்தில் சட்ட நிரூபணர் சொன்னபோதிலும், இருக்க இருக்க இதிலும் அநேக சந்தேகங்கள் ஏற்பட்டன. அங்கிருந்து அவர் அநேக கடிதங்கள் எழுதினார்; அவைகளில் ஒன்றில் சொல்லு கிறார்: ஒவ்வொரு நாளும் திவ்விய பூசைக்குப்போய், திவ்விய நன்மை வாங்குவதாகவும், மாலைதோறும் இரண்டுமணி நேரமாக ஜெபமாலை செய்து கிறீஸ்துநாதர் அநுசாரத்தை வாசிப்பதாகவும்; அதை வாசிக்க வாசிக்க மனோதைரியமும் திடனும் பிறக்கிறதென்றும், ஆகிலும் சமயத்துக்குச் சமயம் மனவருத்தம் இருப்பதாகவும், தன்னுடைய இருதோழர்களான பாலச்சந்திரமய்யரும், துரைசாமியய்யரும் தன்னைவிட அதிகச் சந்தோஷமாயும் உறுதியாயும் இருக்கிறபடியால், அவர்களுக்கு அநேக வரப்பிரசாதங்கள் கொடுக்கப்படுவதாகவும், தன்னைவிட புண்ணிய பாதையில் அவர்கள் அதிக விர்த்திப் படைந்திருப்பதாகவும் சொல்லுகிறார். இவர் சென்னையில் திவான் பகதூர் சாமிக்கண்ணுப்பிள்ளை வீட்டில்தான் தங்கியிருந்தார். அவர் இவரைப்பற்றி சங். பில்லியர்ட் சுவாமியாருக்கு எழுதின கடிதமொன்றில் சொல்லுகிறார்: மகாதேவய்யருக்கு சுவாமியார் சொன்னபடியே ஓர் பிராமண சாப்பாட்டுக் கடையிலிருந்து போஜனமளித்துவருவதாகவும், அவர் தினமானம் திவ்விய நன்மை வாங்கி புதுப்பட்டுச் சபையாருக்கு பெரும் ஞானசந்தோஷம் விளைவிப்பதாகவும், அவர் உத்தமமான கிறீஸ்துவனென்றும், தங்கமான இருதயமும், கெட்டிக்காரப் புத்தியும் உள்ளவனென்றும், இவரை மனந்திருப்பினதினால் நமது ஆண்டவருடைய முடிக்கு ஓர் நேர்த்தியான மாணிக்கம் சம்பாதித்ததாகவும் வெகுவாய் மகாதேவய்யரைப் புகழ்ந்து எழுதினார்.

இரண்டு வாரஞ்சென்று மகாதேவய்யர் திருச்சிக்குத் திரும்பி வந்தது அவர் தோழர் இருவருக்கும் வெகு சந்தோஷம். இவ்விரண்டு வாரமாய் அவர்களிருவரும் விரதமே. மகாதேவய்யர் இருந்தவரை அவர்தான் சமைத்துக்கொண்டிருந்தார்; மற்ற இருவர்களும் சமையல் வேலையில் புலிகள்தான். இவர் சமைத்தபோதிலும், இவரும் என்ன கைதேர்ந்த சுயம்பாகியா? சாப்பாட்டு விஷயத்தில் பெருங் கஷ்டமே. திருவாரூரிலிருந்தவர்களுக்கு இது நன்றாய்த் தெரியுமாகையால், பட்டினியாய்க்கிடந்தால் இவ்வாலிபர்களுக்குப் புத்திவரும்.

திரும்பி வந்துவிடுவார்கள் என்று எண்ணிக்கொண்டிருந்தார்கள். சங். பில்லியர்ட் சுவாமியாருக்கும், ஜாதிப்பிரஷ்டர்களாகி மனங்குழைந்து தவித்து நிற்பவர்கள் சாப்பாடும் இல்லாமல் எவ்வளவு காலம் நிலைத்திருப்பார்களென்ற கலவரம், கலவரமே. ஒரு மாதம் சென்று வெகு கஷ்டப்பட்டு, ஓர் பிராமண சுயம்பாகியை வேலைக்கு அமர்த்தினார்கள்.

இவ்வாறு சுயம்பாகியை நியமித்தவுடன் சரதாம்பாளிடமிருந்து ஓர் அன்பார்ந்த கடிதம் வந்தது. அதில், சரியான சாப்பாடில்லாமல் திருச்சினப்பள்ளியில் ஏன் கஷ்டப்படவேண்டுமென்றும், இவர் தைரியசாலியானபடியினால் இவர் இருதோழர்களும் என்ன சொல்லுவார்களோவென்று அஞ்சாமல் தன்னிடம் வந்து சேரவேண்டும் என்றும், அப்படிவந்து சேர்ந்தால் அங்குள்ள எல்லோருக்கும் சந்தோஷமாயிருக்குமென்றும், அவருடைய சுற்றத்தார் வேறு வேலையில் இவரைக்கொண்டுபோய் வைப்பார்களென்றும் வெகு விமரிசையாய் கடிதம் வரையப்பட்டிருந்தது.

சரதாம்பாள் தன்னை நேசிப்பதில்லையென்று நினைத்திருந்த மகாதேவய்யருக்கு கொஞ்சம் உயிரும் நம்பிக்கையும் வந்தது. திருவாரூருக்குத் தான் போனால், இரண்டோர் மாதத்தில், தன் மனைவிக்கு நல்ல புத்தி சொல்லி திருச்சிக்குக் கொண்டுவந்து விடலாமென்ற சந்தோஷம் உதித்தது. சிலர் போகவேண்டுமென்று ஆசித்தார்கள்; சில சுவாமிமார்களும் அப்படியே போகலாம் என்றார்கள். சங். பில்லியர்ட் சுவாமியாரோ இதற்கு உடன்படாமல், ஐயருக்கு ஓர் சிறு கடிதம் எழுதிச் சொன்னதாவது: பெரிய சுவாமியார் அவர் திருவாரூருக்குப் போகலாமென்று சொன்னதினால், அய்யருக்குப் பிரியமிருந்தால் போகலாம் என்றும், ஆனால் அது தன்னுடைய அபிப்பிராயம் அல்லவென்றும், கடிதத்தில் மனைவி சொன்னதெல்லாம் பெரும் தந்திரமென்றும், அவளுக்குக் கடிதம் எழுதி பிள்ளையைப்பற்றியும் மற்றக் காரியங்களைப்பற்றியும் விசாரித்துக்கொண்டிருந்தால், ஐயருக்கு நமதுமட்டில் பெருங்கவலையிருக்கிறது, தன்னோடு வந்து சேர்ந்துகொள்வார் என்ற நம்பிக்கை அவளுக்கதிகரிக்குமென்றும், ஆதலால் திருவாரூருக்குப் போகாமல், திருச்சினப்பள்ளியிலேயிருந்துகொண்டு இங்கேயேயிருப்பதாக தீர்மானித்துவிட்டதாக அவளுக்கோர் கடிதம்

வரையவேண்டுமென்றும் சொன்னார். ஐயர் அவர்கள் தன் மனைவியின் கடிதத்தை ஸ்ரீமான் சாமிக்கண்ணுப்பிள்ளைக்கனுப்பி அவருடைய அபிப்பிராயத்தையும் கேட்டார். அதற்கு அவர் எழுதின பதிலில், அவர் அப்படிப்போனால் தைரியம் வெகுவாய்த் தேவையென்றும், அதற்காக வெகுவாய் வேண்டிக்கொள்ளவேண்டுமென்றும், அவருடைய மனைவி தானே அக்கடிதத்தை எழுதியிருக்கமாட்டாளென்றும், அவள் தாய் சொன்னவைகளை எழுதியிருப்பாளென்றும் சொன்னார்.

சங். பில்லியர்ட் சுவாமியார் சொல்லியதற்குக் கீழ்ப்படிந்து மகாதேவய்யர் தன் மனைவிக்கு ஓர் நீண்ட நிருபம் தீட்டினார். அதன் சாரமாவது:

எனது பிரிய மனைவியே,

பகிரங்கமாய் யாவருக்குமுன்னால் உன் சுற்றத்தாரைப் போல என்னை அவ்வளவாய் நேசிப்பதில்லையென்றும், அவர்களோடுதான் இருப்பேன், என்னோடு இருக்கமாட்டேன் என்றும் சொல்லி எல்லோருக்குமுன்னால் தஞ்சாவூரில் நீ எனக்குச்செய்த அவமானத்தைப்போல், உனக்கும் நான் அவமானமோ நஷ்டமோ விளைவிக்கமாட்டேன். நானோ எல்லோரையும் நேசிப்பதைவிட உன்னை அதிகமாய் நேசிக்கிறேன்; உன்னைக் காப்பாற்ற என் உயிரைமுதலாய்க் கொடுப்பேன் என்று உலகத்தோரெல்லோருக்கு முன்னால் சொல்லத்தயாராயிருக்கிறேன். உன்னை நான் எவ்வளவுதான் நேசித்தாலும், உன்னை நேசிப்பதைவிட அதிகமாய் நமதாண்டவரை நேசிக்கிறேன்; உனக்காகவேண்டி அவருக்குத் துரோகம் வருத்துவிக்கமாட்டேன். நரகத்துக்குப்போக உனக்குப் பிரியமானால், நானும் உன்னோடு நரகத்துக்குவர எனக்காசையில்லை; என்னதான் கஷ்டங்கள் வந்தாலும், மனச்சமாதானத்தைக் காப்பாற்றி என் ஆத்துமத்தை இரட்சிக்கத் தீர்மானித்திருக்கிறேன். போன கடிதத்தில் நீ எழுதினதுபோல், இன்னும் நீ எழுதுவதில் பிரயோஜனமேயில்லை. நான் அங்கு வரப்போகிறதில்லை. என்னால் வரமுடியாது; என் மூன்று மாதத்திய வாவுநாள் முடிந்துபோயின. ஜனவரி மாதம் பத்தாம் தேதி வேலைக்குப் போகவேண்டும். அதற்குமுன் எட்டுநாள் தியானஞ் செய்யப்போகிறேன்;

அங்கு என் ஆண்டவரை நேசித்து அவர் ஊழியத்தில் திடன் கொண்டு நிற்க பலமடைவேன். என்னை என்னத்திற்குக் கூப்பிடுகிறாய்? தந்திரமாய் என்னை அங்கே கொண்டுபோய் என் வேதத்தை மறுதலிக்கும்படி செய்யவல்லவா? எனக்கெல்லாந் தெரியும். இதுநிற்க, பாலச்சந்திரம் சௌக்கியம்; சிநேகமானது கிரிகைகளால் காட்டவேண்டுமானபடியால், எங்களுடைய அவசர நேரத்தில் நீ எங்களைவிட்டு ஓடிவிட்டபடியால், நீ எங்களை கொஞ்சமும் நேசிப்பதில்லையென்று சொல்லுகிறான். எங்களுக்கு சமைத்துப்போட ஆள் தேவையில்லை; ஓர் கெட்டிக்கார சமையல்காரனை வேலைக்கமர்த்தியிருக்கிறோம் என்பதாம்.

1894-ம் வருஷம் மகாதேவய்யரும் அவருடைய இரு தோழரும் எட்டுநாள் உள்தியானம் செய்தார்கள். தியானமுடிந்தபின், மகாதேவய்யர் தன் மனைவிக்கெழுதினார்: என்னைப்போல நீயும் எட்டுநாள் தியானம் செய்வாயேயாகில், வேதத்தில் திடனாய் நிலைநிற்க உனக்கும் பலனதிகரிக்கும் என்பதாம். இவைகளுக்கெல்லாம் பதில் இல்லை. இத்தியானத்தில்தான் சந்நியாச அந்தஸ்தின்மேல் மகாதேவய்யருக்குப் பெரும் ஆசை உதித்தது. சேசு சபையில் துணைச்சகோதரராய் மரிக்கவேண்டுமென்று, அந்தியகாலமட்டும் ஆசைப்பட்டார். மரிப்பதற்கு ஓர் வருஷத்திற்கு முந்தித்தான் சங். லக்கோம் சுவாமியாரிடம், விவாகமுள்ள மனிதன் இவ்வாசைப்படுவது ஏதாவது தந்திரமா என்று வினவினார். இவ்வுணர்ச்சியினால் உலகப்பற்றுதலை எவ்வளவுதூரம் இவர் அறுத்துவிட்டாரென்று இதை வாசிப்போர்கள் கண்டுணர்வார்கள்.

இவர் தியானத்திற்குப்பின் யாதொரு கடிதப்போக்கில்லாவிடினும், சரதாம்பாள் ஞானஸ்நானம் பெற்றாள் என்று யாவரும் அறியவந்தபடியால், அவளை வீட்டில் வைத்திருப்பது தீட்டு என்று அவள் பெற்றோரும் சகோதரரும் எண்ணி, அவளுக்குப் பிராயச்சித்தம் செய்யப்போவதாக, பரதேசித் தபால் வந்துகொண்டேயிருந்தது. இதைக்கேட்டதும் அய்யர் அங்கலாய்த்து, தஞ்சாவூரிலுள்ள சில கத்தோலிக் நேயர்களுக்கு கடிதம் எழுதி சமாச்சாரம் என்னவென்று கேட்க, ஒருவரிடமிருந்தும் திட்ட

மான பதில் இல்லை. அய்யர் பிள்ளை செசிலியையடைய வியாஜ ஜியம் தொடுக்கப்போவதாக சரதாம்பாளின் தகப்பனார் கேள்வி யுற்று, அப்படி ஏதாவது செய்தால் அய்யருக்குத்தான் பெரும் வில்லங்கமாய் முடியுமென்றும், அவர் கிறீஸ்துவராயிருக்கும்பரி யந்தம் சரதாள் அவரிடம் வராளென்றும், இவருடைய மாமனார் கண்டிப்பான ஓர் கடிதம் எழுதினார்.

இச்சங்கடத்தில் தேவதாயின் உதவியைத்தேடி மகாதேவய் யர் தானும் தன் சிநேகிதர்களும், கலாசாலையிலுள்ள சில குருக் களும் அமலோற்பவமாதாவின் பரிசுத்த இருதயத்துக்கோர் நவ நாள் தொடங்கினார்கள். ஒன்று முடிந்தால் இன்னோர் நவநாள். இவ்வாறு டிசம்பர் மாதமும் 1895-ம் வருஷம் ஜனவரி, பெப்ர வரி மாதங்களும் சென்றன. இச்சமயத்தில்தான் தற்காலம் "மேரிஸ்தோப்" அல்லது மாமரியின் சோலை என்றழைக்கப்படும் நிலம் விலைக்கு வந்தது; தெய்வச்செயலாய் அதேசமயம் பிராஞ்சு தேசத்திலிருந்து மனந்திரும்பின பிராமணர்களுக்கு உதவியாக பணமும் வந்தது. அந்நிலம் வாங்கப்பட்டு, நமது தாயின் மகிமை க்காக, மேரிஸ்தோப்பு, அல்லது மாமரியின் பூஞ்சோலை என்று பேர் சூட்டப்பட்டது.*

1895-ம் வருஷம் ஜனவரி மாதம் முடிவில் சரதாம்பாள் குடும்பமுழுவதும், ஞானஸ்நானம் பெற்றவர்களோடு உண்ட தோஷத்தைத் தீர்க்க, இராமேஸ்வரத்துக்கு திருயாத்திரையாகப் போவதாக தீர்மானித்திருப்பதாகவும், ஓர் நல்லநாள் பார்த்திருப் பதாகவும் வதந்தி வந்தது. மகாதேவய்யர் தன் நம்பிக்கையை யெல்லாம் தேவதாயின்மேல் வைத்து, நவநாளை விடாமற்செய்து கொண்டுவந்தார்.

---

* முதல் தொடங்கியே, பிராமணர்களின் மனந்திரும்புதலு க்கு அமலோற்பவமாதாவின் பரிசுத்த இருதயத்தை உதவியாகப் பிடித்திருந்தார்கள். 1889-ம் வருஷம் தொடங்கியே சங். பில் லியர்ட் சுவாமியாரும் வேறு சிலரும், இவர்கள் மனந்திரும்புத லுக்கு தேவதாயின் பரிசுத்த இருதயத்துக்கு நவநாள் அல்ல, நவ வருடம் துவக்கினார்கள். இதுதொடங்கி 5-ம் வருஷத்தில்தான் மேற்சொன்ன 5 பேரும் ஞானஸ்நானம் பெற்றார்கள்.

8-ம் அதிகாரம்.

சிறைமீட்சி.

பெப்ருவரி மாதம் 13-ம் தேதி மகாதேவய்யர் கலெக்டர் கச்சேரியில் வேலை செய்துகொண்டிருக்கும்போது, அழுக்குப்படிந்த ஓர் கார்டு இரண்டாக முறிந்து தன் மேசையில் கிடப்பதைக் கண்டார். தமிழில் பென்சலால் இரண்டொரு வரிதான் எழுதப்பட்டிருந்தது. "நாளை இரவு என்னை அவர்கள் இராமேஸ்வரத்துக்குக் கூட்டிக்கொண்டுபோகிறார்கள், ஜங்ஷனுக்கு வரவும், இப்படிக்கு உன்மேல் அன்புள்ளவள்." மகாதேவய்யர் இருதயத்தில் சந்தோஷம் கூத்தாடினது; இன்று இராத்திரி!—நேற்றுத்தான் கார்டு எழுதப்பட்டது; இன்று இராத்திரி எனது அன்பார்ந்த மனைவியும் எனது கண்மணியான ஜெயசீலியும் வருகிறார்கள் என்று ஏக்கமாய் இருந்துவிட்டு; துரையிடம்போய் சிலமணி நேரத்துக்கு ரஜாகேட்க, அது உடனே கிடைத்தது. நேரே போய் தன் இரு தோழர்களுக்கும், T. P. I. சவரிமுத்துப்பிள்ளைக்கும், இன்னும் சில சிநேகிதர்கட்கும் சொன்னார்; இதற்குப் பின் பட்டணத்தின் இன்னோர் கோடியிலுள்ள கோட்டைக்கு கலாசாலைச் சுவாமிமார்களைப் பார்க்கச் சென்றார். அவர்கள் எல்லோரும் வாராந்தர நீண்ட உலாத்தலுக்குப் போய்விட்டார்கள். இரவு 8½ மணிக்குத்தான், சங். பில்லியர்ட் சுவாமியாருக்கும், சங். லக்கோம் சுவாமியாருக்கும் இச்சந்தோஷகரமான சங்கதியெட்டியது.

10½ மணிக்கு வண்டிவருகிறது; எல்லாம் சீக்கிரம் தயார் செய்யவேண்டும். செல்வாக்குள்ள சிறந்த கத்தோலிக்கர் சரதாம்பாளையும் அவள் பிள்ளையையும் மீட்கத் தயாராயிருந்தார்கள்; ஜங்ஷனுக்குச் சென்று ஒவ்வொருவரும் தங்களுக்குக் குறிக்கப்பட்ட இடத்தில் ஆயத்தமாய் நின்றார்கள். 10½ மணியானது; வண்டி வந்து நின்றது. உடனே மகாதேவய்யர் ஒவ்வொரு வண்டியாய்ப்போய் நுழைந்துபார்த்தார். துவக்கத்தில் மனைவியையும் காணோம் மகளையுங்காணோம்; கடைசியில் கவனமாய்ப் பார்த்துவரும்போது வண்டித்தொடரின் கடைசியில்

கடை அறையில் உட்கார்ந்திருந்தார்கள். சரதாம்பாளின் தாய் பாராக் கொடுத்துக்கொண்டிருந்தாள். அவளோடு அவர்களுக்கு உற்ற ஓர் வக்கீலும், இன்னும் பிராமணச் சிநேகிதர்களும் சிலர் இருந்தார்கள். வண்டியைத்திறக்க எத்தனித்தார்; வண்டி பூட்டப் பட்டிருந்தது (எவ்வளவு எச்சரிக்கை!) பிள்ளையைக் கேட்டார், சரதாம்பாள் ஜன்னல் வழியாய்ப் பிள்ளையைக் கொடுத்தாள். மனங்கசிந்துருகி பிள்ளையை வாங்கி தந்தையானவர் முத்தமிட்டு பாலசந்திரரிடம் கொடுத்தார்; அவர் ஓர் கத்தோலிக் நண்பர் கையில் கொடுத்தார்; அவர் ஓடிப்போய் ஸ்டேஷனுக்கு வெளியேநின்ற ஓர் நண்பரிடம் கிராதிவழியாய்ப் பிள்ளையைக்கொடுக்க அவர் அருகிலிருந்த ஓர் வண்டிக்கு அதைக் கொண்டுபோய்ச் சேர்த்தார்.

இன்னோர் கத்தோலிக் நண்பர் இரத்தினஞ் செட்டியென்பவர், ஓடிப்போய் வண்டிக் கதவைத்திறக்க சாவி கொண்டுவந்தார்; வண்டி திறக்கப்பட்டது. பிள்ளையைத்தேடிச் செல்வது போல சரதாம்பாள் வண்டியைவிட்டிறங்கிச் சென்றாள்; மகாதேவய்யரும் கூடச்சென்றார். இப்போதுதான் மாமியாருக்கும் வக்கீலுக்கும் என்ன நடக்கப்போகிறதென்று தெரியவந்தது. அவர்களும் கீழிறங்கி சரதாம்பாளைப் பிடிக்கச் சென்றார்கள்; ஆனால் மகாதேவய்யரும் அவருடைய மனைவியும் கண்ணுக்குத் தப்பி மறையும்வரை, பாலச்சந்திரமய்யரும் இன்னும் சில கத்தோலிக்கரும், இறங்கினவர்களைப் போகாமல் தடுத்து நிறுத்தினார்கள். வக்கீல் ஏமாந்துபோய் எப்படியாவது சரதாம்பாளைக் கொண்டுவரவேண்டுமென்று புறப்பட்டார். B. S. குசைபிள்ளையும் மற்றவர்களும், "அய்யா, மனைவி புருஷன் வீட்டுக்குப் போகிறாள்; அவளைத் தடுக்க உமக்கென்ன நியாயம்?" என்று சொல்லி, அவன் புத்தியை மாற்றி அனுப்பிவிட்டார்கள்.

பண்டியில் யாதொரு தொந்தரையின்றி தன் கணவனோடும், மற்றக் கிறீஸ்துவர்களோடும் வந்துசேர்ந்தக்ஷணம் சந்தோஷத்தால் சரதாம்பாள் கண்ணீர்சிந்தி சிரித்தாள். இதுவரை பட்ட கஷ்டத்தால் மிகவும் பலஹீனமாயிருந்தாள்; இப்போதுமுதலாய்

17984

பயத்தினால் நடுங்கினாள். காரணத்தைக் கேட்டதற்கு தன் தமையன் வந்து என்னசெய்வானோவென்று ஏங்கினாள். ஏனெனில் தஞ்சாவூர் கலெக்டரிடம் வரும்போது அவன் இவளிடம் சொல்லியிருந்ததாவது: "உன்னை நாங்கள் பலவந்தமாய் இங்கு கொண்டுவந்து வைத்திருப்பதற்காக, உன் கணவன் எங்கள்மேல் வெகு கோபமாயிருக்கிறான்; என்னையும் உன் தந்தையையும் சிறைக்கூடத்துக்குக் கொண்டுபோகவேண்டுமென்பது அவனுடைய ஆசை; துரை உன்னை உன் கணவன்கூடப் போகப் பிரியமாவென்று கேட்பார். நீ பிரியம் என்று சொன்னால், நாங்கள் தொலைந்தோம்; நானும் உன் தந்தையும் காராகிருகத்துக்குப் போகவேண்டியதுதான்; உன் தந்தையின் வேலை போய்விடும்; குடும்பமே பெரும் அவமானத்திற்குள்ளாகும்; இத்தகைய அவமானத்தை எங்களுக்கு வருத்துவிக்க எண்ணி, நீ உன் கணவனோடு கூடச் செல்லப் பிரியமென்று சொல்வாயேயாகில், உன் கண் முன்னாலேயே, நான் உன் கணவனைக் கொல்வேன்; நீ அவன் பிரேதத்தின்மேல் விழுந்தழுவாய், எச்சரிக்கை" என்றுசொல்லிப் பயமுறுத்தி இருந்தான். தன் சொந்த கணவனே தன் தந்தையையும் தமையனையும் சிறைக்கூடம் கொண்டுபோவானென்று முன் எண்ணியபடியால், இப்போது தன் தமையன் தஞ்சாவூரிலிருந்து திருச்சிவந்து இப்படுகொலையை எங்கே செய்துவிடுவானோவென்று பயந்து நடுங்கினாள். என்ன சொன்னாலும் அவள் பயம் முழுவதும் தீரவில்லை.

மறுநாட் காலையே, சங். ஸாவல் சுவாமியார், கலெக்டரிடமும், போலீஸ் அதிகாரிகளிடமும் போய் சரதாம்பாள் சகோதரன் வந்து, கூட்டிக்கொண்டுபோகக் கேட்டால், அவன் முன்னால் அவள் பிரியம் ஏதென்று சொலலி கேட்கக்கூடாதென்று கேட்டுக் கொண்டார். மறுநாட் காலையே சரதாம்பாள் சகோதரனும் கோபாவேஷமாய் வந்தான்; தஞ்சாவூரில் கலெக்டர்முன் சரதாம்பாள் சொன்ன வாக்குமூலத்தையும் கொண்டுவந்து, அவளுக்குத் தன் கணவனோடு இருக்கப் பிரியமில்லையென்றும், பெற்றோர் வீட்டில் தான் இருக்கப் பிரியமென்றும் சொன்னான். சரதாம்பாள் பத்திரமாய் வைக்கப்பட்டிருந்த இடத்துக்குப் போலீஸ் இன்ஸ்பெக்

OB:4198ul m69

டர் போய் அவள் பிரியம் ஏதென்று கேட்க, தன் கணவனோடு இருப்பதுதான் அவளுக்குப் பிரியமென்றும், அவள் தான்தானே முந்தினதினம் தன் கணவனுக்குக் கடிதம் எழுதி ஜங்ஷனுக்கு வரச்சொன்னதாகவும் சொன்னாள்.

மறுநாள் ஐந்து பிராமணர்களும் தேவதாயின் அடைக்கலத்திலிருக்க மேரிஸ்தோப்பில் குடியேறினார்கள். எல்லோரும் ஒன்றுசேர்ந்து சந்தோஷமாயிருக்கும்போது, சரதாம்பாள் தான் சிறை வைக்கப்பட்டிருக்கும்போது நடந்தவைகளையெல்லாம் சொன்னாள். தானே சுயமாய் தன்கணவனுக்கு யாதொரு கடிதம் எழுதச்கூடவில்லையென்றும், பிறர் சொன்னதைத்தான் ஓர்தரம் எழுதி அனுப்பினதாகவும்,மகாதேவய்யர் அதற்குப்பதிலாக எழுதிய நீண்ட கடிதம் கைக்குவந்து சேரவில்லையென்றும், இராமேஸ்வரத்துக்குப் பயணப்பட்டபோது, வெகு கஷ்டப்பட்டு ஓர் கார்டு சம்பாதித்து, அதில் இரண்டு வரி பயந்துபயந்து எழுதி, மடியில் முடிந்துவைத்திருந்து, ஓர் மாட்டுக்காரப் பையன் கையில் கொடுத்து தபாற்பெட்டியில் போடச்சொன்னதாகவும் சொன்னாள். "புறப்படும்போது அண்ணனும் கூடவே வந்து உட்கார்ந்தார். எனக்கிருந்த நம்பிக்கையெல்லாம் போய்விட்டது. நமது கணவன் ஜங்ஷனுக்கு வந்தாலும் தப்பித்துப்போவது முடியாத காரியமென்று கலங்கினேன். இருவரும் சந்தித்தாலே என்ன நடக்குமோவென்று பயந்தேன். நல்லவேளையாய் என்கூடவந்த வக்கீல் வீட்டுக்காரர் வண்டி புறப்படுமுன் வந்து எனது அண்ணனுடைய உதவி அவசியமாயிருக்கிறதென்று சொல்லி, இவ்வக்கீலே என் அண்ணனுக்குப் பதிலாய் என்னைப் பத்திரமாய் இராமேஸ்வரம் கொண்டுபோய்ச் சேர்ப்பதாகவும் கூறி, எனது அண்ணனுடைய சீட்டை வாங்கி வண்டியில்வந்து உட்கார்ந்தார்; அண்ணனும் கீழிறங்கிப் போனார்; எனக்கும் போன உயிர் திரும்பிவந்தது. அண்ணன் வந்திருப்பாரோயாகில், வண்டியைவிட்டு ஓடி கீழே வந்திருக்கவேமாட்டேன்" என்று சொல்லிமுடித்தாள்.

செய்த நவநாட்களெல்லாம் வீணானதா?

7A
10-55

9-ம் அதிகாரம்.

இல்லற அப்போஸ்தலர்.

அய்யரவர்கள் ஞானஸ்நானம் பெற்றபின், பிறந்த பிள்ளைகள் இரண்டே; ஒன்று லடிஸ்லாஸ் என்ற ஆண்மகவு; இது சிறுபத்திலேயே இறந்துபோய்விட்டது; மற்றொன்று மார்கரீத்மரி என்ற பெண்குழந்தை; இவள் 1921-ல் பி. ஏ. பரீட்சையில் தேறினாள். அவருக்குப்பிறந்த குழந்தைகள் சொற்பமே என்றபோதிலும், அவர் ஞானத்தந்தையாகநின்று எடுத்துவளர்த்த பிள்ளைகள் அநேகம் என்றே சொல்லவேண்டும்; தன்னைக் கிறீஸ்துவ மதத்துக்குக் கொண்டுவந்து சேர்த்ததற்காக சர்வேசுரனுக்கு மிகவும் நன்றியுள்ளவராய், பிறர் ஆத்துமத்தை இரட்சிப்பதில் தனக்குச் சொந்தமானவைகளையெல்லாம் செலவிட்டு தன் உயிரை முதலாய்ப் பலியிடத் தயாராயிருந்தார். நல்ல குடும்பத்தில் உதித்து எல்லாங் குறைவின்றி வளர்ந்து, புதிதாய் ஞானஸ்நானம் பெறுகிறவர், பெற்றோரையும் உறவினரையும், பந்து மித்திரர்களையும் இழந்து, ஜாதிப்பிரஷ்டராய்க் குடும்பத்திலிருந்தே தள்ளப்பட்டு, தாரித்திரத்திலும் தாழ்மையிலும் பிறருடைய தயாளத்துக்கு இப்போது காத்துக்கொண்டு அநுபவிக்கும் சங்கடம் எப்பேர்ப்பட்டவையென்று இவர் நன்கறிந்துளராகியபடியால், இவரும் இவருடைய மனைவியும் புதிதாய் ஞானஸ்நானம் பெற்றவர்களை தங்கள் வீட்டில் ஏற்றுக்கொண்டு தங்கள் மக்களைப்போலவே அவர்களை நடத்திவருவார்கள்.

புத்திக்கூர்மையுள்ள பிராமணச்சிறுவன் ஒருவன் துரையப்பன் என்று பேர்கொண்டவன், இவர்களுடைய முன்மாதிரிகையைக்கண்டு, கத்தோலிக் வேதத்தைப் படித்துப்பார்த்து மனந்திரும்பி 1895-ம் ஸூ ஞானஸ்நானம் பெற்றான். இவனுடைய பெற்றோர்சுற்றத்தாருடைய துன்பத்துக்கும் தொந்தரைக்கும் பயந்து மகாதேவய்யர் வீட்டில் வந்து வசித்தான். இப்பையனால் அய்யரவர்களுக்கு அதிக துன்பம் நேரிட்டது. பையனுடைய சுற்றத்தார் அய்யரை நீதிஸ்தலத்துக்கு முதலாய் இழுத்துக்கொண்டு போய், என்ன வாதனைக்குத்தான் உட்படுத்தினாலும், அய்யரவர்

கள் கஷ்டங்களுக்கெல்லாம் ஒன்றும் பின்வாங்காமல், பையனைத் தன் மகன்போல் ஆதரித்துவந்தார்.

இப்பையனுடைய சரிதை வெகு இன்பமானது; அதை இங்கே சுருக்கமாய் எழுதுகிறேன். அர்ச். சூசையப்பர் கலா சாலையில் துரையப்பன் என்று ஓர் பிராமணப் பையன் வாசித்துக்கொண்டிருந்தான்; வெகு புத்திசாலி; நான்கு வருஷங்களாக ஒவ்வொரு வருஷமும் நான்கு பாடங்களுக்கு இனும் வாங்கி வந்தான்; ஒரே ஓர் பாடத்துக்குத்தான் வெகுமதி தப்பிப்போனது; ஆங்கிலேய பாஷையின் பாடத்துக்குத்தான் வாங்கவில்லை. அதை ஓர் கிறீஸ்துவப் பையன் வாங்கிக்கொண்டிருந்தான். ஆனால் இவ்விருவரும் சிநேகிதர்கள்தான். ஓர் மே மாத வாவு நாட்களுக்குமுன் துரையப்பன் கேட்பான்: "மரியதாஸ், வாவு நாளைக்கு எங்கே போகப்போகிறாய்?"

"எங்குமில்லை, இங்கேதானிருப்பேன்."

"வாவுநாட்களில் நாம் தினம் சேர்ந்து படிக்கலாம். நான் உனக்குக் கணக்குச் சொல்லித்தருவேன்; நீ எனக்கு ஆங்கிலேய பாஷை சொல்லிக்கொடு."

"நல்லது; தினம் தப்பாமல் இங்கே வா"

இவ்வாறே இருசிநேகிதர்களும் சந்தித்துப் படித்துக்கொண்டுவந்தார்கள். பிள்ளைகளென்றால் பாடத்திலேயே கண்ணிருக்க முடியுமா? பலகாரியங்களைப்பற்றியும் பேசினார்கள். வேதத்தைப்பற்றியும் சமயத்துக்குச் சமயம் பேச்சுவந்தது. துரையப்பன் மதவைராக்கியமுள்ள இந்து குடும்பத்தைச் சேர்ந்தவன்; அவனுடைய சிறிய தகப்பன் ஓர் குரு; சிறு பிராயமுதலே எல்லா மந்திரங்களையும் அநுஷ்டானங்களையும் கற்றிருந்தான்; இவைகளுக்கு இவன் பிரமாணிக்கமாயிருக்கவேண்டுமென்றும்; பிராமணரல்லாதவர்களும், விசேஷமாய் கிறீஸ்துவர்களும், இழிகுலமென்றும், அவர்கள் வீடுகளில் ஜலமருந்துவதுமுதலாய் பெரும் பாதகம் என்றும், இவனுக்குப் போதித்திருந்தார்கள். தன் மதமும் தன் கொள்கைகளுந்தான் உண்மையானவையென்று இவன் நிச்சயமாயிருந்தான். இவ்வாக்குவாதங்களில் இவனை

வெல்லுவது மரியதாசுக்கு சுலபமே, ஆகிலும் சிநேகபங்கம் நேரிடாதபடி அநேகந்தடவைகளில் சும்மா இருந்துவிடுவான்; ஒரு நாள் உண்மை வெளிப்படுவது அவசியமென்று தோன்றியபடியால், காரணங்களை வரிசையாய் அடுக்கியடுக்கிச் சொல்ல, துரையப்பனும் நாம் தோல்வியடைவதாவென்றெண்ணி, கிறீஸ்துமதத்துக்கு விரோதமாய் பிறர் சொல்லும்பொய்யையும் பித்தலாட்டங்களையும் சொல்ல ஆரம்பித்தான். மரியதாஸ் இவைகளெல்லாம் வெறுங் கட்டுக்கதையென்று காட்டவே, இதைத் தீர்த்துவிடும்படி பக்கத்திலிருந்த ஓர் சுவாமியாரின் அறைக்குச் சென்று, சங்கதிகளைச் சொல்ல குருவானவர். வெகு சாந்தமாய் கிறீஸ்துவர்களுக்கு விரோதமாய்ச் சொல்லப்படுவதெல்லாம் சுத்த அபாண்டமென்று காட்டினர்.

பையன் வீடுநோக்கிச் செல்லவே, மரியதாசும் சுவாமியாரும் துரையப்பனுக்காக ஓர் நவநாள் செய்தார்கள்; பையன் நேர்மையான மனதுள்ளவன்; உண்மையையறிவானேயாகில், கட்டாயம் மனந்திரும்புவான். மறுநாட் காலை பையன் சுவாமியாரிடம் வந்து, "சுவாமி நீங்கள் சொன்ன யாவையும்பற்றி நேற்று நான் வெகுவாய் யோசித்து, கடைசியாய் என் சிற்றப்பனிடம் சென்று என் சந்தேகத்தை வெளியிடவே, அவர் உங்கள் வேதத்தைப் போலவே எங்கள் வேதமும் உண்மையானதென்று தெளிவாய்க் காட்டினர்; இதோ அவர் சொன்ன பதில்" என்று சொன்னன். சுவாமியார் பார்த்தார், பையன் இன்னும் தத்துவ சாஸ்திரம் ஒன்றும் படிக்கவில்லை; அவன் சிற்றப்பன் சொல்லியதற்கெல்லாம் சரியான விடையளித்தால் பையன் ஒன்றும் கண்டுபிடிக்கமாட்டான் என்று நினைத்து: "தம்பி, உன் சிற்றப்பன் சொல்லியதையெல்லாம் உங்களுடைய குருக்களில் இன்னொருவரிடம் சென்று சொல்; அவர் உன் சிறுதந்தை சொல்லியதெல்லாம் சுத்தப் பொய், அர்த்தமில்லாதது என்பார்" என்றார்.

இச்சமயத்தில் தேவகிருபையால் ஓர் பழைய மாணவர், நாலைந்து இந்துக்கள் பெரியமனுஷாளோடு கலாசாலையைப் பார்க்கவந்தார்; வந்தவர்களில் ஒருவர் இந்துக் குருக்களுக்கெல்லாம

பெரியவரான ஓர் பேர்போன பண்டிதர். உடனே சுவாமியார் பையனைப்பார்த்து, "நீ போய் அக்குருவைக்கண்டு பேசு" என்றார். பையனும் அவர்கள் கூடவேபோய் சமயம் வாய்த்தபோது தன் சந்தேகங்களைக் கேட்டான். வந்த பண்டிதர் சொன்ன மறுமொழிகளைக்கேட்டு பையன் கலங்கி, பண்டிதனைப்பார்த்து "இதை வேறுவித வியாக்கியானஞ் செய்யமுடியாதா? என் குருவானவர் இப்படி இப்படியல்லவா மறுமொழி சொன்னார்" என்க; பண்டிதர் பையனைப் பார்த்து "உன் குருவானவர் பகவத்கீதையையும் கண்டுபிடிக்கவேயில்லை; ராமானுஜர் கொள்கைகளும் சாஸ்திரங்களும் அவருக்குக் கொஞ்சமேனும் தெரியாதுபோலும்........." என்று சொன்னார்.

பையன் மறுநாள் சுவாமியாரிடம் வந்து "நீங்கள் சொன்னது சரிதான்; எங்கள் குருக்கள் ஒன்றுக்கொன்று விரோதமாய்த்தான் சொல்லுகிறார்கள். என்ன செய்வதென்று தெரியவில்லை" என்றான். குருவானவர் முந்தினதினம் சொன்னதையே சொல்லி, "உன்னை உண்டாக்கின பராபரனைப் பார்த்து உன் புத்திக்கு வெளிச்சத்தையும் தைரியத்தையுங் கொடுக்கும்படி மன்றாடு" என்று சொல்லியனுப்பினார்.

வேண்டிக்கொண்டதின் பலனாகப் பையன் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்று ஞானப்பிரகாசம் என்று பேர்கொண்டான். இவன் சுற்றத்தார் இவனைப்பிடித்து சிறைவைத்தார்கள். இவன் இதைவிட்டுத் தப்பித்தோடினன்; மறுபடியும் பிடித்து சிறைவைக்க, மறுபடியும் தப்பித்தோடினன். மறுபடியும் பிடிபட்டுநீதிஸ்தலத்திற்கு இழுபடுதற்கஞ்சி புதுச்சேரிக்கு ஓடினன். ஆறுமாதம் சென்று சுற்றத்தாருடைய ஆத்திரமெல்லாம் அடங்கினபின் மறுபடியும் திருச்சிக்கு வந்தான். ஆனால் முன் பட்டபாடுகள் அவன் சரீரக்கட்டை உடைத்துவிட்டது; இப்போது காசவியாதி கண்டது. என்ன வைத்தியம் பார்த்தாலும் பையன் குணமடையவில்லை; பையனும் சீக்கிரம் மரிக்கவேண்டுமென்று நவநாட்கள் செய்துகொண்டிருந்தான். 1899-ம் வருஷம் ஜனவரி மாதம் முதல் சனிக்கிழமை பையன் நன்றாயிருந்தபோதிலும்

அன்றைக்கு சாவேனென்று சுவாமியாருக்குச் சொல்லி சுவாமியாருடைய ஆசீர்வாதத்தையும் பாவப்பொறுத்தலையும் பெற்று, பாக்கியமாய் வெகுசீக்கிரம் மரணமடைந்தான். மனந்திரும்பின பிராமணர்களில் முதல்முதல் மோட்சம் சென்றது இவனே.

*** *** ***

சில மாதங்களுக்குப்பின் மகாதேவய்யருடைய இளைய மைத்துனரும் கிறிஸ்துவனாக வந்துசேர்ந்தார்; அவரையும் சந்தோஷமாய் தங்கள் வீட்டில் அய்யரவர்கள் ஏற்றுக்கொண்டார்.

1897-ம் வருஷம் அய்யரவர்கள் வீட்டில் இன்னும் இரண்டு பேர் வந்துசேர்ந்தார்கள்.

பிறரை மனந்திருப்புவதற்கு மகாதேவய்யர் கையாடின வழிப்பாடுகள் என்ன? தர்க்கம் அதிகம் செய்தாரா? அதெல்லாம் ஒன்றுமில்லை. ஞானஸ்நானம் பெறுமுன் இந்து சாஸ்திரங்களை வெகுவாய்ப் படித்து, மிகவும் தர்க்கஞ்செய்தார்; ஞானஸ்நானம் பெற்றபின் தர்க்கம் செய்ய அவருக்குக் கொஞ்சமேனும் பிரியமேயில்லை; சாமானிய ஜனங்களுடைய இந்துமதக் கொள்கைகளானாலும் சரி, இந்து சாஸ்திரங்களானாலும் சரி, இவர் அவைகளைப் பாராட்டவுமில்லை சட்டை செய்யவுமில்லை.

தன்னுடைய சிநேகிதர்கள் கேட்டுக்கொண்டதின்மேல் அவர் செய்த ஓர் உபந்நியாசத்தில் சொல்லியதாவது: ‘பிராமணவேதம் விபரீதம் நிறைந்த ஓர் குழப்பமே; அதில் புத்திக்கு ஒளியை கொடுப்பது ஒன்றுமில்லை; எல்லாம் இருள்தான். அறுவகைச் சமயங்கள் என்று சொல்லப்படுபவைகள் புத்தியின் தடுமாற்றமே. ஓர் சமயம் நீதான் கடவுள் என்கும்; இன்னொரு சமயம் நீ கடவுளின் அம்சம் அல்லது பாகம் என்கும்; (“என்ன கடவுளுக்குப் பங்குபாகமுண்டா? அவரைப் பிரிக்கமுடியுமா? என்ன குருட்டாட்டங்கள்!”) வேறொரு மதம் நீ கடவுளுமன்று, கடவுளுடைய அம்சமுமன்று; நீயே நித்தியமாய் இருக்கிறாய் என்கும். ஆத்துமம் உண்டென்பது எவ்வளவோ நிச்சயமான காரியம்; கிறீஸ்துவக் குழந்தைக்கு முதலாய் இது தெரியும்; சில இந்து சாஸ்திரிகளுக்கு இதுகூடத் தெரியாது. அவர்களில் எத்தனையோ சாஸ்

திரிகளுக்கு சடத்துக்கும் சித்துக்குமுள்ளவேறுபாடு தெரியாது; சில பிராமண சாஸ்திரிகள், எல்லா மதமும் ஒன்றுதான், உண்மையான மதம் ஒன்றுமில்லையென்பார்கள்; நீ எதை விசுவசித்தாலும் விசுவசிக்காவிட்டாலும் ஒன்றுதான் என்பார்கள். அவர்களோடு வாதாடி என்ன பயன்?'

"சில பிராமண சாஸ்திரிகளின் தற்பெருமை எவ்வளவுதூரம் செல்லுகிறதென்றால், தாங்களிருப்பதே பொய் என்பார்கள் (உலகமெல்லாம் இவர்களைப் பைத்தியர் என்றுதான் சொல்லும்); யோகியானவன் வெகு பத்தியாய் ஓர் ஆற்றங்கரையில் அம்மணமாய் சம்மணம் போட்டு உட்கார்ந்து, மனிதர்கள் ஆடையென்பதையெல்லாம் வெறுத்தவன் போலும், தான் நிருவாணமாயிருப்பதைப்பற்றி பெருமை கொண்டவனைப்போலவும் இருந்து, பிரமன் அல்லது எல்லோருக்கும் பெரிய ஆன்மா அல்லது கடவுள் என்பவரோடு படிப்படியாய் ஒரே ஓர் ஆளாய் போகவேண்டுமென்று கருதித் தபஞ்செய்கிறான். இவன் கடவுள் உண்டென்று விசுவசிக்கிறான். வேறு சாஸ்திரங்களோ பிரம்மன் இல்லையென்றே சாதிக்கிறார்கள். எல்லாவற்றையும் ஒன்றுமில்லாமையினின்று சிருஷ்டித்த சர்வ வல்லபமுள்ளவர் கடவுள் என்பதே தெரியாது. பிரம்மாவும் (பிரம்மனும்) மாயாவுக்கும் கர்மாவுக்கும் ஆளானவன். சர்வேசுரனே வெளிப்படுத்திய புத்தகம் என்று பிராமணர்கள் விசுவசிக்கும் பகவத்கீதை முரண்பாடான இவ்விரண்டு கொள்கைகளையும் ஒன்றிக்கத் தேடுகின்றது இதை எப்படி ஒன்றிக்கக்கூடும்? இப்பொருந்தாத காரியத்தை பொருந்தும்படி, உண்மை பலவிதமானது (அதாவது உண்மையே கிடையாது என்றர்த்தம்) என்று சொல்லுகிறார்கள். ஆதலால் ஒருவன் கடவுள் உண்டென்று நினைத்தால் அவனுக்குக் கடவுள் உண்டாம், ஒருவன் கடவுள் இல்லையென்று நினைத்தால் கடவுள் இல்லையாம். (அதாவது குயவன் ஒருவன் மட்கலம் ஒன்றைச்செய்து அது பொற்குடம் என்று நினைக்கால், அது பொற்குடமாம்; வாங்கிறவர்கள், பவுன், பவுனைக் கொடுத்து வாங்குவார்கள்— இது பைத்தியமல்லவா? அதுபோலவே ஆடிமாதத்தில் காவேரியாற்றில் வெள்ளம் இருகரையும் புரண்டோடும்போது, ஓர் முட்

டாள் தண்ணீர் இல்லையென்று நினைத்துக்கொண்டு ஆற்றில் இறங்கினால் அவன் மோசமின்றி மணல்மேல் நடப்பதுபோல் நடந்து அக்கரைசேர்வானா? என்ன மூடத்தனம்!) அதுபோலவே கடவுள் ஓர் ஆள் என்று நினைத்தாலும், கல், மண்ணைப்போல் ஓர் பொருள் என்று நினைத்தாலும் இரண்டும் உண்மைதானாம். பிராமணர்களே எப்போதாவது இப்போர்க்கொத்த அபத்தங்களை உண்மையென்று நம்பினார்களா? இது பித்தம் பிடித்தவன் கனா! ஜனங்களும் இதைச் சட்டைசெய்வார்களா? இல்லை. ஆதலால் அவர்களுக்கு ஏதாவது கண்டுபிடிக்கவேண்டும்; வீண் சடங்கும் சாஸ்திரமும் சொல்லிக்கொடுக்கவேண்டும்; அவர்களுக்குப் பிரியமானதைச் சொல்லிக்கொடுத்தால்தான் அவர்களை ஏமாற்றலாம். ஓர் அகங்காரியைக் கண்டால்; நீ தேவனாய்ப் போய்விடுவாய்; ஆயிரம் அசுவமேதம் செய், தேவர்களுக்கெல்லாம் தலைவனான இந்திரனைப்போலாகிவிடுவாய், அவனைப்போல் நீ வேறு உலகம்கூடச் செய்யமுடியும், என்பார்கள். ஓர் சிற்றின்பப் பிரியனைக்கண்டால், இதிலென்ன ஆச்சரியம் நமது தேவர்களும், தேவதைகளுங் கூட சிற்றின்பப் பிரியர்கள்தான்; அவர்கள் செய்தவற்றையெல்லாம் பார், இவ்வுலகத்திலிருக்கும் எல்லாச் சம்போகத்தையும் அநுபவி; நமது கோவில்களிலேயே இவைகளைச் சொல்லித்தருகிறோம்; தேவ தாசிகளை ஏன் அங்கே வைத்திருக்கிறது, வியபிசாரம் எல்லாம் ஒழுங்கு என்று ஏற்படுத்திவிடுகிறோம் என்பார்கள். ஒருவனுக்கு அதிகாரமும் செல்வாக்கும் வேண்டுமா? சூத்திரர் எல்லாம் உன் சேவையில்தான், அவர்கள் எல்லோரும் உனக்கெல்லாம் செய்வார்கள் என்பார்கள்" என்று உபந்நியாசம் செய்திருக்கிறார்.

இவர் சொல்லியதை வாசித்தபின், ஏன் அவருக்கு இந்துக்களோடு தர்க்கஞ்செய்யப் பிரியமில்லையென்று தெரியவருகிறது. வேறோர் காரணம் ஏதெனில், அவர் தந்தையே ஓர் பெரிய சாஸ்திரி; அவரிடமிருந்து சிறுபிள்ளை முதல் இந்துமதத்தைப்பற்றி எல்லாங் கற்றிருந்தபடியால், தன்னோடு தர்க்கம் செய்யவரும் இந்துக்களின் வாயை வெகுசீக்கிரம் அடைத்துவிடுவார். "இவையெல்லாம் நானும் படித்திருக்கிறேன், உமக்குத் தெரிகிற

அளவு எனக்குந் தெரியும்; நான் எப்படி இவைகளை நம்புவதில்லையோ, அப்படியே நீரும் இவைகளையெல்லாம் விசுவசிப்பதில்லையென்பதும் நான் அறிந்த விஷயமே'' என புன்சிரிப்போடு சொல்லுவார். பிடிவாதமுள்ள தர்க்க நேசர்களும், சிரித்துக்கொண்டு போய்விடுவார்கள். ஓர்தரம் இவரோடு தர்க்கம்செய்ய வந்தவன் இன்னோர்தரம் வரமாட்டான்.

மனந்திரும்புவதற்கு தர்க்கம் ஏற்ற வழிப்பாடென்று அவர் எண்ணவில்லை; ஜெபம், பட்சம், நன்னடத்தை இவைகளே மனந்திருப்புவதற்கு சரியான சாதனங்களென்று எண்ணியிருந்தார். யாராவது அவர் வீட்டில் நுழைந்தால், ஜாதி ஆசாரங்களுக்குப் பயந்து ஐரோப்பிய நடைவுடையின்மேல் ஆசைப்பட்டு இவர் கிறீஸ்துவராகிவிட்டாரென்று சொல்லவேமாட்டான். மெய் வேதத்தைப்பற்றி அறிய ஆசையுள்ள ஓர் இந்துபிராமணன் இவர் வீட்டுக்குப்போய்வந்தபின் சொன்னதாவது: "சப்பாத்து மேஜோடு கால் சட்டை கழுத்துப்பட்டை தரித்துள்ள ஓர் உத்தியோகஸ்தரைப் பார்க்கப் போவதாக எண்ணிப் போனேன்; ஆனால் பழையகாலத்து பிராமணரைப்போலவே வெறுங்காலோடும், வேஷ்டியோடும் இருப்பதைக்காண எனக்கு எதிர்பாரா சந்தோஷமே'' என்பதாம். மேற்சொன்னவரோ மனந்திரும்பிய பிற்காலத்தில், "மகா தேவய்யர் மகாப்படித்துத் தேறியவர், உலக ஞானம் நிறைந்தவர்; கத்தோலிக் மதத்தை நன்றாய்ப் படித்துக் கண்டுணர்ந்தவர், நான் கத்தோலிக் வேதத்தைப் படித்தறிய எனக்கு மகா உதவியாய் நின்றவர்; கபடில்லாத சுத்தமனதுள்ளவர்; ஆங்காரமென்பது அவரிடத்தில் கிடையாது; அவர் பெரிய உத்தியோகஸ்தராயிருந்தபோதிலும், அவரை வெளியில் பார்த்தவர்கள் அவரை டிப்டி கலெக்டர் என்று சொல்லவேமாட்டார்கள்; மனந்திரும்பின புதுக்கிறீஸ்துவர்களுக்கு அவர் மகா தயையும் இரக்கமும் காட்டி, அவர்கள்மட்டில் தந்தையைப்போல் நடந்துகொண்டார்'' என்று சொன்னார்.

தான் மனந்திரும்புவதற்கு ஞான புத்தகங்கள் வெகு பிரயோஜனமாயிருந்தனவாகையால், கத்தோலிக் புத்தகங்களை வாங்

குவதில் காசைச் செலவழிக்க இவர் அஞ்சமாட்டார். இவைகளை ஏராளமாய் வாங்கி யாவருக்கும் இரவலாகவாவது இனமாகவாவது தருவார். சுவிசேஷம், ஞானோபதேசம், கிறிஸ்துநாதர் அநுசாரம், அர்ச். அகுஸ்தீன் சங்கீர்த்தனம், அர்ச்சியசிஷ்டவர்களுடைய சரித்திரப் புத்தகங்கள் முதலியவைகளை வாசித்தல் உண்மையைக் கண்டறிய உத்தம வழியென்று தீர்க்கமாயறிந்திருந்தார்.

ஆத்தும இரட்சண்ணிய ஆவலால் தூண்டப்பட்டு, எளியவர்களுக்கு உதவிசெய்யச் சமயம் வாய்க்கும்போதெல்லாம் ஏதாவது செய்துவருவார். விசேஷமாய் இவர்களை சர்வேசுரனிடம் கொண்டுவருவதென்றால் தன்னாலான உதவியெல்லாம் தப்பாமற் செய்வார், சர்வேசுரனுடைய உதவியினால் அநேக ஆத்துமங்களை இரட்சித்தார். சங். பில்லியர்ட் சுவாமியாரைப்போல இவரும் அநேகந்தரம் ஏமாறியிருக்கிறார். ஆனால் சங். பில்லியர்ட் சுவாமியார் கொள்கையே இவர் கொள்கை. அக்குரு சிரோமணியைப் பற்றி இவரே சொன்னதாவது: என்னதான் நேரிட்டாலும் எப்பேர்க்கொத்த கஷ்டநஷ்டங்களிலும், எப்பேர்க்கொத்த பதஷ்டத்தை உண்டுசெய்யம் சந்தர்ப்பங்களிலும், சங். பில்லியர்ட் சுவாமியார் நம்பிக்கையைக் கைவிடமாட்டார்; என்னதான் துர்லபமாயிருந்தபோதிலும், எப்பேர்ப்பட்ட எதிர்பாராத விபத்தாயிருந்தாலும், எல்லாவற்றைக்கொண்டும் இவர் ஆறுதலடைவார். எவ்வளவுதான் மோசம்போனாலும், எப்பேர்க்கொத்த மனம் நைந்தொடியக்கூடிய நசுநசுத்த சமயாசமயங்களிலும், அவர் கோபப்பட்டவரல்லர்; சங். பில்லியர்ட் சுவாமியார் கோபங் காட்டும் நாள் உலகம் முடிவுக்கு வருமென்று மகா. சங். பெஸ் சுவாமியார் சொல்வார். அவர் நம்பினவளவு பலன் வராவிடில், வந்ததைக்கொண்டு திருப்தியடைவார். எல்லாச் சமயத்திலும் நல்லவார்த்தை ஏதாவது சொல்லவேண்டுமென்பது இவர் எண்ணம்; ஆதலால் யார் எவ்விஷயமாய் அவரிடம் சென்றாலும், ஆளுக்குத் தகுந்ததுபோல், மரணத்தைப்பற்றியும், உலக நிலையாமையைப்பற்றியும், மோட்சத்தைப்பற்றியும், ஞான சீவியத்தைப்பற்றியும் ஏதாவதொரு புத்திமதி சொல்லாமலிருக்கமாட்

டார். ஆயிரந்தடவை ஏமாந்துபோயும் ஓர் ஆத்துமத்தை மனந்திருப்புதலானது, கெட்டிக்காரன், புத்திமான் என்று பேர்வைத்துக்கொண்டு கைகட்டிக்கொண்டிருப்பதைவிட மேலானது என்று அடிக்கடி சொல்வார்'' என்பதாம்.

1915-ம் வருஷம் ஏப்பிரல் மாதம் பழைய மாணவர் கூட்டத்தில், "முதல் நூற்றுண்டுகளில் கிறீஸ்துவர்களாகிறவர்கள் தங்கள் உயிரைக் கொடுக்கவேண்டியிருந்தது; இது ஓர்விதத்தில் இன்பமானதே; சர்வேசுரனுக்கு தன் இரத்தத்தைச் சிந்தி வேதசாட்சியாக மரிப்பது பெருமையுள்ளது, பிறர் கண்ணிற்கும் மகிமையுள்ளது, இப்பேர்க்கொத்த வீரச் செயல்களுக்கு நல்ல இரத்தமுள்ளவர்களிடத்தில் உற்சாகம் பிறக்கிறது; ஆனால் இழிவிலும், தாழ்விலும், தாரித்திரத்திலும் மனிதர் கண்முன் என்ன மகிமை, இவைகளை அநுபவிக்க சுபாவத்திலேயே என்ன உற்சாகம் உண்டு. இந்து தேசத்தில் கிறீஸ்துவர்களாகிறவர்களுக்கு வருஞ் சிலுவை இவைகளே. சர்வேசுரன் கண்முன்னும் சம்மனசுக்களின் கண்முன்னும் இச்சிலுவை விலையுயர்ந்ததே. ஆகிலும் மனிதர் மனதுக்கு இரம்மியமில்லாத சிலுவை; சிலர் இப்பேர்க்கொத்த தாரித்திரத்திலும், தாழ்விலும் ஜீவிப்பதைவிட, வேதத்திற்காக உயிர்கொடுக்கத் தயாராயிருக்கிறார்கள்' என்று சபையை விசாரித்தவர் சொன்னார். அப்போது இவர் சொன்னதாவது: கிறீஸ்துவர்களாக விரும்புகிறவர்களுக்கோ புதுக்கிறீஸ்துவர்களுக்கோ உலக காரியங்களிலும் பண விஷயத்திலும் உதவிசெய்வது தப்பிதமென்று சிலபேர் எண்ணலாம். ஆனாலும் இப்பேர்ப்பட்ட உதவி கத்தோலிக் கிறீஸ்துவர்கள் செய்யவேண்டுமென்பது திண்ணம். அர்ச். சின்னப்பர் தன்னுடைய புதுக்கிறீஸ்துவர்களுக்கு உதவியாக பணம் வசூல் செய்யவில்லையா? நம்மைவிட இப்பெரிய அப்போஸ்தலர்களே, இலெளகீக விஷயத்தில் உதவிபுரிய அதிகம்உழைத்துவந்தார்கள். புதிதாய் மனந்திரும்புகிறவர்கள் வீட்டைவிட்டுத் துரத்தப்பட்டு, சாப்பாட்டுக்குமுதலாய் யாதொன்றுமின்றி கஷ்டப்படுவதைக் கண்டவர்களுக்கு இதைப்பற்றி அதிகம் சொல்லத் தேவையில்லை. சிலநாளைக்குமுன் சென்னையில் இரண்டுபேர் மனந்திரும்பினார்

கள்; அவர்கள் மனந்திரும்பினவுடனே யாவராலும் கைநெகழப் பட்டார்கள்; பழைய கிறீஸ்துவர்கள்தான் அவர்களைக் காப்பாற்ற வேண்டியதாயிற்று. நான் அவர்களுக்கு காற்றையும் தண்ணீரையுமாகச் சாப்பிடக் கொடுப்பேன்" என்றார். மேற்சொன்ன வர்த்தமானம் நடந்தபோது மகாதேவய்யர் ரூ 500 சம்பளத்தில் சென்னையில் இருந்தார். இவர் வீடு பிராமணருக்கும் பிராமணரல்லாதவர்கட்கும் எப்போதும் திறக்கப்பட்டிருந்தது. இவருடைய வீட்டிற்கு விருந்தாடியாக வந்தவர்கள் சிலமாதங்களாக வல்ல; சில வருஷங்களாகக்கூட அங்கே தங்கியிருந்தார்கள். இவர்களுக்கு காற்றும் குளிர்ந்த ஜலமும்மாத்திரம் கொடுக்கவில்லை; ஒரு தந்தையைப்போல் வெகு கவலையாய்ப் பார்த்துக் கொண்டாரென்று அவர்கள் எல்லோரும் ஒரேவாய்ப்படச் சொல்வார்கள்.

அவரைப்பற்றி பி. ஏ. பரீட்சை கொடுத்த ஓர் புதுக்கிறீஸ்துவர் சொல்லுகிறதைக் கேளுங்கள்: மகாதேவய்யர் ஓர்நாள் சென்னையில் சங். சோத்தியர் சுவாமியாரைப் பார்க்க வந்திருந்தார். அங்கேதான் முதன் முதல் நான் அவரைச் சந்தித்தேன். நான் அவருடைய விருத்தாந்தத்தை கேட்டிருந்தேனாகையால், அவர் எப்படி மனந்திரும்பினாரென்பதைச் சொல்லும்படி கேட்டேன்; மளமளவென்று வெகு உற்சாகமாய்ச் சொன்னார். அவர்மேல் எனக்குப் பிரியம் ஏற்பட்டது. அவர் கூப்பிட்டதின்மேல் அவர் வீட்டுக்குச் சென்றேன். அவரைப்போலவே, அவர் குடும்பமும் வெகு சந்தோஷமாய் என்னை வந்து உபசரித்தார்கள். நான் பரீட்சை எழுதியபின் திருச்சிக்குத் திரும்பிவருமுன் அவருடைய வீடு நோக்கிச் சென்றேன். கடைசிப் புத்திமதியாக என்னைப் பார்த்து: உனக்கு கத்தோலிக் மதத்தின்மேல் அபிமானமிருக்கிறபடியால், சீக்கிரம் மனந்திரும்பவேண்டும், அல்லாவிடில் வரப்பிரசாதத்தை எதிர்த்து நிற்பதுபோலாகும்; நீ மனந்திரும்பினபிற்பாடு உனக்கு ஏதாவது கஷ்டங்கள் நேரிடுமேயாகில் என் வீடு உனக்குத் தயாராயிருக்கிறது என்று சொன்னார். நான் மனந்திரும்பி வீட்டைவிட்டு ஓட நேரிட்டபோது, இராயபுரத்திலிருந்த மகாதேவய்யரிடம் சென்றேன். நான் ஞானஸ்நானம்

பெற்றுவிட்டேன் என்று கேள்விப்பட்டவுடனே, கண்களில் நீர் பெருக சேசுவின் திரு இருதயச் சுரூபத்துக்குமுன் முழந்தாளிட்டு, எனக்காண்டவர் செய்த கிருபைக்காக அவருக்கு நன்றி செலுத்தினர். அன்று முதலாய் என்னை ஒரு சிநேகிதனைப்போல் பாவித்துவந்தார். அசையாமல் நிலைகொண்ட உயிருள்ள விசுவாசமே அவர் பிரமாணக் கொள்கை என்பேன்" என்று வரைகிறார்.

10-ம் அதிகாரம்.

உத்தியோகஸ்தர்

"முந்த முந்த சர்வேசுரனுடைய இராச்சியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; அப்போது மற்றவைகளெல்லாம் உங்களுக்குக் கூட்டிக்கொடுக்கப்படும்" என்ற சுவிசேஷ வாக்கியமானது இவரிடம் சரிவர நிறைவேறிற்று.

இவர் பி. ஏ. பரீட்சையில் தேறினவுடனே கலெக்டர் கச்சேரியில் 15 ரூபாய் சம்பளத்தில் அமர்ந்தார்; 30-வருஷத்திற்கு முந்தி, சர்க்கார் உத்தியோகத்தில் உயர எழும்புவர்கள் முதலாய் முதன் முதல் இப்படித்தான் தொடங்கினர்கள்; ஆனால் இச்சமயத்தில் கோவிலுக்கும் குருக்களுக்கும் சமீபத்தில் இருக்கும்படி, 40 ரூபாய் சம்பளமுள்ள வேறொரு வேலையை எப்படி வேண்டாமென்று சொல்லிவிட்டாரென்று முன்னமேயே சொல்லியிருக்கின்றோம். ஆகிலும் இப்பதினைந்து ரூபாயில் வேலையில் போய் அமர்ந்தாலும், சர்வேசுரனுடைய ஆசீர்வாதத்தால், கொஞ்சங் கொஞ்சமாய் டிப்டிக்கலெக்டராய் மாதம் 750 ரூபாய் வாங்கலானர்.

ஞானஸ்நானம் பெற்றபின் திருச்சினப்பள்ளியிலாவது அதனருகிலேயாவது ஆறு ஏழு வருஷங்களாக இருந்தார். மருங்காபுரி ஜமீனிலுள்ள கிராம பரிபாலனையை முன்னுக்குக் கொண்டுவர ஓர் புது வழிப்பாடு எழுதி இவர் அனுப்பவே, இது அப்போது திருச்சினப்பள்ளி கலெக்டராகிய ஷப்ளி துரைக்குப் பிரியப்பட, இவரே மருங்காபுரி ஜமீன் மானேஜராக நியமிக்கப்பட்

டார். இதைக்கண்டு சில இந்துக்கள் காய்மகாரங்கொண்டு, இந்துக்கள் கோவில் மடங்களின் பணவிபரங்களை ஓர் கத்தோலிக்கருக்குக் கொடுப்பது நல்லதல்லவென்று விண்ணப்பம் செய்து கொண்டார்கள். மகாதேவய்யருடைய நேர்மையையும், விசுவாசத்தையும், திறமையையும் அறிந்திருந்த பெரியோர்கள் இவரையேதான் நியமித்தார்கள். மருங்காபுரியில் யாவரும் வெகுசீக்கிரம் இவரை நேசிக்கத் தொடங்கினார்கள்; $2\frac{1}{2}$ வருடங்கள் சென்றபின் அவர் அவ்விடம் விட்டுப் போகும்போது, அங்குள்ள பயிர் செய்பவர்கள் ஏறக்குறைய எல்லோரும் இந்துக்களானபோதிலும் அழுதுகொண்டு வெகுதூரம் அவரைப் பின்தொடர்ந்து வந்தார்கள்.

மருங்காபுரியில் இவர் செய்தவைகளையெல்லாம் அறிந்தபின், பெரிய உத்தியோகத்துக்கு வரவேண்டியவர் இவரென்று யாவரும் சொன்னார்கள். நெல்லூரில் ஆறுமாதம் பயின்றபின் (Land Record Tahsildar) லான்ட் ரிக்கார்ட் தாசில்தார், (Land Record Superintendent) லான்ட் ரிக்கார்ட் சூப்பெரின்டென்டெண்ட் முதலிய பல வேலைகளில் அமர்ந்தார். இந்த டிப்பார்ட்மெண்டில் 10 ரூபாய் சம்பளமுள்ள கர்ணம் செய்யவேண்டிய வேலை முதல் 3500 ரூபாய் சம்பளமுள்ள உத்தியோகஸ்தர் செய்யும் வேலைவரை எல்லா வேலையையும் இவர் நன்கறிந்திருந்தார். இந்த டிப்பார்ட்மென்றை நீக்கியபின், இவருடைய பிரயாசைக்குச் சன்மானமாக ராவ்சாகிப் பட்டம் பெற்றார்.

மற்ற சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் என்ன செய்தபோதிலும் தான் கத்தோலிக்கன் என்னும் அறிகுறியாகவும் பிறருக்கு ஓர் முன் மாதிரிகையாகவும் விளங்கும்படி எப்போதும் தான் விசுவாசமாயும் பிரமாணிக்கமாயுமிருக்கவேண்டுமென்று முதல் துவக்கியே இவர் தீர்மானஞ் செய்திருந்தார். அப்படியே நடந்தும் வந்தார். இவரைப்போல் விசுவாசமுள்ளவர்கள் தனக்கடியில் ஒருவருமில்லையென்று திருச்சியில் ஓர் கலெக்டர் சொன்னார். இவருடைய விசுவாசத்தையும் நேர்மையையுங் காட்ட அநேக கதைகள் விளங்கிவருகின்றன.

ஒருவரிடமிருந்தும் ஓர் இலஞ்சமா, இனமா வாங்கவேமாட்டார். மருங்காபுரியில் இருக்கும்போது வேலையிலிருந்து வீட்டுக்

குவந்த ஓர்நாள், திண்ணையில் ஓர் கூடைநிறைய நல்ல மாம்பழங்கள் இருக்கக்கண்டு, என் இத்தனை வாங்கவேண்டுமென்று தன் மனைவியைக் கேட்க, அவள் தான் விலைக்கு வாங்கவில்லையென்றும், பேர்சொல்லி யாரோ ஓர் ஆள் கொடுத்ததாகவும் சொல்ல, கூடையை இவர் எட்டி உதைத்தார், மாம்பழமெல்லாம் வீதியில் உருண்டோடின; தெருவில் போன பிள்ளைகள் சந்தோஷமாய் அவைகளைப் பொறுக்கினார்கள்.

இன்னோர்தரம் அவர் மரிப்பதற்கு ஓர் வருடத்திற்குமுன் அவர் உத்தியோக விஷயமாய்ச் சுற்றிவரும்போது, ஓர் விபசாயி ஓர் பெரிய பரங்கிக்காயை அவருடைய சமையற்காரனிடம் கொடுத்தான். இவர் அதைப் பார்த்தபோது, இரண்டுபேருக்கு இவ்வளவு பெரியகாய் என்னத்திற்கு என்க, அவன் யாரோ ஒருவன் இதை இனமாகக் கொடுத்ததாகச் சொன்னான். "என் உத்தரவின்றி ஏன் வாங்கினாய்? கொண்டுபோய்க் கொடுத்துவிடு" என்றார். சமையற்காரன் அதைத் தன் துணிமூட்டையில் வைத்துக் கட்டி திருச்சிக்குக் கொண்டுவந்தான். இதைப் பார்த்தபோது மறுபடியும் அய்யரவர்கள் சத்தம்போடத் தொடங்கினார்; அவர் மனைவி வந்து, இது என்ன பெரியகாரியம்? இதற்கு ஏன் இச்சத்தம்" என்று சாந்தப்படுத்தினாள்.

மகா ஊக்கத்துடன் தன் வேலையை இவர் செய்துவந்தபோதிலும், கிறீஸ்துவருக்குரிய விசுவாசத்தையும், சிநேகத்தையும் எல்லாக் கிரிகைகளிலும் காட்டினார். சுபாவமாகவே இவர் கொஞ்சம் முன்கோபமுள்ளவரானாலும், தனக்குக் கீழ்ப்பட்ட வேலையிலிருப்பவர்களிடம் வெகு சாந்தமாயும் பெரியதனமாயும் நடந்துகொண்டு, தாய்க்குரிய பொறுமையோடும் சிநேகத்தோடும் வியாதிகாலத்தில் அவர்களை ஆதரித்து வருவார். காலையில் அவர் மருந்துகள் கொடுத்துக்கொண்டிருப்பதை அநேகந்தரம் பலர் பார்த்திருக்கலாம். எளியவர்களுக்கு உபகாரஞ் செய்யும்பொருட்டு, மருந்து வகைகளையும் கொடுக்கும் விதத்தையும் படிக்க உத்தேசித்திருந்தார்.

11-ம் அதிகாரம்.

கத்தோலிக்கரின் ஜீவியம்.

மகாதேவய்யர் விசுவாசத்தின் உருவே என்று சொல்லலாம்; விசுவாசத்திற்கு முன் வேறெந்த காரணங்களும் ஒன்றுமில்லாதது போலாம். சத்திய வேதத்தைப்பற்றிய காரியங்களில், இவ்வித்த கையான சமயங்களிலும் சந்தர்ப்பங்களிலும் இவர் என்ன செய்வாரென்று, நாம் ஏற்கனவே அது நடப்பதற்கு முன்னாலேயே சொல்லிவிடலாம். கலக குழப்பம் நேரிடும்போது, திருச்சபையின் அதிகாரிகள் தன்னிலும் இளையவர்களாகவாவது தன்னைவிட கொஞ்சம் புத்தியுள்ளவர்களாகவாவது இருந்தபோதிலும், அவர்கள் பக்கமே சாருவார். குருக்களிடம் புழங்கும்போது அவர்கள் வெறும் மனிதர்களென்று இவர் பாவிக்கவில்லை; கிறீஸ்துநாதரின் பிரதிநிதிகளாகவும் எல்லாக் கிறீஸ்துவர்களின் தந்தைகளாகவும் பாப்பரசரின் ஸ்தானாபதிகளாகவுமே குருக்களைப் பாவித்து அவர்களோடு புழங்கிவருவார். திருச்சி கலாசாலையின் பழைய மாணவர்கள் சங்கம் ஒன்றில் இவர் சொன்னதாவது: நமது இரட்சணியத்தின் அலுவலானது இவ்வுலகத்தில் மகா மேன்மையான தவறாத வரமுடையவருக்கு ஒப்புக்கொடுத்திருப்பது நமக்கு எவ்வளவோ பாக்கியம். சர்வேசுரனுடைய அதிகாரத்தின் அம்சமும் அச்சுமான இவ்வுந்த அதிகாரத்தோடு நாம் நம்மாலியன்ற சிற்றளவில் ஒத்துழைப்பது பாக்கியமே; நமது தாயாகிய திருச்சபையின்மேல் எந்நிமிஷம் நம்முடைய நம்பிக்கை குறையுமோ, அன்று நாம் நாசத்தின் பாதையை நாடிச் செல்கின்றோம். நமது திருச்சபையின்மேல் நமக்கு ஓர் சொல்லொண்ணா அபிமானம் வேண்டும்; நம்முடைய குருக்களுக்கும் மேற்றிராணிமார்களுக்கும், நேர்மையாய நடந்து பிரமாணிக்கமாயிருக்கவேண்டும். எப்படி தேசபக்தி இராஜபக்தி இன்றியமையாததோ, அப்படியே குருக்கள் பக்தி, மேற்றிராணிமார்கள் பக்தியும் அவசியமானதே. திருச்சபையின்மேல் நமக்கிருக்கவேண்டிய பக்திக்கும் அபிமானத்திற்கும் அநேக காரணங்கள் உண்டு. நமது திருச்சபையானது சர்வேசுரனுடைய ஏற்பாடு. அதை ஓர் மனித ஏற்பாடாகப் பாவி

த்தாலும், அது நமக்கோர் பெருமையல்லவா? சத்திய திருச்சபைக்கு புறம்பாயுள்ள எந்த ஏற்பாட்டில், இப்பேர்ப்பட்ட ஒழுங்குகளும் அதிகாரமும் வல்லமையும் ஒழுக்கமும் உண்டு? சத்திய திருச்சபையின் முன்னால் மற்ற வேதங்களை ஒப்பிட்டுப் பாராப் போமேயாகில்; நடினசாலையும், குளங்களும், எல்லா சௌகரியங்களும் உள்ள ஓர் கப்பலுக்குமுன்னால், எவ்வித சிறு அலைகளாலும், காற்றாலும் ஆட்டப்படும் கட்டுமரங்கள் தோன்றுமோ அப்படியே இம்மதங்களுமாம்" என்று இது முதலிய அநேக காரியங்களைக் கூறினார்.

ஞானஸ்நானம் பெற்று இருவருடம் ஆகுமுன்னரே, கத்தோலிக் பழைய மாணவர் சங்கத்தில் அவர் சொன்னதாவது: "நீங்கள் எப்போதும் சத்திய திருச்சபையிலிருக்கிறீர்கள்; நான் புதிதாய் வந்தவன். புயலிலும் மழையிலும் அடிபட்டு, அலைகளால் நாலாபக்கமும் எறியப்பட்டு, வெகு கஷ்டத்திற் காளானபின், களைத்துத் தவித்து, கீழ்மூச்சு மேல்மூச்சு வாங்க, கடலையும் கப்பலையும்விட்டு, அமிழ்ந்திப் போவோமென்கிற ஆபத்தையெல்லாம் கடந்து, விசுவாசமாகிய துறைமுகம் வந்து சேர்ந்திருக்கிறேன். உங்களிலநேகம்பேர் ஒருபோதும் கடலிலிருந்ததில்லை; உங்கள் சிறுவமுதல் நீங்கள் சத்திய வேதத்திலிருந்தவர்கள்; உங்கள் தாய்ப்பாலோடு விசுவாசத்தையும் பருகி வளர்ந்தீர்கள்; விசுவாசத்தின் பொக்கிஷத்தைக் கண்டடையும் பாக்கியம் ஏதென்று நீங்கள் அறியீர்கள். அஞ்ஞானமென்னும் சேற்றில் நான் அமிழ்ந்திக்கிடக்கும்போது, அச்சேற்றிலிருந்து என்னைத் தூக்கி விசுவாசத்தின் கரைக்குக் கொண்டுவந்து சேர்த்தது நமது நல்ல தாயாகிய திருச்சபையே. இத்தாயின் முகத்தை நீங்கள் உற்றுநோக்கினதுண்டா? அவ்வதனத்தின் அழகைப் பருகினதுண்டா? மாமிசத்தாலும் இரத்தத்தாலும் உண்டாக்கப்பட்ட நாம் அவள் வதன சிங்காரத்தைச் சரிவரக் கண்டுபிடிப்பது கூடாதகாரியமே. எப்படி சர்வேசுரனை நாம் கண்ணால் காணமுடியாதோ, அதேபோலவே, அவரால் ஏற்பட்ட திருச்சபையின் அந்தரங்க சௌந்தரியத்தையும் காணுவது கஷ்டமே; அவள் வெளியரங்க உருவைத்தான் சற்றே காணலாம். நமது தாயாகிய திருச்சபை ஏற்பட்ட விதம்

எவ்வளவோ உந்நதமானது; உலக முடியுமட்டும் இருப்பவள் அவளே. அவள் மனிதரை மோட்சத்துக்குக் கொண்டுபோகும்படி உண்டாக்கப்பட்ட சபை. அவள் ஜீவியம், ஞான ஜீவியம், வரப்பிரசாதத்தின் ஜீவியம்; அவள் அலுவலெல்லாம் வரப்பிரசாதத்தின் ஊற்றாகிய நமதாண்டவர் சேசுக்கிறீஸ்துநாதரிடத்தில் நின்று புறப்படுகின்றன. அவள் மனிதருக்கு தேவ இஷ்டப்பிரசாதத்தைக் கொடுத்து, அவர்களை மோட்ச இராச்சியத்துக்குச் சுதந்தரவாளிகளாக்குகின்றாள். (இராய்) கல்லின்மேல் கட்டப்பட்ட நாள்முதல் அவள் இவ்வேலையைச் செய்துவந்திருக்கின்றாள்; இன்னும் அதையே செய்துவருகிறாள்; நாளைக்கு நானும் நீங்களும் இவ்வுலகைவிட்டுப் போனபின்னும், அவளோ அழியாமல் நின்று அவ்வேலையைச் செய்துவருவாள். இவ்வுலகில் அவள் ஓர் அந்நியள். இவ்வுலகத்தின்மேல் அவளுக்குப் பிரியமில்லை; உலகமும் அவளை அறிவதில்லை......" என்பதாம்.

இவ்வுயிருள்ள நிலைமையான விசுவாசமே. மகாதேவய்யரின் ஞானக் கட்டடத்தின் அஸ்திவாரம் போலவும். அவருடைய பல புண்ணியங்களுக்கு வேராகவும், அவர்மேலுள்ள ஜனப்பிரீதிக்குக் காரணமாகவும் இருந்தது. சாந்தகுணமுள்ளவர்கள பாக்கியவான்கள் ஏனெனில் அவர்கள் பூமியை சுதந்தரித்துக்கொள்வார்கள் என்று நமதாண்டவராகிய சேசுநாதர் திருவாய் மலர்ந்தருளியுள்ளார். தனக்கு அறிமுகமானவர்கள் இருதயங்களையெல்லாம் அய்யரவர்கள் கவர்ந்துகொண்டார்கள்; அவருடைய சீவியமே மேற்சொன்ன பாக்கியத்தின் அத்தாட்சியாகவிருந்தது. அவர் அடக்கமும் தாழ்ச்சியும் சாந்தகுணமுந்தான், அனைவரையும் காந்த ஊசிபோல் இழுத்தன. அவர் ஞானஸ்நானம் பெறுமுன்னரே சோதனைகளைச் ஜெயிக்கும்போதும் புண்ணியங்களைச் செய்யும்போதும் பேறுபலனடைந்தாலும் எப்படி தாழ்ச்சியை அநுசரிக்கலாம் என்று கேட்டிருந்தார். வெகுகாலமாக தன்னுடைய தியானத்தின் ஜெபத்தின் நோக்கமும் தாழ்ச்சியென்னும் புண்ணியத்தையடைய நாடியிருந்தன. "சர்வேசுரன் ஆங்காரிகளை எதிர்த்துநின்று தாழ்ச்சியுள்ளவர்களுக்கு தன் வரப்பிரசாதத்தைக் கொடுக்கிறார்" என்று இவருக்கு நன்றாய்த் தெரியும். தான்

மனந்திரும்புவதற்குள்ள விக்கினங்களையும் சோதனைகளையும் நன்ருய் உணர்ந்தவராகையால், புதுக்கிறீஸ்துவன் எவனும், விசேஷமாய் புதிதாய் மனந்திரும்பின பிராமண கிறீஸ்துவன் எவனும் தாழ்ச்சியில் வெகுவாய் விர்த்திப்படைந்திருந்தாலொழிய நிலைத்திருக்கமாட்டானென்று திண்ணமாய் எண்ணியிருந்தார்.

இவரோ தாழ்ச்சியென்னும் புண்ணியத்திற்கு ஓர் நல்ல முன்மாதிரிகை: இவர் வார்த்தையிலும் நடத்தையிலும் ஆங்காரம், டம்பம், சிலாக்கியம் முதலியவைகளை ஒருவரும் பார்த்திருக்கவே மாட்டார்கள். அவர் எதிர்பாராமலிருக்கும்போதே ராவ்சாகிப் பட்டம் அவருக்கு வந்தபோதிலும், அதினுல் அவர் ஒருபோதும் கர்வங்கொண்டவரல்ல; இம்மகிமைச்சின்னத்தை எந்நாளிலாவது அவர் தரித்ததை யாரும் கண்டதில்லை. புதுப் பிராமணக் கிறீஸ்துவர்கள் ஞானஸ்நானம் பெற்றவுடனே, உலக இரட்சகர் கோவில் கத்தோலிக்கர், கோவிலில் ஓர் விசேஷ இடத்தில் இருக்கும்படி இவர்களைக் கேட்டுக்கொண்டாலும், இவர் அதற்கு சம்மதியாமல் வித்தியாசம் யாதொன்றுமின்றி எல்லோரோடும் கலந்து உட்காருவார். இவருடைய ஜீவிய முடிவு காலத்தில் உலக இரட்சகர் கோவிலில் மேன்குல ஜாதியாருக்கும், ஆதி திராவிடருக்கும் மத்தியில் கிராதிகளிருக்கின்றன என்று கேள்வியுற்று; அவ்வுயர்ந்தவர்களுக்குப் படிப்பினையாக அடிக்கடி இரட்சகர் கோவில் சென்று, தீண்டா ஜாதியென்று சொல்லுகிற ஜாதிக்காரர்கள் மத்தியில் போய் முழங்காலிலிருந்து வேண்டிக்கொள்வார்; ஞானஸ்நானம் பெறுஞ் சமயத்திற்கும் இப்போதைக்கும், எவ்வளவு வித்தியாசம், தாழ்ச்சியில் என்ன விர்த்திப்பு! ஞானஸ்நானம் பெறுமுன் கீழ் ஜாதியார் வசிக்கும் ஜாகையில் தாங்கள் குடியேறமாட்டோமென்று சொன்னவர் இப்போது இக்கூலிகள் மத்தியில் முழந்தாட்படியிடுகிருர். ஏன் இவ்வித்தியாசம்? நான் தாழ்ச்சியும் சாந்தமுமுள்ளவனென்று என்னிடமிருந்து கற்றுக்கொள்ளுங்கள்" என்று சொன்ன சேசு ஆசிரியர் பள்ளிக்கூடத்தில் படித்துவந்ததே இம்மாற்றத்திற்குக் காரணம்.

இத்தாழ்ச்சியின் முதற்பலனுக இவரிடத்தில் விளங்கினது சாந்தமும் பொறுமையுமே. சுபாவமாகவே இவர் முன்கோப

முள்ளவர். தன்னைத்தானே வெகு காலமாய் அடிக்கடி அடக்கி வந்ததினால், யாவர்மட்டிலும் எச்சமயத்திலும், அடக்கமாகவும் அமைதியாகவும் இருந்தார்; மதத்துக்கும், நேர்மைக்கும் விரோதமாய் எதாவது நடந்தால்தான் கொஞ்சம் கோபம் காண்பிப்பார். சுயநலத்தைக் கருதியவரல்லர்; ஒருவர்மட்டிலும் பகை கொண்டவரல்லர்; தன்னைத் தொந்தரைசெய்து தூஷித்துப் பழித்தவர்கள் மட்டிலும் யாதொரு வர்மம் வைத்தவரல்லர்; அவருக்கு விரோதமாய்ச் செய்த எக்குற்றங்களையும் மன்னித்து மறந்து மனச்சந்தோஷமாய்ப் பேசும் வழக்கம் இவருக்குண்டென்று யாவரும் அறிந்திருந்தார்கள்; ஆகிலும் இச்சாந்த பொறுமையின் காரணம் யாதென்று யாவரும் அறிந்திருக்கமாட்டார்கள். பெற்றுக்கொள்வதைவிட கொடுப்பது அதிக பாக்கியமானதென்று ஆண்டவராகிய சேசுநாதர் சொன்ன வார்த்தை இவர் ஞாபகத்தில் எப்போதும் இருந்தபடியால், முதல் முதல் தானே மற்றவர்களைப் பொறுத்து தனக்குத் தீமை விளைவித்தவர்கட்கு யாதொரு நன்மையோ உபகாரமோ செய்ய விரும்பினார்.

இவருடைய கபடற்ற இனிமையும் சாந்தமும் நிறைந்த வழிகளும் நடத்தையும் இந்துக்களுடையவும் கிறீஸ்துவர்களுடையவும் சிநேகத்தை சம்பாதித்தது. கத்தோலிக்கர் தங்கள் மதத்தைப்பற்றி வீணாய்ப் புகழும்போதுதான், சிற்சில சமயம் இவர் இனிமை இவரைவிட்டு நீங்கும்; அவர்களுடைய சமயங்களின் அனர்த்தங்களையும் சாரமற்றவைகளையும் எடுத்துக்காட்டி அவர்கள் வாயை அடைப்பார்.

புதுக்கிறீஸ்துவர்களுக்குமட்டுமன்று துன்பப்படும் யாவருக்குமே அவர் ஆறுதல் சொல்லி உதவி செய்துவருவார். கல்லைப் போன்ற மனத்திடனையும் இழகிய மெழுகுபோன்ற இருதயத்தையும் உள்ளவர்கள் சொற்பமே. ஆகிலும் மகாதேவய்யர் இவ்விரண்டு குணங்களும் அமையப்பெற்றிருந்தனர். எப்பேர்ப்பட்ட நிந்தை உபத்திரவம் பழி வந்தபோதும், அசையாத் தூணைப் போல், அவைகளைத் தாங்கிவருவார்; வறியரின் கண்ணீரோ, அனலில்பட்ட மெழுகைப்போல் அவர் இருதயத்தைக் கரைத்

தது. இவருடைய இரக்க தயாளத்தைப்பற்றி சொல்லிமுடியாது. அவருடைய உபகாரப்பெருக்குக்குக் கரையென்பதே கிடையா. அவர் மரித்தபின்தான் அவர் செய்த தான தருமங்களில் சில வெளியாயின. இவருக்கு உறவினரல்லாதவர் அநேகர் வந்து அழுது கொண்டு "இவர் எனக்கு ஓர் தாயைப்போல இருந்தார்; அவ்வச்சமயத்தில் என்னை ஆதரித்தவர் இவரே......" என்று சொன்னார்கள். மெய்பாகவே ஏதாவது தேவையுள்ளவருக்கு இவர் உதவி செய்யாமற் போனதேயில்லை; தன்னால் செய்யக்கூடியதெல்லாம் செய்தனுப்புவார்; இவருடைய உதவியைத் தேடிவந்தவர்களிடத்தில் இவர் அடிக்கடி சொல்லுவதேதெனில்: "என்னால் இப்போது ஒன்றும் முடியாது; ஆகிலும் பங்கு சுவாமியாரிடம் சிபாரிசு செய்கிறேன்; நாளை நாளன்றைக்கு அவரைப் போய்ப் பார்" என்பார். பின் இவரே பங்கு சுவாமியாரிடம் விரைந்து சென்று, "சுவாமி, இவ்விப்பேர்ப்பட்டவர் உங்களிடத்தில் வருவார், அவருக்கு என் பேரைச் சொல்லாமல் இதைத் தயவுசெய்து கொடுங்கள்" என்று சொல்லி, அவர் கையில் பணத்தைக்கொடுத்துவிட்டு வருவார்.

மகாதேவய்யர் மெய்யான தேவபக்தியுள்ளவர்; எழுந்தவுடன் ஜெபம் மனோதியானம் செய்வார்; பின் திவ்விய பூசைக்குச் சென்று, தேவநன்மை உட்கொள்ளுவார். தன் பக்தியை வளர்ப்பதற்காக டோம் கெராஞ்சே என்பவர் எழுதிய திருச்சபையின் ஜெப அநுஷ்டானங்களும் சடங்குகளும் உள்ள 15 புத்தகங்களை வாங்கிவைத்து உபயோகித்து வந்தார். பூசைக்குப் பின்னால் அவரைச் சந்திக்க நேர்ந்தால், அன்று காலை அவர் வாசித்ததைப்பற்றியும், தியானித்ததைப்பற்றியும் பேச ஆரம்பிப்பார். "இன்றைக்கு சுவிசேஷமும் நிருபமும் எவ்வளவோ இன்பமானவை; இவைகளுக்கு ஏற்கவே இன்றைப் பூசையில் செய்த ஜெபங்களும் இருந்தன..." என்பார். மாலையில் வேலைவிட்டு வரும்போது கோவிலுக்குச் சென்று தேவநற்கருணைக்கு முன் வெகுநேரம் இருப்பார்; இதுதான் அவருடைய அந்தியகால மனோதியானம். வீடுசென்று இராப்போசனம் முடிந்தபின், வீட்டோடு இராச்செபமும் ஜெபமாலையும் செய்தபின்னர், தனியே வெகுநேரம்

ஞானவாசகம் வாசிப்பார். முன் சொன்னதுபோல் அர்ச்சியசிஷ்டவர்களின் சரிதையையும் உத்தமதனத்தைப் படிப்பிக்கும் புத்தகங்களையும் வாசிப்பது இவருக்கானந்தம். கத்தோலிக் புத்தகங்களோ, பத்திரிகைகளோ, என்னென்ன வெளிவருகின்றனவோ, அவைகளையெல்லாம் வாசித்தே தீருவார். அர்ச். அகுஸ்தீன், அர்ச். பெர்நர்து, அர்ச். தெரசம்மாள் இவர்களுடைய சீவியமும், இவர்கள் எழுதிய பிரபந்தங்களும் இவருக்கு விசேஷ பிரியம். தருமத்தின் கண்ணுடிபோன்ற இவருடைய பாதுகாவலரான அர்ச். விஞ்சேந்தியார்மேல் பக்தி ஜாஸ்தி. இன்னும் டொன் போஸ்கோ, தேவநற்கருணையின் பக்திக்கு முன்மாதிரிகையான அர்ச். பாஸ்கால் பேலோன் என்பவர்கள்மேலும் இவருக்கு பக்தி அதிகமே. மரிப்பதற்கு ஓர் மாதத்திற்குமுன் அர்ச். பெர்நர்துவின் கடிதங்களை வாங்கி வாசித்துவந்தார்.

இவர் வேலையினிமித்தம் சுற்றுப்பிரயாணம் போகும்போது, தமது ஊமைத் தோழர்களாகிய புதிய ஏற்பாடு, கிறீஸ்துநாதர் அநுசாரம், அர்ச்சியசிஷ்டவர்களின் சரிதையை எடுத்துச்செல்ல மறக்கமாட்டார். ஜனத்திரள் நிறைந்த வீதியில்போனாலும் சந்தடி நிறைந்த கிராமாந்தரங்களில் கூடாரத்தில் இருந்தபோதிலும், அர்ச். சின்னப்பர் சொன்னதுபோல "நமது சஞ்சாரமோ பரலோகத்திலாம்'' என்று இவர் சொல்லக்கூடும். இவர் வாசித்த கடைசிப் புத்தகங்களிலொன்று, பென்சன் என்பவர் எழுதிய 'சேசுவின் சிநேகம்' என்னும் புத்தகமாம். சேசுவின் சிநேகமானது உலக ஆசைகளிலிருந்து இவர் மனதை முழுவதுமே அகற்றி சர்வேசுரனுக்குத் தன்னை முழுவதும் நேர்ந்துகொள்ள இவர் ஆவலைத் தூண்டியது. சேசு சபையில் துணைச்சகோதரராய்ச் சேர்ந்து மரிப்பதற்கு அவருக்குள்ள ஆசையை ஏற்கனவே கண்டுளோம். சிரேஷ்டர்கள் உத்தரவு கொடுக்கும்பட்சத்தில் அப்படிச் சந்நியாசியாராகச் சேர்ந்து அச்சபையில் பிரயோஜனமாயிருக்கும்படியாகவே மருந்து வகைகளைப் படித்துக்கொண்டிருந்தார். இவ்விஷயத்தில் சிரேஷ்டர்கள் சம்மதம் மாத்திரம் போதாது; வேறு உத்தரவுகளும் வேண்டியிருந்தன. ஓர்நாள் ஓர் குருவானவர் சிரித்துக்கொண்டு "மகாதேவய்யரோ, நீர் சந்நியாசியாராகி பிறனைக்

குணப்படுத்துமுன்னரோ உமது மனைவியைக் கொன்றுவிட்டல்லவா வரவேண்டும்; இது சிலவேளை அவளுக்கும் பிரியமிராது'' என்று தமாஷாய்ச் சொல்ல, இருவரும் குலுங்க நகைத்தார்கள். பேச்சு அத்தோடு முடிந்துபோனது.

சந்நியாசியாராக முடியாவிடினும் வேலையைவிட்டு நீங்கின பின் வீணே காலத்தைப் போக்கியிருக்கமாட்டார். அவர் பத்தியானது பிறர்சிநேகத்தோடு ஒன்றித்தது. மேரிஸ் தோப்புக்கு வடமேற்கு மூலையில் கொஞ்சம் நிலம் வாங்கி, ஓர் பெரிய விசாலமும் விஸ்தாரமுமான வீடுகட்டத் தொடங்கினர். இது எதற்கு என்று கேட்டவர்களுக்கு ஓர் சிறிய வைத்தியசாலை வைப்பதற்கு என்று பதிலளித்தார். இவருடைய ஆத்துமத்தின் இரகசியத்தை அறிந்தவர்களுக்கு, இலவசமாய் வியாதிஸ்தருக்கு மருந்து கொடுத்து அவர்களுடைய சரீர வியாதியைப் போக்கி, அவர்கள் ஆத்தும நோயையும் குணப்படுத்த வேண்டுமென்னும் நோக்கத்தோடு இவ்வீட்டை அய்யரவர்கள் கட்டுவதாகத் தெரியும். அவர் நல்லெண்ணமே சர்வேசுரனுக்குப் போதுமான திருப்தியைக் கொடுத்தது.

12-ம் அதிகாரம்.

முடிவு.

சர்வேசுரனுக்குப் பிரியமானவர்கள், சாவதற்கு முன்னல் அபரிமிதமாய் வரப்பிரசாதங்களை அடைகிறார்களென்று சொல்லிக் கொள்ளுவார்கள். மகாதேவய்யருக்கும் இதுதான் சம்பவித்தது. வெளிப்பார்வைக்கு அவர் நல்ல சௌக்கியமாகவேயிருந்தார்; புண்ணியத்தில் அவரடைந்த விர்த்திப்புத்தான் அவருடைய அந்தியகாலம் நெருங்கி வருவதாகக் காட்டியது. அவரோடு வசித்துவந்தவர்கள், சாவதற்குமுன் இருவருஷமாய் அவரிடத்தில் பெரிய மாற்றமுண்டானதென்று உணர்ந்தார்கள். அதிகநேரம் ஜெபத்தில் செலவழித்தார்; அவசியமில்லாதவைகளை விட்டொழித்தார்; சிறு விஷயங்களில் பற்பல தபமுயற்சிகளைச் செய்து வந்தார்; அவருடைய பிரிய மனைவியும் பிள்ளைகளும் இவைகளைக்

கவனிக்காமலிருக்கவில்லை. அவருடைய மனச்சாட்சி நாளுக்கு நாள் அதிக கூர்மையும் நுட்பமுமானது. தினந்தோறும் திவ்விய நன்மை வாங்கிவந்தாலும் வாரத்தில் பலதரம் பாவசங்கீர்த்தனஞ் செய்வார். இன்னும் கொஞ்சநாள் சீவித்திருந்திருப்பாரோயாகில், வீண் சந்தேகங்களால் வாதிக்கப்பட்டிருந்திருக்கலாம். பிள்ளைகள்மேலும், பேரப்பிள்ளைகள்மேலும் நாளுக்குநாள் அதிக பட்சம் காண்பித்தார். அவர் மடியில் ஒரு பிள்ளை, கையில் ஒரு பிள்ளை இருக்க, மற்றப்பிள்ளைகள் சுற்றிநிற்க, ஞானோபதேசமோ, சிறு பத்தியுள்ள கதைகளோ அவர்களுக்குச் சொல்லிக்கொண்டிருப்பார். இப்பிள்ளைகள் மத்தியில் இவருக்கு வெகு சந்தோஷம். இப்பிள்ளைகளோடு இராச்செபம் செய்தபின், ஞானபுத்தகங்களை எடுத்து வெகுநேரம் வாசித்துக்கொண்டேயிருப்பார்; வாசித்த படியே தூங்கிவிடுவார்.

1923-ஸ் ஒக்டோபர்-மீ 8-ம்வ மகாதேவய்யரோடு அவருடைய பழைய சிநேகிதர்களில் ஒருவர், வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தபின், கத்தோலிக் வேதத்தின் உண்மையை அறியும்பட்சத்தில் கத்தோலிக்கனுகிவிடுவதாகச் சொன்னர். அய்யரவர்கள், சாயங்காலம் கலாசாலையிலுள்ள ஓர் குருவானவரிடத்தில் அவரைக் கொண்டுபோய்விட்டார். அப்போது சிரித்தமுகமாய் நல்ல சௌக்கியமாய்த்தானிருந்தார். ஞாயிற்றுக்கிழமை காலை வழக்கம்போல் பூசைக்கு வந்து திவ்வியநன்மை வாங்கி வெகுநேரம் கோவிலிலிருந்தார். காலை 10-மணிக்கு தோப்பிலேயே கொடுக்கும் ஞானபோதகத்துக்குப் போயிருந்தார். சாயங்காலம் ஆசீர்வாதம் முடிந்தவுடன் வீடுவந்து வெகுநேரம் பேரப்பிள்ளைகளுக்கு ஞானோபதேசம் முதலியவை சொல்லிக்கொடுத்துக்கொண்டிருந்தார். வழக்கம்போல் இராப்போஜனம் சாப்பிட்டுவிட்டு,லாரென்ஸ் என்னும் பேரப்பிள்ளையைக் கூட்டிக்கொண்டு மெத்தைக்குப்போய் வேதாகமத்தை எடுத்து 11-மணி வரை வாசித்துக்கொண்டிருந்த பின், தரையிலிருந்த பாயில் படுத்தார். காலை சுமார் 2-மணிக்கு அறையின் கடைசியிலிருந்த தன் மனைவியை அழைத்து தன்னருகிலிருந்த விளக்கை எடுத்துக்கொண்டு போகும்படி சொன்னர். அவள் அப்படியே செய்தாள். கொஞ்சநேரத்துக்குள் ஏதோ

நெஞ்சை அடைத்துக்கொண்டதுபோல் மேல்மூச்சு கீழ்மூச்சு விடுவதைக்கேட்டு, ஓடிப்போய்ப் பார்க்க, அவர் கடைசி வேதனைப்படுவதாகக் கண்டாள். பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் சத்தத்தைக்கேட்டு ஓடிவர, உயிர்போனது. உடனே ஒரு பையன் துவிசக்கர வண்டியேறி கலாசாலை சென்று குருவானவரை அழைத்துவர அவரும் சந்தேக அவஸ்தைப்பூசுதல் கொடுத்தார்.

மகாதேவய்யருடைய மரணத்தைக் கேட்டவுடன் யாவரும் கொண்ட துக்கத்தையும் ஆச்சரியத்தையும் இங்கு சொல்லிமுடியாது. நூற்றுக்கு மேலான கடிதங்களும் தந்திகளும் வந்தன.

வந்த கடிதங்களில் சிலவற்றின் சாராம்சத்தை இங்கு எடுத்துக் கூறுகின்றோம்: இந்து கனவான் ஒருவர் "இந்துக்களாயிருந்து கிறீஸ்துவர்களாகப்போனவர்களையும், இப்படி மனந்திரும்புதலையும் கொஞ்சமேனும் மதிக்காத காலத்தில் மகாதேவய்யர் மனந்திரும்பினபோதிலும், தன் புதுமதத்தை யாவருக்கும் துலக்கமாய்க் காட்டத் துணிந்துநின்ற பெரிய தைரியசாலி இவர். கத்தோலிக் கிறீஸ்துவனானாலும் தனது ஜாதி ஆசாரங்களை அநுசரிப்பதற்கு யாதொரு தடையில்லையென்று தென் இந்தியா முழுவதுக்குமே காட்டலானார்" என்றெழுதினார். இன்னொருவர் "மகாதேவய்யர் மரணத்தைக் கேள்வியுற்று மிகவும் விசனிக்கிறேன்; மற்றவர்கள் என்ன மதத்தினர்களாயினும், அவர்களுக்கு சகல உதவி புரிவதும் அவருக்குப் பெருஞ் சந்தோஷமாம்" என்றார். பெரிய உத்தியோகத்திலுள்ள வேறொரு இந்து மகான் எழுதினார் "தான் உயிரோடு விசுவசித்து தன் நம்பிக்கையெல்லாம் வைத்திருந்த ஆண்டவைக்காக ஓர் வேதசாட்சியைப்போலே பலவித துன்பங்களையும் துரிதங்களையும் பொறுமையோடும் உற்சாகத்தோடும் அநுபவித்து, அவருக்குவேண்டி பட்ட கஷ்டங்களுக்கெல்லாம் தான் சம்பாதித்துவைத்த வெகுமதியையடைய, வானுலகம் அய்யரவர்கள் சென்றுவிட்டனர். அவருடைய பெருந்தன்மையையும் நல்ல இருதயத்தையும் அறிந்து அவரோடு பழகிவந்தவர்கள் யாவருக்கும் அவர் மாதிரிகையானது நல்ல வழிகளில்

சந்தோஷமாய் நடக்கத்தூண்டி, தைரியத்தைக் கொடுக்குமென்பதற்கு ஐயமில்லை" என்பதாம்.

இல்லறத்திலிருக்கும் கிறீஸ்துவர்கள் அநேகர் எழுதினார்கள். ஓர் முதன்மையான கத்தோலிக்கர் எழுதினதை மாத்திரம் இங்கு சொல்வோம். "அவர் எங்கள் எல்லோருக்கும் ஓர் உண்மையான சிநேகிதர்; யாவருக்கும் மேல்வரிச் சட்டம்போன்ற, ஓர் நல்ல கத்தோலிக் கிறீஸ்துவர். இவரைப்போன்ற நல்ல கத்தோலிக்கர் இன்னும் சிலர் இருப்பார்களேயாகில், இந்தியா முழுவதும் சீக்கிரம் மனந்திரும்பும் என்று அநேகந்தரம் என் சிநேகிதர்களுக்குச் சொல்லியிருக்கிறேன்." கன்னியர்களில் ஒருவர் எழுதினதாவது: "தன்னையே ஒறுத்தலும், ஆத்தும இரட்சண்ணிய ஆவலும், சர்வேசுரன்மேலும், விசேஷமாய் தேவநற்கருணையில் இருக்கும் சேசுவின்மேலும் அவருக்குள்ள உருக்கமான சிநேகமும், எளியவர்களுக்கும் மற்றவர்களுக்கும் அவர் காட்டிவந்த பிறர்சிநேகமும், அவருடைய பரிசுத்த ஜீவியத்தில் முக்கியமானவை. அவரோடு பேச எனக்குச் சமயம் வாய்த்தபோதெல்லாம், அவர் எப்போதும் வாசித்துவந்த அர்ச்சியசிஷ்டவர்களின் சரிதையிலிருந்து அநேக இன்பமான சம்பவங்களை அவர் எனக்குச் சொல்லிவருவார்; அவைகள் ஒருபோதும் என் புத்தியைவிட்டு அகலா." ஓர் குருவானவர் எழுதினார்: "மகாதேவய்யர் உத்தம கத்தோலிக்கரின் உருவாம், நான் அவரை எவ்வளவுக்கு நேசித்தேனோ, அவ்வளவுக்கு அவரை மதித்து மரியாதை செய்துவந்தேன். அவருடைய விசுவாசம் உயிருள்ளது, நாலாபக்கமும் தாவும் விசுவாசம்; அவருக்குரிய ஆத்தும இரட்சண்ணிய ஆவல் மெய்யானது, கரையில்லாதது; அவர் பிறர்மேல் வைத்த நேசமும், தன்னைத் தானே நாடாதது, யாவருக்குப் பிரியங்கொடுப்பது; அவருடைய தாழ்ச்சி நேர்மையானது ஆழமானது. அவருக்காக வேண்டிக்கொள்வதா, அவரைப்பார்த்து வேண்டிக்கொள்வதா, என்று எனக்குத் தெரியவில்லை......" என்றார்.

இவர் மகா நல்லவரானபடியால், யாதொரு வாதனையின்றி மரித்தாரென்று இவருடைய இந்த நண்பர்கள் சொன்னார்கள்.

திடீரென்று இப்படி மரணமடைந்தது ஓர் விசேஷ வரப்பிரசாதம், அல்லாவிடில் இவர் மனச்சாட்சி வெகு கூர்மையாயிருந்தபடியால் கடைசிநேரத்தில் வீண்பயம் வந்து வாதித்திருக்கலாமென்று பல கிறீஸ்துவ சிநேகிதர்கள் சொன்னார்கள். மரணம் திடீரென்று வந்தபோதிலும், மரிக்க இவர் சர்வ தயாராயிருந்தாரென்று எல்லோருமே சொல்லலானார்கள். இவருடைய அடக்கமோ ஓர் கொண்டாட்டமே, உலக இரட்சகர் கோவிலில் இருந்த இவருடைய உடன் சபையார் இவருடைய சரீரம் அவர்களுடைய கோவிலுக்குக் கொண்டுவரப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அங்கே இப்போது தூத்துக்குடி மேற்றிராணியாரான பிதா வந். பிரான்சீஸ் திபூர்சியுஸ் ரோச்சு ஆண்டவர்வர்கள் மரித்தவருடைய புகழ்ச்சியை யாவரும் கண்கலங்க சுருக்கமாய் எடுத்துக்கூறிய பின், ஆடம்பரமாய் பொறுத்தல் கொடுக்கப்பட்டது.

இவரது கல்லறையின்மேல் வைக்கப்பட்ட கல்லின்மேல் எழுதப்பட்ட வசனங்களாவன:

நீதியினிமித்தம் உபத்திரவப்படுகிறவர்கள் பாக்கியவான்கள். ஏனெனில் மோட்ச இராச்சியம் அவர்களுடையது.
(மத். 5 அதி. 10.)

சிநேகத்தில் நிலைத்திருக்கிறவன் சர்வேசுரனிடத்தில் நிலைத்திருக்கிறன்; சர்வேசுரனும் அவனிடத்தில் நிலைத்திருக்கிறர்.
(1 அரு. 4 அதி. 16.)

சேசுவின் திருநாமம் வாழ்த்தப்படக்கடவதாக!

இந்திய கத்தோலிக் சத்யாபிமான சபை.

(தமிழ்ப் பகுதி.)

பிரசுரங்கள்.

		ரூ.	அ.	பை.
1.	தேவோக்தம்	0	0	9
2.	அற்புதங்கள் அல்லது புதுமைகள்	0	0	9
3.	அர்ச்சியசிஷ்ட பண்டங்களின் வணக்கம் ...	0	0	9
4	கிறீஸ்துநாதரின் பிரதிநிதி I & II	0	2	0
	வேதாகமத்தின் வியாக்கியான சுதந்தரம் ...	0	0	9
6.	சிறிய புஷ்பத்தின் சுகந்த வாசனை I & II ...	0	2	0
7.	ப யீனி அல்லது தன்வினை தன்னைச்சுடும் ...	0	2	0
8.	அ ஞ்ஞேயம்...	0	2	0
9.	ாய் மானிடரின் தாய்	0	2	0
10.	சுக்கிறீஸ்துநாதருடைய ஜீவிய சரித்திரம் I & II.	0	5	0
11.	இந்தியாவின் மக்களே! இந்தியாவிற்கு இரக்ஷண்யத்தைக் கொண்டுவாருங்கள். (முதற்பாகம்)	0	1	0
12.	கத்தோலிக்கன் பதிதன் ஆவது புத்திக்கொவ்வாத விஷயம்	0	2	0
13.	வேதசாஸ்திர சங்கிரகம் I & II	0	1	0
14.	அர்ச். ஸ்நாபக அருளப்பர் நாடகம்	0	1	0
15.	ஜென்மப்பாவம்	0	1	0
16.	சுடரொளிக்கதிர்கள் I, II, III & IV ... (நூறு) ...	1	0	6
	ஷை V ... ... (நூறு) ...	3	0	0
17.	கும்பகோண மேற்றிராசனத்தைச் சேர்ந்த சங். தேவசகாயநாதர்சுவாமியார் சரித்திர சுருக்கம்..	0	2	0
18.	அறநெறிமார்க்கம் மனிதனின் அதிமுக்கிய அலுவல்..	0	12	0
19.	தேவ அழைத்தல் என்பது யாது	0	1	0
20.	கத்தோலிக்கரும் காலக்ஷேபங்களும் (முதற்பாகம்.)	0	1	0
21.	இந்து தேசத்தில் சத்திய திருச்சபை ...	0	1	0
22.	நசரேத்தின் காட்சி	0	1	0
23.	தர்ம இஷ்ட உபதேசிமார்களின் சபை ...	0	0	6
24	வியாதிக்காரரை விசாரிப்போரின் சபை ...	0	0	6
25.	அன்பின் ஊற்று	0	0	6
26.	தேவமாதாவின் மந்திரமாலை	0	0	6
27.	"நற்கருணை வீரர்" சபையில் சேரும் பத்திரம் (K. B. S. Diplomas in Tamil) 100 காப்பிகள் ...	2	8	0
28.	"திவ்விய சற்பிரசாத பணிவிடை பாலகிகள்" சபையில் சேரும் பத்திரம்			
29.	(H. B. S. Diplomas in Tamil) 100 காப்பிகள் ...	2	8	0

சத்திய வேத தர்க்கத் துண்டுப் புத்தகங்கள்.

		ரூ.	அ.	பை
1.	ஆத்துமம்	0	0	6
2.	இராசபாதை	0	0	6
3.	ஒரு பெருங்கடமை	0	0	6
4.	கடவுளிலட்சணம்	0	0	6
5.	சற்குரு	0	0	6
6.	விக்கிரகாராதனையும், சுரூப வணக்கமும்	0	1	3
7.	உலக உற்பத்தி	0	2	0
8.	சைவர் ஆட்சேப சமாதானம் ...	0	3	3
9.	பரிபூரண வஸ்து	0	2	0
10.	மறுபிறப்பு ஆட்சேபம்	0	3	6
11.	கிறீஸ்துநாதரின் கடவுட்டன்மை ...	0	3	3
12.	ஈடேற்ற வழி	0	2	3
13.	புதுச்சைவம்	0	2	0
14.	மிருகபலி ஆராய்ச்சி	0	2	6
15.	பிள்ளையார் சரித்திர ஆராய்ச்சி ...	0	2	6
16.	சுப்பிரமணிய சரித்திர ஆராய்ச்சி ...	0	3	6
17.	ஆதிகாலத்துப் பாப்புமார் சரித்திர சங்கிரகம் ...	0	5	0
18.	The Glorious Privileges of B. V.M. மரியாயின் வரோதயம் ...	0	4	0

A. JEGANATHAM, *Hon. Secretary, I. C. T. S.,*
Cantt., Trichinopoly.

பள்ளி மாணவருக்கேற்ற சில உபயோகமான புத்தகங்கள்.

சிறுவரின் தோழன் (சிறுவர்க்கேற்ற ஜெபப் புத்தகம்)	0—2—0
சேசுவின் நேச சிஷன் (சேசுவோடு பேசும் வகை)	0—0—6
நேச மலர்க்கொத்து (பாளையங்கோட்டைக் கீர்த்தனைப் புத்தகம்)	0—9—0
புது விதிகள் (தேவதாயின் சபை, ஒழுங்குகள், மந்திரமாலை, ஜெபங்கள், நாநாவிதக் கீர்த்தனைகள்)	0—6—0
ஜென்மப்பாவம்	0—1—0
குருப் பட்டாபிஷேகத் திருச்சடங்கு ...	0—3—0
ஜெப அப்போஸ்தலச சல்லாபங்கள் ...	0—2—6

திருச்சி அர்ச். சூசையப்பர் அச்சுக்கூடம் மானேஜருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.